www.tamilarangam.net

# களத்தில்

> விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை.இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்ல வேண்டும்.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 விடை 29 (12.06. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p

# ஆக்கிரமிப்பை நிறுத்து! படைகளை விலக்கு!

# இயல்பான வாழ்வுக்கு எங்களை அனுமதி!!

## நெருக்கடியால் நெருப்பாய் எழுகிறது வெகுசனப் போர்

**சந்திரிகா அரசு யாழ். குடாநாட்டில் நடத்தியுள்ள "மக்கள் மீதான முற்றுகை" தமிழீழ மக்களை நெருப்பாக மாற்றிக் கொண்டிருக்கிறது.**

வணபிதா. பிரான்சிஸ் யோசப் அடிகள் தலைமையில், வன்னிப் பெருநிலத்து பள்ளிச் சிறுவர்க்கு படிப்புக்கான வசதிகளைத் திட்டமிட்டு மறுக்கும் சந்திரிகா அரசுக்கு எதிரான தமிழீழ மக்களின் வெகுசன அமைப்புக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியையும் கண்டனக் கூட்டத்தையும் கிளிநொச்சியில் நடாத்தின. அணி அணியாகத் திரண்டு வந்த மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் சந்திரிகா அரசு மீது கொண்டு விட்ட வெறுப்புக்கள் சுலோகங்களாக, கோசங்களாக வெடித்தன. "தெற்கிற்கு கல்வியில் ஒரு நீதி, வடக்கு–கிழக்கிற்கு படு அநீதி. இதுதான் சிங்கள சிறிலங்காவின் நிரந்தரக் கொள்கை. அதனை போர்ச்சூழ்நிலைகளைச் சாட்டாக வைத்து மேலும் மோசமாக்குவதே சந்திரிகா அரசின் தந்திரச் சதி. அப்பியாசப் புத்தகமும், பாடப் புத்தகமும் வழங்க மறுக்கும் சந்திரிகாவால் இவை போரை எப்படித் தீவிரப்படுத்தும் எனப் பதில் கூற முடியுமா?" என்பதே தமிழ் மக்களின் கேள்வியாக உள்ளது.

### உணவு வழங்க மறுப்பு நிதி உதவி பெற முயற்சி

இது ஒரு புறமிருக்க, இடம் பெயர்ந்த மக்களுக்குத் தேவையான இருப்பிடத்தைக் குடிசையாகக் கூட அமைக்கவும் சிறிலங்காவின் பொருண்மியத்தடையால் உள்ளூர் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் தடைப்படுகின்றன. மேலும், வன்னிப் பெருநிலத்தில் சென்ற ஆண்டு மாரி மழை சீராக இல்லாததினால் உணவு உற்பத்தி மேலும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய, லொறிகள் மூலம் உணவு அனுப்புவதாகச் சிறிலங்கா கூறியது. ஆனால், சிறிலங்கா இராணுவத்தின்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...





- தாயகம் நோக்கிய பயணம்...
- மீட்பு (சிறுகதை)
- நெஞ்சை விட்டகலாத...
- எத்தனை எத்தனை ...
- 900 நாட்கள் முற்றுகை ...
- பல்லி சொன்னது...
- இமாலயப் பொய்யும் இனப்படுகொலை....
- வாழ்வதற்கான போர்...
- மனங்களை வெல்லும்...

உள்ளே... ☞


## தமிழீழம் எங்கும் தொடர் அதிரடி! ஆக்கிரமிப்பு இராணுவம் திணறுகிறது

தென் தமிழீழத்திலும் இராணுவம் ஆக்கிரமித்த யாழ். குடாநாட்டுப் பகுதியிலும், சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான பல்முனைப் பதிலடிகள், விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஒரு வாரத்தினுள் மட்டும் 80க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்புப் படையினர் விடுதலைப் புலிகளினால் அழித்தொழிக்கப்பட்டுள்ளனர். தமிழீழ மக்களின் விடுதலைப் போரினை அழித்துவிடும் நோக்குடன் அகலக் கால் பதித்த சிறிலங்கா இராணுவம், விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட தாக்குதல்களில் சிக்குண்டு திண்டாடும் நிலை தோற்றம்பெற்று வருகின்றது.

07–06–96 அன்று காலை 7.45 மணிக்கு, மனித வேட்டைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த சிறிலங்காப் பொலிஸ் அணியொன்று மட்டக்களப்பின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள வெலிகந்தை எனுமிடத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது.

மிகவும் துணிகரமாக அதிவேகத்துடன் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 11 பொலிசார் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் மேலும் 7 பேர் பின்னர் வைத்தியசாலையில் இறந்துள்ளனர். இத் தாக்குதல் நடந்து கொண்டிருந்த வேளையில் அண்மையிலிருந்த வெலிகந்தை

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## "வரலாற்று அழிவை சந்திக்கப் போகும் சிறிலங்கா இராணுவம்"

**அரசியற்றுறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன்**

"யாழ்.குடாநாட்டில், பொறியில் சிக்கியவர்களாக, வரலாற்று அழிவொன்றினை சந்திக்கப்போகும் நெருக்கடி நிலையில் சிறிலங்கா இராணுவம் உள்ளது." இவ்வாறு, விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப்பிரதேசத்தில், அமைக்கப்பட்ட, முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி குடியேற்றத்திட்ட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். "யாழ். குடாநாட்டில் தாம் விரித்த வலைக்குள் சிக்குண்டு திண்டாடும் இராணுவம், தப்பித்துக் கொள்ள முடியாது தவிக்கின்றது. யாழ். குடாநாட்டில் அகலக் கால் பதித்த இராணுவத்திற்கு இது வரலாற்று அழிவாக அமையப் போகின்றது. அத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். மேலும் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் சரிவரப் பயன்படுத்தி வெற்றிகாண வேண்டும். கடுமையான உழைப்பு இதற்கு மிக அவசியம்" என அவர் மேலும் தெரிவித்தார். ✤

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கள அரசுக்கும் சர்வதேசத்திற்கும் புலிகள் விடுக்கும் செய்தி

# படையெடுப்புகள் தீவிரப்பட்டால் சமரசம் நிரந்தரமாக முறியும்!

## நீண்ட போர் நெருக்கடிக்குள் சிங்களப்படை மீள முடியாமல் சிக்கப் போகிறது

படையெடுப்புக்களைக் கைவிட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து தனது படைகளை வெளியேற்றி அரசியற் தீர்வுக்கான சமரசப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யாமல் -

வடபிராந்தியத்தில் தொடர்ந்தும் படையெடுப்புக்களைத் தீவிரப்படுத்தி இராணுவ வழிமுறையில் தீர்வுகாணவே சிங்கள அரசு முனையுமானால், அது பேச்சுவார்த்தைகளுக்கான ஏதுநிலையை நிரந்தரமாகவே பாதிக்கும் என்பதைப் புலிகள் இயக்கம் சொல்லி வைக்க விரும்புகின்றது.

அத்தோடு - வடக்கில் அகலக் கால் வைத்துப் பரவும் சிங்களப் படை தன் நோக்கில் உடனடி வெற்றிகளைப் பெறுகின்றபோதும், எதிர்காலத்தில் பேரழிவுமிக்க தோல்விகளைச் சந்திக்கப் போகின்றது என்பதுவே உண்மையுமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இருபெரும் படையெடுப்புகளை நடாத்திய சிங்களப்படை, அதன் கணிசமான பகுதியை ஆக்கிரமித்துள்ளது. வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டுள்ள இலட்சக்கணக்கான மக்களை, தன்னிடம் விரும்பி வந்தவர்கள் என்று கூறும் சிங்கள அரசு, தான் தமிழ் மக்களின் மனங்களை வென்றுவிட்டதாகப் பிரச்சாரப்படுத்தியும் வருகின்றது.

எனினும் – யாழ்ப்பாணக் கடல் நீரேரியூடாக குடாநாட்டுக்கிருந்த தனியொரு கடற்பாதையையும் கிளாலி இறங்குதுறையையும், தொடர்ந்து எறிகணை மற்றும் வான்படை மூலம் தாக்கி, மக்கள் வெளியேற்றத்தைத் தடுத்துக் கொண்டு நகர்ந்த சிங்களத் துருப்புக்கள், கிளாலி இறங்குதுறைப் பகுதியைக் கைப்பற்றி மக்களைக் குடாநாட்டுக்குள் சிறைப்படுத்தினர் என்பதுவே உண்மையாகும். தப்பித்து வெளியேற முடியாமல் சிக்கிவிட்ட குடாநாட்டு மக்கள், இன்று, விரும்பாவிட்டாலும் விரும்பியவர்களைப் போல சிங்களப்படை நிர்வாகத்துக்குள் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் அகப்பட்டுள்ளனர்.

வலிகாமப் படையெடுப்பின்போது அங்கிருந்து முற்றுமுழுதாக வெளியேறிய தமிழ் மக்கள், தமது அரசியல் நிலைப்பாட்டை உலகிற்கும், சந்திரிகா அரசிற்கும் எடுத்தியம்பினர். பின்னர் குடாநாட்டில் மிகப்பெரும் மனிதச் சங்கிலிப் போராட்டமொன்றை நடாத்திய தமிழ் மக்கள், "சமாதானத்துக்கான போர்" என்ற சந்திரிகாவின் ஆக்கிரமிப்புக் கோட்பாட்டை நிராகரித்து, தமது சுயகருத்தையும் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினர். ஆனாலும், இப்போது ஆக்கிரமிப்புப் படையெடுப்பை நடாத்திய சந்திரிகா அரசு, குடாநாட்டு மக்களைச் சிறைப்பிடித்து, தனது நிர்வாகத்தின் கீழ் வாழக் காட்டாயப்படுத்தியுள்ளது.

இதே சமயத்தில் –

ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களிலிருந்து படைத்துருப்புக்களை வெளியேற்றி, இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தம் சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேறி 'இயல்பு வாழ்வை' ஆரம்பிக்கக்கூடிய ஏதுநிலையை உருவாக்கினால் மட்டுமே, சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஏற்பாடு செய்யப்படும் சமரசப் பேச்சுவார்த்தைகளில் தான் கலந்து கொள்ள முடியும் என, வலிகாமம் ஆக்கிரமிக்கப்பட்ட போதே புலிகள் இயக்கம் அறிவித்துவிட்டது. ஆனால், அதன்பின்பும் தென்மராட்சியூடாக மேற்கொள்ளப்பட்ட குடாநாட்டுப் படையெடுப்பானது, சமாதானப் பேச்சுக்களுக்கான வாய்ப்புக்களை மேலும் கேள்விக்குரியதாக்கிவிட்டது.

இந்த நிலையில் – அடுத்த கட்டமாக வன்னிப் பெருநிலப்பரப்பு மீதான படையெடுப்புக்கும் சிங்களப் படைகள் தயாராகி வருகின்றன.

தொடர் நடவடிக்கைப் போர் முறைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக அது ஆரம்பிக்கப்படவிருப்பதாக, சிங்களத் தரைப்படையின் புதிய தளபதி லெப். ஜெனரல் றொகான் டி. எஸ். தளுவத்த தனது பதவியேற்பு உரையின்போது கூறியும்விட்டார். இதிலிருந்து, தொடர்ந்தும் படை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதிலேயே சிங்களத்தரப்பு முழு அக்கறை செலுத்துவதாகவே அறிய முடிகிறது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையைக் கையாண்டு தீர்வு காணும் மூலோபாயத்தையே, சந்திரிகா அரசு நடைமுறைப்படுத்த முடிவெடுத்துவிட்டதெனில், அது – சமரச வழிகளில் அரசியற் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளையே நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை எடுத்துக்கூறும் புலிகள் இயக்கம் –

வடக்கில் நிலப்பரப்புக்களைப் பிடித்து நகரும் சிங்களப்படைகள், உடனடி வெற்றிகளைப் பெற்று அகலக் கால்வைத்து நிலைகொள்ளும்போதும், நீண்ட போர் நெருக்கடிக்குள் சிக்கி, எதிர்காலத்தில் மீள முடியாத பேரழிவுமிக்க படுதோல்விகளைச் சந்திக்கப் போகின்றன என்பதையும், சொல்லி வைக்க விரும்புகின்றது. ♣

## தமிழீழம் எங்கும் தொடர் அதிரடி...

இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு விரைந்த இராணுவத்தினரை எதிர்கொண்ட விடுதலைப் புலிகளின் பிறிதொரு அணியினருக்கும் இடையில் பலத்த மோதல் ஏற்பட்டது. இதன்போது இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் அறியப்படவில்லை. வெற்றிகரமாக நடத்தப்பட்ட இவ் அதிரடித் தாக்குதலின்போது,

வீரவேங்கை பிரதீப்ராஜ் (செல்வரட்ணம் செல்வநாயகம், மட்டக்களப்பு),

வீரவேங்கை யோகதீபன் (மார்க்கண்டு தர்மலிங்கம், மட்டக்களப்பு) வீரச்சாவடைந்துள்ளனர். பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ரி–56 ரக துப்பாக்கிகள் –9

ரி–84 ரக துப்பாக்கிகள் –2

தொலைத் தொடர்பு சாதனம் –1

இத்துடன் இதற்கான பெருமளவு ரவைகளும், ரவைக் கூடுகளும் கைப்பற்றப்பட்டன.

### இரண்டு நாட்களுக்குள் மற்றுமொரு அதிரடி

இத் தாக்குதல் நடைபெற்று இரண்டு நாட்களுக்குள், அதாவது 09–06–96 அன்று அதிகாலை 6மணிக்கு, வெலிகந்தைக்கு அண்மையிலுள்ள ஜெயந்திஜய என்னுமிடத்தில் வைத்து இவ் இரண்டாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ரோந்து சென்றுவிட்டு முகாம் திரும்பிய இராணுவ அணியே விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது. வெற்றிகரமான இவ் அதிரடியில் ஒரு அதிகாரி உட்பட 17 இராணுவத்தினர் அவ்விடத்திலேயே உயிரை விட்டனர். நான்கு பேர் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலில் 3 விடுதலை வேங்கைகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

கப்டன் லக்சுமனன்

2ஆம் லெப் ரஜீந்தன் (கணேசன் கஜேந்திரன், மட்டக்களப்பு)

வீரவேங்கை மனோகரன் (கந்தையா சந்திரபாலன், மட்டக்களப்பு)

இதன்போது பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஏ.கே. எல்.எம்.ஜி– 1

பி.கே. எல்.எம்.ஜி–1

ரி–56 ரக துப்பாக்கி –7

ரி–81 ரக துப்பாக்கி –1

கைக்குண்டுகள் –113.

பரா வெளிச்சக் குண்டு –1

இத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட துப்பாக்கிகளுக்கான பெருந்தொகை ரவைகளும், ரவைக் கூடுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தாய்த் திருநாட்டை, ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுக்க, களமாடி அந்த மண்ணிலேயே விதையாகி வீழ்ந்த இவ் வீரவேங்கைகளுக்கு, விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

மூன்று நாட்களுக்குள் கிழக்கில் ஒரே பகுதியில் நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட படையினரை இழந்ததுடன் மட்டுமல்லாமல் பெருமளவு ஆயுதங்களையும், விடுதலைப் புலிகளிடம் இழந்தது குறித்து சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும், சூடான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றதாகவும் அறியப்படுகின்றது. ஏனெனில் கிழக்கில் மட்டுமல்ல, வடக்கிலும் குறிப்பாக யாழ். குடாநாட்டில் இராணுவம் ஒவ்வொரு நாளும் தமது சிப்பாய்களை இழந்து வருகிறது. ஒரு வார காலத்தினுள் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 35க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளன[ர்]. இவ்வாறான இழப்புக்கள், யா[ழ்]. குடாநாட்டை தமது பூரண கட்டுப்பாட்டிக்குள் வைத்தி[ரு]க்கிறோம் என செய்தித் தொடர்[பு] சாதனங்களுக்கு தினந்தோறு[ம்] செய்தி வழங்கும் சிறிலங்[கா] அரசிற்கு முகத்தில் கரிபூசியுள்ள[து] மாத்திரமல்ல, ஆக்கிரமிக்கப்பட்[ட] பகுதிகளில் உள்ள படையின[ர்] மத்தியில் உளவியல் ரீதியான ஓ[ர்] மனக்கிலேசத்தையும் ஏற்ப[டு]த்தியுள்ளதுடன், விடுதலை[ப்] புலிகளின் இராணுவத் தந்திரோபா[ய]த்தையும் கோடு காட்டி நிற்கின்றது[.]

## ஆக்கிரமிப்பை நிறுத்து...

சிறிலங்கா இராணுவத்தின் அங்கமாக நிற்கும் தமிழ்த் தேசத் துரோகக் கும்பல்கள் உணவுகளை ஏற்றி வந்த லொறிகளுக்குக் கப்பம் கேட்டதினால் ஏற்பட்ட நெருக்கடியால் லொறிகள் தாண்டிக்குளத்திலேயே நின்றுவிட்டன. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், உணவுக் கையிருப்பு குறைந்து வருவதாகப் பலமுறை சிறிலங்காவிடம் முறையிட்டும் பலனின்றி உணவு நிலை மோசமடைகின்றது. கிளிநொச்சி அரச அதிபர் நேரடியாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைச் சந்திக்கக் கொழும்பு சென்றும் பலனில்லை. பட்டினியின் மிக மோசமான விளைவாக ஒரு சிறுமி உயிர் இழந்த சோகச் சம்பவமும் வரலாறு ஆகியுள்ளது. உடமைகள், உழைப்பு எல்லாவற்றையும் இழந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வழங்க மறுக்கும் சிறிலங்கா, வடபகுதி மக்களின் நிவாரணத்துக்கென பெருமளவு சர்வதேச உதவிகளைப் பெற்று அதனை இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கும் சிங்கள தேசத்தின் அபிவிருத்திக்கும் கைமாற்றி வருகிறது.

### இயல்பான வாழ்வே அமைதிக்கு வழி காட்டும்

சிறிலங்காவின் அராஜகத்தால் வயிற்றில் பசியும், உடலில் பலவீனமும் அடைந்து வரும் மக்களின் கல்வி வளத்தையும் சீரழிக்க, சிறிலங்கா சகல விதமான முயற்சிகளையும் செய்வதினால் மக்கள் நெருப்பாகி, "ஆக்கிரமிப்பை நிறுத்து! படைகளை விலக்கு! எமது இயல்பான வாழ்வினை அனுமதி!" என, சிறிலங்கா மேல் வெகுசனப் போராட்டங்கள் மூலம் நெருக்குதல்களை ஏற்படுத்தி வருகின்றனர். மக்களின் இந்த நியாயமான கோரிக்கைக்கு ஏற்ப விடுதலைப் புலிகளும், 'ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களிலிருந்து படைத்துருப்புக்களை வெளியேற்றி, இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தம் சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேறி 'இயல்பு வாழ்வை' ஆரம்பிக்கக் கூடிய ஏதுநிலையை உருவாக்கினால் மட்டுமே, சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஏற்பாடு செய்யப்படும் சமரசப் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்து கொள்ள முடியும்" என வலிகாமம் ஆக்கிரமிக்கப்பட்ட நேரத்திலேயே அறிவித்துவிட்டனர்.

### வெகுசன அமைப்பு ஐ. நா.வுக்கு மகஜர்

17.04.96இல் யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஐ. நா. செயலருக்கு அனுப்பிய மகஜரில் "முன்னைய சிங்களத் தலைவர்களைப் போலவே, இப்போதைய சிறிலங்கா சனாதிபதி அவர்களும் தமது கடப்பாடுகளைக் கைவிட்டு, அவர்மீது தமிழ் மக்[கள்] வைத்த நம்பிக்கைகளுக்[கு] துரோகமிழைத்துள்ளார் என்ப[தை] ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்[துக்] கொள்கிறோம். நீதி, நியாயங்களு[க்கு] அமைவான அரசியல் தீர்வுகளை புறந்தள்ளி, இராணுவ வழிமுறை[யில்] பிரச்சினைக்குத் தீர்வு காணு[ம்] முயற்சிகளே மேலோங்கியுள்ள[ன]. தமிழர் தாயகம் மீதான ச[...] இராணுவத் தாக்குதல்களை[...] நிறுத்தி, யாழ். குடாநாட்டில் நி[லை] கொண்டுள்ள இராணுவத் தள[ங்க]ளை விலக்கி, பேச்சுவார்த்தை[கள்] மூலமான தீர்வுக்கு வழிவகுக்[கும்] வகையில் அங்கு மக்கள் செ[ன்று] குடியேற வழி செய்யுமாறு தங்கள[ை] அன்புடன் கேட்டுக் கொள்கிறோ[ம்]" என எழுதியுள்ளனர்.

### செத்துமடி என்பதே கொள்கை

சிங்களவரான கலாநிதி விக்கிரமப[...] கருணாரத்தின, "தமிழ்மக்களி[ன்] எதிர்ப்பை மழுங்கடிப்பதற்காக ய[...] மக்களை ஆடு, மாடுகள் போ[ல] கலைத்து அடிப்பது மிக[...] துக்கமானதொரு விடயமாகு[ம்]. ஆதரவற்றவர்களாக்கப்பட்டுள்ள அ[...] மக்கள், சூழப்பட்ட படையின[ரால்] எத்திசைக்கும் இட்டுச் செல[்ல]ப்படலாம். படையினர் முன்னேறு[ம்] பொழுது விமானப் படையும் கடற்படையும் எல்லாப் பாதை[க]ளையும் அடைத்து தாக்கு[த]ல்களை நடத்துகின்றன. 'செத்துமடி அல்லது 'யாழ்ப்பாணம் [...] என்பதுதான் ஜெனரல் அனுரு[த்த] மக்களுக்குச் சொல்லும் செய்தி[யாக] உள்ளது" என அனுரு[த்த] ரத்வத்தவின் நோக்கைத் தெளி[வு]படுத்தியுள்ளார்.

### பாவம் ஓரிடம் பழி ஓரிட[ம்]

மேலும் மற்றொரு சிங்களவரா[ன] பேர்சி சமரவீர (ஊவா மாகாண முதலமைச்சர்), "சிறிலங்கா தா[ன்] திட்டமிட்டு தமிழின அழிப்பி[ல்] ஈடுபட்டுவிட்டு பின்னர், தமிழர்களி[ன்] எதிர்த்தாக்குதல்கள் ஏற்படு[ம்] என்னும் அச்சத்தில், விடுதலை[ப்] ப்புலிகள் சிங்கள வர்களுக்கு[த்] தொல்லை கொடுப்பதாகக் கூறி[யு]ள்ளார்."

தொடர்ந்[து] கூறுகையில், "தென்னிலங்கையி[ல்] பாடசாலைகள் மூடப்பட நேர்ந்தது விடுதலைப் புலிகள் இயக்கத்தி[ன்] மிரட்டல்களால் அல்ல. படையின[ர்] யாழ்ப்பாணப் பாடசாலையொன்றி[ன்] மீது குண்டு போட்டு [...] பிள்ளைகளுக்கு மரணத்தை விளைவித்துவிட்டு, இத[ன்] காரணமாகத் தமிழீழ விடுதலை[ப்] புலிகள் எதிர்த்தாக்குதல்களை எமது பிள்ளைகளுக்கும் செய்யல[ாம்] என்ற சந்தேகத்திலேயே சிறிலங்[கா] தென்னிலங்கைப் பாடசாலைகளை மூடியது" என உதாரணத்துட[ன்] விளக்கியுள்ளார். ♣

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# உரித்தும் உறவும்

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றிவிட்டால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முறியடித்துவிடலாம் என்ற சந்திரிகா அரசின் கருத்து தவறானது என்பதை, யாழ். குடாநாட்டிலும் தென்தமிழீழத்திலும் வெற்றியோடு தொடரும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள், உலகுக்கு உணர்த்தத் தொடங்கிவிட்டன. தமது காவலரண்களைக் குடாநாட்டின் பல பாகங்களிலும் யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியிலும் சிறிலங்கா இராணுவம், இழக்கத் தொடங்கிவிட்டது. முழு அளவிலான இராணுவ ஆளணிப் பலமும், சுடுதிறன் பலமும் சிங்கள இராணுவத்தால் குடாநாட்டுக்குள் இறக்கப்பட்ட நிலையில், எப்படி இந்திய ஆக்கிரமிப்புப் படையினைப் படிப்படியாகத் தாக்கி, இறுதியில் அதனை வெளியேற்றினார்களோ அத்தகைய தந்திரோபாயத்தை விடுதலைப் புலிகள் செயற்படுத்தி வருகின்றனர். சிறிலங்கா அரசு, யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பை நடாத்தும்போது, தமிழீழ மக்களின் உட்கட்டுமானங்களைச் சிதைக்க வேண்டும் எனும் நோக்கும் சண்டை பலம் அடையும்பொழுது கூடுதலான அளவு இனஅழிப்பை நடாத்தி முடித்துவிடலாம் எனும் நப்பாசையையும் கொண்டிருந்தது. மக்கள் மீது மனித நேயமற்ற முறையில் பொருண்மியத் தடைகளை விதித்து உணவு, மருந்து போன்ற அடிப்படை தேவைகளையும் தொழில் முயற்சிகளையும் தடுத்த சிறிலங்கா, மக்களை மீண்டும் இராணுவ இலக்காகவும் மாற்றி வகைதொகையற்ற வகையில் எறிகணை, குண்டுவீச்சு, சுடுதிறன் பிரயோகம் என்பவற்றுடன் யாழ்ப்பாண மக்கள் மீதான முற்றுகையைத் தொடங்கினர்.

மக்களுக்குப் பேரழிவு ஏற்படாது தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் தமது மையத்தளத்தை, வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கி எவ்வித பாரிய இழப்புகளுமின்றி நகர்த்திவிட்டனர். இதனால் சந்திரிகாவின் உள்நோக்கு சிதறடிக்கப்பட்ட நிலையில், யாழ். குடாநாட்டின் பல பகுதிகளையும் மக்களையும் ஆக்கிரமிப்புச் செய்யும் செயலில் சந்திரிகா அரசு இறங்கியது. அத்துடன் ஆயுதமுனையில் தமிழ் மக்களின் அரசியல் பணிவைப் பெறும் நோக்கில், ஒருபுறம் கடுமையான இராணுவக் காவலைச் சுற்றிவர வைத்துவிட்டு அந்த இராணுவக் கும்பலுள் விழி பிதுங்க வாழும் மக்களுக்கு "அன்பும் ஆதரவும்" அளிப்பது போலவும், மக்கள் இனங்காணக்கூடிய பயத்திலிருந்து விலகிவிட்டது போலவும் பிரச்சாரத் தந்திரங்களில் இறங்கியுள்ளனர்.

இந்நேரத்தில் சிறிலங்காப் படைகளின் ஆயுத அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழும் எமது தாய்மார், தந்தையர்கள், சகோதரங்கள், உறவினர்கள், நண்பர்களினதும் எமது மக்களினதும் உண்மை நிலையினை உலகுக்கு எடுத்துரைக்க வேண்டிய தேவை முன்னுரிமை பெறுகிறது.

எங்கள் ஊரில் உறவுக்காரர்கள் என்று சொல்லுவது இல்லை, உரித்துக்காரர் என்றே சொல்வோம். இதற்கு ஆழமான கருத்து உண்டு. ஒரு குறித்த எல்லைப்பட்ட பிரதேசத்தில் (வீடு, கிராமம், நாடு) கூடி வாழ்வதினாலும் பொதுமையான மொழி கலாச்சார பொருண்மிய முறைமைகளை உருவாக்குவதினாலும் மக்கள் என்ற தகுதியை நம்மவர்கள் வளர்த்து, தேசமக்களாக இயல்பாகவே வாழ்ந்து வந்ததினாலேயே உடன் உரிமையுடன் தொடர்புடைய உரித்து என்ற சொல்லை நாம் பயன்படுத்தினோம். ஆனால் உறவு என்பது சில தொடர்புகளாலும் ஏற்படலாம்.

இந்த உரித்து நாம் எங்கு வாழ்ந்தாலும் கால, இட வர்த்தமானங்களைக் கடந்து எம்முள் எவ்வாறு நிலைபெற்று எம்மை உலகின் பல பாகங்களிலும், தமிழீழத் தேசியத்தின் தொடர்ச்சிகளாக வாழ வைக்கிறதோ – அப்படித்தான் தமிழீழ மக்களுக்கு – தமிழீழத் தேசத்தின் மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தேசிய விடுதலை இயக்கத்தின் மேலும் உள்ள உரித்தை, உடன்உரிமை உணர்வை வெறும் பிரதேசங்களைக் கைப்பற்றுவதினால் மாற்ற முடியாது.

மாறாக யாழ்ப்பாணம் என்பது தமிழீழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் குறிப்பாகத் தமிழகத் தமிழர்களுக்கும் தமிழ்க் கலாச்சாரத்தின் ஒரு குறியீடாகவே உள்ளத்தில் உள்ளது. இதனால்தான் 1972இல் "குடியரசு அரசியல் அமைப்பு" எனும் சட்ட விரோத சிங்கள பௌத்த குடியரசுப் பிரகடனத்தைச் செய்ததன் பின், சந்திரிகாவின் தாயார் 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டை ஆயுத வன்முறைக்கு உள்ளாக்கி அநியாயமாக உயிர்களைப் பறித்து, தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமை மட்டுமல்ல, கலாச்சாரத்தைப் பேணும் உரிமையும் இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் அனுமதிக்கப்படாது என நிரூபித்தபொழுது, தமிழகம் உட்பட முழுத் தமிழ் உலகமும் பொங்கி எழுந்தது. தமிழர்களின் கலாச்சாரச் சின்னமான யாழ். நூலகத்தையும் எரித்த பின்பே 1983 யூலை இனக்கொலையைச் சிறிலங்கா செய்தது. தமிழ் மக்கள் என்பதினால் தமிழீழத் தமிழர்கள் சிறிலங்காவால் தாக்கப்படுவதே, தமிழகம் உட்பட உலகத் தமிழ் இனம் முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்காக அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒருமித்த குரலைக் கொடுக்க வைத்தது. இன்று தமிழர்களின் கலாச்சாரபீடமான யாழ்ப்பாணம், சந்திரிகாவால் முற்றுகை இடப்பட்டுள்ளது. இது முழுத்தமிழர்களினதும் கலாச்சாரத்திற்குச் சிங்கள அரசினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் உள்ளது. எனவேதான், முழுத்தமிழர்களும் ஒருங்கிணைந்து அதனை முறியடிக்க வேண்டும்.

ஆனால் தமிழீழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம், தமிழகத் தமிழர்களின் அரசியல் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தி இந்தியக் கூட்டாட்சிக்குக் குந்தகத்தை ஏற்படுத்தலாம் எனும் இனந்தெரியாத–அர்த்தமற்ற அச்சத்திற்கு இந்திரா காந்தியின் பின் வந்த மத்திய அரசு உட்பட்டது. இதனால் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு உதவவேண்டியவர்களே அதனை அழிக்கும் செயற்பாட்டில் இறங்கி ஆக்கிரமிப்பாளர்களானார்கள். உண்மையில் 1948 முதல் சிறிலங்கா, தமிழீழத் தமிழர்களினை அவர்களது சொந்தத் தாயகத்திலேயே இரண்டாந்தரப் பிரசைகளாகவோ–நாடற்றவர்களாகவோ– மாற்ற எடுத்த முயற்சிகளின் விளைவே, தமிழீழத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை 1975இல் தந்தை செல்வநாயகம் பிரகடனம் செய்யக் காரணமாயிற்று. இத்தகைய ஒரு சூழ்நிலையில் எழுந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், தமிழீழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம், இந்தியக் கூட்டாட்சி அமைப்புக்கு எந்தவிதத் தீங்கையும் ஏற்படுத்தாது. உண்மையில் தமிழீழத் தமிழ் மக்கள், தமிழக மக்களுடன் கொண்டுள்ள இறுக்கமான – கலாச்சார–மொழித் தொடர்புகளால், பிரித்தானிய காலனித்துவ அரசிலும் சிங்களப் பெரும்பான்மை இலங்கை அரசிலும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் சந்தேகங்கள் சிக்கல்களுக்கு உள்ளாகவும் நேரிட்டமை வரலாறு. எனவே இந்திய மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும், தமிழீழத் தமிழர்களுடன் உள்ள உண்மை உறவை எடைபோட்டு, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து – தமிழீழ மக்கள் அமைதியும் பாதுகாப்புமான சூழ்நிலையில் வாழ்வதற்கு– உதவ வேண்டிய கடமை உண்டு. இதுவே தென்னாசியாவில் நிரந்தர அமைதி ஏற்பட வழிவகுக்கும். இதனை அவர்கள் அலட்சியம் செய்து பிராந்திய வல்லாண்மைப் போக்கைக் கடைப்பிடிப்பார்களேயானால் அனைத்துலக சமூகம், தமிழ் மக்கள் அனைத்துச் சமூகத்துடன் மக்கள் என்ற முறையில் கொண்டுள்ள உறவின் அடிப்படையில் தமிழீழ மக்களுக்கு உதவ வேண்டிய தேவை ஏற்படும்.

எனவே உரித்துக்காரர் என்றமுறையில், தமிழீழ மக்களாகிய நாம் மதியும், நிதியும், புதுப்பலமும் எங்கள் தமிழீழ மக்களுக்கு அளிப்போம். உறவுக்காரர் என்ற முறையில் தமிழகம் உட்பட அனைத்துலகத் தமிழர்களும் இதில் இணைய வேண்டும். எந்தவொரு விடுதலைப் போராட்டமும் ஒடுக்கப்பட்ட மக்களின் மன உறுதியிலும், அதனைச் செயற்படுத்தக்கூடிய திறமையான தலைமையிலும் மட்டுமே தங்கியுள்ளது. தமிழ் மக்களுடைய பலமும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையும் உள்ளவரை எந்தச் சக்திகளாலும் தமிழீழத் தமிழர்களை அடிமைகொள்ள முடியாது என்பதை, உலகிற்குத் தமிழீழ மக்கள் உணர்த்தும் நாள் வெகு தூரத்தில் இல்லை. ♣

# சலியாது போராடும் மக்கள் விடுதலையை அடைந்தே தீருவர்!

குடாநாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து பறித்தெடுத்துவிட்டால் விடுதலைப் போராட்டம் செத்துவிடும் என்றொரு கணிப்பு, சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து வந்துள்ளது. போராட்டத்தின் உயிர்நாடி குடாநாடு என்ற நினைப்பின் விளைவே மேற்குறித்த கணிப்பாகும்.

குடாநாட்டை ஆக்கிரமிக்கும் நோக்குடன், கடந்த 5 வருடகாலமாக, படையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இராணுவ – பொருண்மிய உளவியல் பரிமாணங்களில் அந்த நில ஆக்கிரமிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சியை முறியடிக்க இராணுவ – அரசியல் ரீதியில், புலிகள் இயக்கம் பலவாறாக முயற்சித்தது. சிங்களப்படையின் பெறுமதி மிக்க உயிர்களை அழித்து, சிங்கள தேசத்திற்கு பாரிய ஆள் – பொருள் இழப்புக்களையும் உண்டுபண்ணி இருந்தது.

ஆயினும், குடாநாட்டைக் கைப்பற்றுவது என்பதைத் தமது பிரதான இலட்சியமாக, சந்திரிகா – ரத்வத்த அரசு வலியுறுத்திவந்தது, அந்த இலட்சியத்திலேயே அவர்களது அரசியல் எதிர்காலமும் தங்கியிருக்கும் அளவுக்கு அது, அதிமுக்கியத்துவமும் அடைந்தது. இதனால், என்ன பாடுபட்டாவது – எவ்வளவு விலைகொடுத்தாவது – குடாநாட்டைக் கைப்பற்றிவிடுவதில் அரசு தீவிரம் காட்டியது. ஆயதபலத்தைத் திடீரெனப் பெருக்கி – ஒட்டுமொத்த படைபலத்தில் பெரும் பகுதியைக் குடாநாட்டிற்குள் குவித்து, ஆக்கிரமிப்புச் சமரைத் தொடக்கியது, இறுதியில், குடாநாட்டின் கணிசமான பகுதி நிலத்தையும் குறித்த தொகை மக்களையும் எதிரிப்படை கையகப்படுத்திவிட்டது.

தமிழரின் வரலாற்று – கலாசார மையம் இப்போது, எதிரிப்படையின் இரும்புப் பிடிக்குள் உள்ளது. தமிழர் படையின் ஆளுகைக்குள் – கடந்த பல வருடங்களாக இருந்த குடாநாட்டின் பெரும்பகுதி நிலம் இப்போது, சிங்களப் படையின் கைகளிற்குள் சிக்கியுள்ளது. போராட்டம் ஒரு நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆயினும், தமிழர் படையானது – தனது படைபலத்தைப் பாதுகாத்தபடி – தளத்தை மாற்றிக் கொண்டுவிட்டது.

நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாகப் புலிகள் இயக்கம், தனது பிரதான தளப்பிரதேசத்தை அல்லது ஆட்சி மையத்தை மாற்றியபடி போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்துவது, ஒரு வழமையான செயலாகும். நெருக்கடிக்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் – போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதற்கும், இந்தச் செயல்முறை அவசியமாகின்றது.

ஆரம்பகாலத்தில், தமிழ்நாட்டில் கால்பதித்து நின்ற போராட்டத்தின் மையம், பின்னர் யாழ்ப்பாணத்தில்




புலிகளின் குரல்

நிறுவப்பட்டது. இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் அது முல்லைத்தீவுக் காட்டிற்குள் இடம்மாறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. அங்கிருந்தபடி போராட்டம் வளர்த்தெடுக்கப்பட்டு, மையம் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றது. இப்போது, போராட்டத்தின் தளப்பிரதேசம் – ஆட்சிமையம் – என்ற பாத்திரத்தை வன்னிப் பெருநிலப்பரப்பு வகிக்கின்றது.

போராட்டத்தின் தேவை மற்றும் நிர்ப்பந்தங்கள் கருதி தளப்பிரதேசங்கள் மாற்றப்பாட்டாலுங்கூட, தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புடன் இருந்து வருகின்றது. பாரிய வெற்றிகளைத் தொடர்ந்தும் அல்லது மோசமான நெருக்கடிகள் காரணமாகவும் – போராட்டத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்காக – தளப்பிரதேசங்களை மாற்றிக்கொண்டு வருவது, எமது போராட்டத்தின் பிரதான இயல்பாக இருந்துவந்துள்ளது.

ஒரு விடுதலைப் போராட்டத்தின் விதி அதன் மக்கள் பலத்திலேயே தங்கியுள்ளது. நிலங்களைக் கைப்பற்றி – மக்களைக் கட்டுப்பாட்டிற்குள் எடுப்பதன்மூலம் இந்த மக்கள் ஆதரவை இல்லாது செய்துவிடலாம் என்று, எதிரி நினைக்கின்றான். தென் தமிழீழத்தில் இந்தச் சிந்தாந்தத்தை நடைமுறைப்படுத்திய எதிரிப்படை, பெருந்தொகைத் தமிழர்களைப் படுகொலை செய்வதில் வெற்றி பெற்றதேயொழிய, போராட்டத்திற்கான மக்கள் ஆதரவை அதனால் தடுக்க முடியவில்லை, மாறாக, வளர்த்துவிட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

'இன்முகம் காட்டும்' ஒரு வஞ்சக நாடகத்தை – தனது ஆக்கிரமிப்பிற்குள் உள்ள – குடாநாட்டில், எதிரிப்படை இப்போது நடாத்துகின்றது. ஆயினும், அங்குள்ள மக்கள்மீது ஒரு பெரும் அவலத்தை எதிரி விதைக்கப் போகின்றான் என்பதே, கொடூரமான யதார்த்தமாகும்.

இத்தகைய கொடூர வாழ்க்கையையே வியட்னாம் மக்களும் – எரித்திரிய மக்களும் அனுபவித்தனர். ஆயினும், போராட்டத்தில் அவர்கள் காட்டிய உறுதியும், சலியாத முயற்சியும், இறுதியில் அந்த மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தன.

போராடும் மக்கள்மீது துன்பச் சுமையைச் சுமத்தி – போராட்டத்தை நசுக்க முயல்வது, எதிரி அரசுகள் கடைப்பிடிக்கும் ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை. இதுவரை காலமும் இதையே, எமது மக்கள் மீது சிங்கள அரசும் பிரயோகித்து வருகின்றது. ஆனாலும், எமது மக்கள் அதற்கு அடிபணியவில்லை என்பது இதுவரைகால வரலாறு, இப்போதும் அந்த உறுதியையே போராட்டம் வேண்டி நிற்கின்றது.

ஒரு நாட்டின் படையைப் போல ஒரு விடுதலைச் சேனை இருப்பதில்லை. பல வசதியீனங்களை – பல சவால்களை – எதிர்கொண்டவாறு, விடுதலைச் சேனை வளரவேண்டும். இழப்புகளும் – பின்னடைவுகளும், ஒரு விடுதலைச் சேனையை சதா துரத்திக் கொண்டிருக்கும். ஆயினும், விடுதலையின் அவசியமும், அது காரணமாக மக்கள் வழங்கும் பேராதரவும் விடுதலைச் சேனைக்கு இறுதி வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும். இது வரலாற்று அனுபவமாகும்! ❋

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வதற்கான போர்!

வீ. மணிவண்ணன்

சந்திரிகா, "சமாதானத்திற்கான போர்" ஒன்றைச் செய்துவருவதாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரச்சாரம் செய்துவருகிறார். உலகில் எங்கும், யாரும் சமாதானத்திற்கான போர் நடாத்தியதாக வரலாறு இல்லை. அப்படியானபோது, "சமாதானத்திற்கான போர்" என்று சந்திரிகா கூறிவருவது என்ன? இங்கு தான் பேரதிர்ச்சி தருகின்ற உண்மையொன்று பொதிந்துள்ளது. தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கின்ற சந்திரிகாவின் திட்டத்தின் நாகரிகப் பூச்சே, "சமாதானத்திற்கான போர்" என்பதாகும். தமிழ் மக்கள் அழிக்கப்பட்டால் இலங்கையில் சமாதானம் தானாக உருவாகிவிடும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே, சந்திரிகா திட்டமிட்டுத் தனது காய்களை நகர்த்தி வருகிறார் என்பதுதான் உண்மை. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள கேள்வி, "நாங்கள் வாழப்போகிறோமா அல்லது சாகப்போகின்றோமா?" என்பதுதான்.

தமிழர்களாகிய நாம், எம்மை நாமே சுயபரிசோதனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. உலகிலேயே முன்தோன்றிய மூத்த குடி: தொன்மை வாய்ந்த தமிழ்மொழியும் - நாகரிகமும், சிறந்த பண்பாடும் உடைய இனத்திற்கு என்ன நடந்தது? ஏன் இந்த வீழ்ச்சி? சங்கிலி மன்னனது வீழ்ச்சிக்குப்பின் அடிமை வாழ்வை ஏற்ற நாம், இன்னும் அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றோம்.

சாள்ஸ் டார்வின் என்ற இயற்கை விஞ்ஞானியின் பரிணாமக் கொள்கையின்படி, இந்த உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் தமது உயிர்வாழ்வதற்கான தப்பிப்பிழைத்தலை மேற்கொள்ளுகின்றன. இயற்கையுடனான இந்த உயிர்வாழ்தலில், போராடக்கூடியன மட்டுமே எப்போதும் தப்பிவந்துள்ளன, ஏனையவை இந்தப் போராட்டத்தில் அழிந்து போயின. சுருக்கமாகச் சொன்னால், வல்லவன் வாழ்வான் என்பதுதான் இதன் அர்த்தமாகும். பூமி உருவாகிய காலத்திலிருந்து இயற்கையாகத் தோன்றிய கோடிக்கணக்கான உயிரினங்கள் - மரம் செடி கொடிகளில் இன்று எத்தனை உயிரோடு உள்ளன? டைனோசர், மாமுத்யானை, இராட்சதப் பறவை உட்பட எத்தனையோ வகையான உயிரினங்களும், மரம் செடி கொடிகளும் இயற்கையுடனான இந்தப் போராட்டத்தில் அழிந்துவிட்டன. இந்தக் கோட்பாடானது, மனிதனுக்கும் பொருந்தும். மனித இன வரலாற்றில் ஆதிகாலத்தில் வாழ்ந்த எத்தனையோ நாகரிகமக்கள், இருந்த இடம் தெரியாது பூண்டோடு அழிக்கப்பட்டுள்ளார்கள். மொகஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகம், இன்கா - மாயா நாகரிகங்கள், யூபிரட்டீஸ் - தைகிறீஸ் நாகரிகம் போன்றவற்றின் அழிவுகள் கற்றுக்கொடுக்கும் பாடத்தை நாம் மறக்கக் கூடாது. இயற்கையை எதிர்கொள்ள முடியாமலும், ஏனைய இன மனிதர்களை எதிர்கொள்ள முடியாமலும், மனித நாகரிகங்கள் பூண்டோடு அழிந்த வரலாறுகள் உண்டு. இந்த வரலாறுகள் தமிழர்களுக்குக் கூறுவது என்ன? போராடினால் வாழ்வு: இல்லாவிட்டால் சாவு என்பதுதான் அது.

இன்றைய அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து இன்னும் பல இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பூர்வீகக் குடிகள் யார்? நிச்சயமாக வெள்ளைக்காரர்கள் இல்லை! கொலம்பசின் வருகையைத்தொடர்ந்தே அமெரிக்கக் கண்டம் வெள்ளையினத்தைக் கண்டது. அங்கு நாகரிகமாக வாழ்ந்த -பூர்வீக-பழங்குடி மக்களைக் காட்டுமிராண்டித்தனமாக அழித்து, அடிமை வர்த்தகத்தை ஆரம்பித்து வைத்தவன்தான் இந்த கொலம்பஸ். அவுஸ்திரேலியாவில் கங்காருவையும் அங்கு வாழ்ந்த பழம்குடி மக்களையும் ஒன்றாகக்கருதிச் சுட்டு அழித்த வரலாறு நிறைய உண்டு. அமெரிக்காவில் செவ்விந்தியர்கள் கூட்டம் கூட்டமாகப் படுகொலை செய்யப்பட்டு, எஞ்சியவர்கள் இனக்கலப்பு செய்யப்பட்டதை, வரலாறு ஒரு போதும் மறவாது. இன்று இந்த நாடுகளில் பூர்வீகக்குடிகள் தமது இன அடையாளங்களை இழந்து - நாகரிகத்தையிழந்து - இன்னொரு நாகரிகத்தால் மாற்றப்பட்டு, இண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்கின்றனர்.



இந்த நிலையை மறைப்பதற்காக, அந்தந்த நாடுகளின் அரசுகள் சில சலுகைகளை வழங்குகின்றன. சலுகைகள் எனும்போது இலவச மது, இலவச புகைப்பிடித்தல், இலவச போதைவஸ்து என்று இந்த மக்கள் தங்களைத் தாமே அழித்துக்கொள்வதற்கான சலுகைகளை மட்டும் செய்கிறார்கள். இந்த நாடுகள்தான் ஜனநாயகம், மனித உரிமை என்று உலக நாடுகளுக்குப் போதிக்கின்றன. எவ்வளவு முரண்பாடு!

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான், சந்திரிகாவும் இன்று செயற்பட்டு வருகிறார். அவரது, "சமாதானத்திகான போர்" என்பது, இலங்கைத்தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களைப் பூண்டோடு அழிப்பது - அது முடியாவிடின், எஞ்சியவர்களை மேலே குறிப்பிட்ட நாடுகளில் வாழும் பூர்வீகக் குடிமக்களைப்போல், இன அடையாளமற்ற இரண்டாந்தரப் பிரஜைகளாக்குவதுதான். இது சந்திரிகாவிற்கு மட்டும் உரித்தான கோட்பாடல்ல: சிங்களப் பேரினவாதத்தின் நோக்கமே இதுதான். டி. எஸ். சேனநாயக்காவிலிருந்து சந்திரிகா வரையும் திட்டமிட்டுத் தமிழ்த் தேசிய இனத்தை அழித்து வருகின்றார்கள். இதை, வரலாற்றை உற்றுப்பார்ப்பவர்கள் மட்டுமே விளங்கிக்கொள்ள முடியும்.

ஒரு தேசிய இனத்தின் தூண்களாகப் பாரம்பரியதேசம் (நிலம்), மொழி, வரலாறு, கலை-பண்பாடு, சுயமான பொருளாதார வாழ்க்கை என்பன விளங்குகின்றன. இந்தத் தூண்களைப் படிப்படியாக வெட்டிச் சிதைப்பதன்மூலம், தமிழ்த் தேசிய இனத்தின் ஆன்மாவையே அழிப்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் நோக்கமாகும். அத்துடன், காலத்துக்குக்காலம் இனப் படுகொலையினை மேற்கொள்வதன் மூலமும், தமிழினத்தைப் பூண்டோடு அழித்தலை, சிங்களப் பேரினவாதிகள் செவ்வனே செய்கின்றனர். டி.எஸ். சேனநாயக்கா சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து, நிலத்தைப்பறிக்க ஆரம்பித்தார்: தனிச்சிங்களச்சட்டத்தின் மூலம், தமிழ்மொழியைச் சிதைக்க ஆரம்பித்தார், எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா: சிறிமா தரப்படுத்தலைக் கொண்டுவந்து, தமிழ் மாணவரது உயர்கல்வியைச் சீரழித்தார்: காமினி இனப்படுகொலை செய்ததோடு, பண்பாட்டின் சிகரமாக இருந்த யாழ். நூலகத்தையும் எரித்தழித்தார். ஜெயவர்த்தனா, "போர் என்றால் போர்" என்றார், வெளிநாட்டவரையும் இந்தியரையும் அழைத்து, தமிழினப் படுகொலைக்கு பங்கு சேர்த்தார். சிங்களப் புத்திஜீவிகள் வரலாற்றைத் திரிபுபடுத்தி, பூர்வீகக் குடிகளான தமிழர்களைக் கள்ளத்தோணிகளாக்கினார்கள். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல தேவாலயங்களிலும். பாடசாலைகளிலும், அகதி முகாம்களிலும் குண்டுவீசி அழித்து, தமிழர்கள் காலம்காலமாக நாகரிகமாக வாழ்ந்த யாழ், மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கியெறிந்து, இன்னும்........ தமிழர்களைக் கலைத்துக் கலைத்துக் கொல்ல சந்திரிகா வந்துவிட்டார். இதுவரை காலமும் ஆட்சியிலிருந்த சிங்களப் பேரினவாதிகள் அனைவரையும் தூக்கியெறிந்து, பேரினவாதத்தின் உச்சாணிக்கொம்பிலேறி ஆட்சி புரிய வந்துள்ளவர்தான் இந்தச் சந்திரிகா. 60 இலட்சம் யூதர்களைக் கொன்றொழித்த கிட்லரை விடப்பயங்கரமான கொடியவர்தான் இவர். உலகநாடுகளையும், இலங்கையிலுள்ளவர்களையும் ஏமாற்றுவதற்காக இவரால் மேற்கொள்ளப்படும் இனவழிப்பானது, "சமாதானத்திற்கான போர்" எனும் வடிவம் எடுத்துள்ளது.

இந்த நிலையில், தமிழர்களாகிய நாம், எம்மை நாமே சுயபரிசோதனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. உலகிலேயே முன்தோன்றிய மூத்த குடி: தொன்மை வாய்ந்த தமிழ்மொழியும் - நாகரிகமும், சிறந்த பண்பாடும் உடைய இனத்திற்கு என்ன நடந்தது? ஏன் இந்த வீழ்ச்சி? சங்கிலி மன்னனது வீழ்ச்சிக்குப்பின் அடிமை வாழ்வை ஏற்ற நாம், இன்னும் அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றோம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியர் என அடக்கியாள யார் வந்தாலும் அவர்களைப் பணிவுடன் ஏற்று, அவர்களிற்கு விசுவாசமாக அடங்கிப்போனவர்கள் - 400 வருட காலமாக அடிமை மோகத்தில் மூழ்கி அதனையே வாழ்க்கையாக நம்பியிருந்தவர்கள் தான் - தமிழர்கள், இதுதான் தமிழனது பாரம்பரியமா என்றால், இல்லை. பண்டைக்காலத்தில் வீரத்துடனும், நாகரிகத்துடனும் வாழ்ந்தவர்கள் தமிழர்கள். போரும் தியாகமும் அவர்களது வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்தன. போர்க்களத்தில் வீரச்சாவடைபவர்களை மட்டுமே அவர்கள் வழிபட்டு வந்தார்கள். இமயமலை முதல் கடாரம் வரை இவர்கள் காலடியிலிருந்தன. இந்து சமுத்திரம், இவர்கள் விளையாடும் தொட்டிலாக இருந்தது. இவ்வாறான ஒரு வீரப்பரம்பரை எப்படி அடங்கிப்போனது? இதற்கு வரலாறுதான் விடை சொல்ல வேண்டும். 400 வருடகாலம் தமிழன் அடிமையாகி, வாழ்வில் அடிபட்டு, அவமானப்பட்டு, ஒடுக்கப்பட்டு, வாழமுடியாமல் ஜீவமரணப் போராட்டத்தை நடத்தியபோது, போராடினால் வாழ்வு உண்டு என்பதை உணர்த்தியவர் பிரபாகரன் எனும் மாமனிதர். வரலாறு தகுந்த நேரத்தில் பிரபாகரனை உருவாக்கியது. அவர்தான், தமிழனுக்கு வீரத்தையும் போர்கலையையும் சொல்லிக்கொடுத்தார்: அடிப்பவனுக்குத் திருப்பியடிக்கக் கற்றுத்தந்தார்: தமிழனது ஆன்மாவுடன் கலந்திருந்த வீரத்தையும் தியாகத்தையும் வெளிக்கொணர்ந்து, தலைநிமிர்ந்து வாழ வழிகாட்டினார். பிரபாகரனால்தான், தமிழர்கள் போர்க்குணம் கொண்டார்கள். காலங்காலமாக, அடக்குமுறையில் ஒடுங்கியிருந்த தமிழர்களது கோபக்கனலே விடுதலைப் புலிகளாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது, தமிழர்களது போர்க்குணத்தின் ஒரு வெளிப்பாடாகும். விடுதலைப் புலிகள் வேறு, மக்கள் வேறு என்று சந்திரிகாவோ அல்லது வேறு எவரோ கருதுவாராயின், அவர் மிகப்பெரிய தவறை விடுபவராகிறார். விடுதலைப் புலிகளையும் மக்களையும் பிரிப்பதென்பது, தமிழர்களை அழித்தொழிப்பதற்குச் சமனாகும். காலங்காலமாக அடக்கியொடுக்கப்பட்ட தமிழனது, அவமானப்பட்ட ஆத்திரத்தினதும் பழிவாங்கலினதும் வெளிப்பாடாகவே விடுதலைப் புலிகளது தாக்குதல்களை ஒவ்வொரு தமிழனும் உணர்கிறான் என்றால், அது மிகையாகாது. சமர்களில் விடுதலைப் புலிகள் வெல்லும்போது தமிழர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். விடுதலைப் புலிகள் இழப்புக்களைச் சந்திக்கும் போது அவர்கள் கவலைப்படுகிறார்கள். இதுதான் யதார்த்தம். இங்கு தமிழர்கள் எனும் போது, வட-கிழக்கிலுள்ள தமிழர்களை மாத்திரம் குறிப்பிடவில்லை. தென்பகுதியிலும் உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழர்களையும் அது உள்ளடக்கும். 1983 இற்குப் பின்பு தென் பகுதியில் இனக்கலவரம் வராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? சிங்கள அரசுகளின் தார்மீகமா? இல்லை: தமிழர்கள் திருப்பியடிப்பார்கள் என்ற அச்சம்தான். இன்று பெங்களூரிலும் மும்பாயிலும் (பம்பாய்) அடிவாங்குகின்ற தமிழர்கள் யாரை நினைக்கிறார்கள்? உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழர்கள், தமக்குத் துன்பம் வரும்போது யாரை நினைக்கிறார்கள்?

உலகில் எங்கும், யாரும் சமாதானத்திற்கான போர் நடாத்தியதாக வரலாறு இல்லை. அப்படியானபோது, "சமாதானத்திற்கான போர்" என்று சந்திரிகா கூறிவருவது என்ன? இங்கு தான் பேரதிர்ச்சி தருகின்ற உண்மையொன்று பொதிந்துள்ளது. தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கின்ற சந்திரிகாவின் திட்டத்தின் நாகரிகப் பூச்சே, "சமாதானத்திற்கான போர்" என்பதாகும்.

அண்மையில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாது என்று, மலேசிய அரசு தடைவிதித்ததன் காரணம் என்ன? மலேசியாவில் வாழும் பல இலட்சம் தமிழர்கள் தங்கள் தலைவராகத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைக் கருதுவதுதான். இது எதனைக் காட்டுகிறதென்றால், தமிழர் படையொன்று இங்கு பலத்துடன் உருவாகிறது என்பதைத்தான்.

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனங்களை வெல்லும் வஞ்சக நாடகம்:

# வரலாறு சொல்லும் செய்திகள்!

தமிழ் மக்கள் இப்போது, தம் முன்னால் பல்லைக்காட்டி "ஆரியக்கூத்தாடி" காரியம் பார்க்கும் சிங்கள இராணுவத்தைக் கண்டு திகைத்துத்தான் போய்விட்டார்கள்! அழுகையை -அவலத்தை - முதல் நாள் தம்மேல் விதைத்தவர்கள், மறுநாள் தாம் சிரிப்பதாகப் புகைப்படமெடுத்துப் புதினப் பத்திரிகைகளில் போடுகின்ற விபரீதத்தை, அடக்கமுடியாத ஆச்சரியத்தோடு கவனிக்கின்றார்கள். பல நூற்றாண்டுகால தொடர் அடிமை வாழ்வில் இன்னொரு பாடத்தை எம் மக்கள் கற்கின்றார்கள். ஏனென்றால்,

ஜீவிகள் வலியுறுத்த, இராணுவத்திற்கு இப்போது சந்திரிகா அம்மையார் வலியுறுத்தும் நவீன கோட்பாடுமிதுதான்.

வியட்நாம் போரின்போது, தென் வியட்நாம் மக்களை, வட வியட்நாமின் வியட்கொங் சர்வதிகார - பயங்கரவாத - இயக்கத்திலிருந்து காப்பாற்றுவதாகக் கூறி, அமெரிக்கா பின்பற்றிய உத்தியுமிதுதான். இந்த உத்தி எதிர்பார்த்த வெற்றியைக் கொடுத்திருந்தால், 1975ம் ஆண்டளவில் போட்டது போட்டபடி, சைகோனை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்திருக்கவேண்டிய தேவை அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்காது: இந்த உத்தி வெற்றியளித்திருந்தால், ஆப்கான் மக்களைப் பிற்போக்குவாத - மரபுவாத - மதப்போராளிகள் பிடியிலிருந்து விடுவித்து, நவீன அறிவியல் உலகிற்குள் பிரவேசிக்க வைக்கப்போவதாகக் கூறிய சோவியத்நாடு, இறுதியில் "சட்டி சுட்டதால் கைவிட்டது" என்று கூறி, சொல்லாமற் கொள்ளாமல் தனது படைகளை மீளப்பெற்றிருக்காது: அல்லது எரித்திரிய மக்களின் மனங்களை வெல்லப்போன எத்தியோப்பிய அதிபர் கேணல் கெய்லி மரியம் இப்போது,

தமிழ் மக்கள் இப்போது, தம் முன்னால் பல்லைக்காட்டி "ஆரியக்கூத்தாடி" காரியம் பார்க்கும் சிங்கள இராணுவத்தைக் கண்டு திகைத்துத்தான் போய்விட்டார்கள்! அழுகையை -அவலத்தை - முதல் நாள் தம்மேல் விதைத்தவர்கள், மறுநாள் தாம் சிரிப்பதாகப் புகைப்படமெடுத்துப் புதினப் பத்திரிகைகளில் போடுகின்ற விபரீதத்தை, அடக்கமுடியாத ஆச்சரியத்தோடு கவனிக்கின்றார்கள்.

குருதியை உறிஞ்சும் நீளமான கடைவாய்ப் பற்களைக் கோரமாகக் காட்டியவர்கள் இப்போது, இரண்டுநாள் 'போனஸ்' சிரிப்பாக 32 பற்களையுமல்லவா வரிசையாகக் காட்டுகின்றார்கள். நஞ்சை விதைத்தவர்கள் இப்போது, இனிப்பை நீட்டுகிறார்கள்: "பற தெமிலோ" என்றவர்கள் "பாவம் எம் மக்கள்" என்கிறார்கள். துப்பாக்கிகளைக் காட்டியவர்கள் கரங்களை நீட்டுகின்றார்கள். கடுகடுவென கடுவன்பூனை போலிருக்கும் ரத்வத்தவின் முகம்கூட, சாந்த சொரூபமாகிவிட்டது. இவையெல்லாம் ஒன்றும் வரலாற்றில் புதியதுமல்ல: புதினமுமல்ல. முன்பு எம் மண்ணிலே கந்தகத்தை விதைத்தவர்கள், இப்போது வஞ்சகத்தை விதைக்கிறார்கள்: அவ்வளவுதான்.

இவ்வினை விதைப்பும், காலம் காலமாக நடந்துவருவதுதான். அடுத்தவன் தாயகத்தில் அத்துமீறி நுழைந்து, ஆக்கிரமிப்புச் செய்வோர் - விடுதலைநோக்கி விரைவோர் மீது பெரும் படையெடுப்பினை நிகழ்த்துவோர் - தம்மை நியாயப்படுத்தி நிலைப்படுத்த அரங்கேற்றும் மிகப் பழைய நாடகமிது - போடும் மிகப் பழைய முகமூடியிது - பூசும் அரிதாரமிது - சகல இராணுவ ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது இராணுவ, அரசியல் ஆலோசகர்கள் கிளிப்பிள்ளைபோலத் திரும்பத் திரும்பச் சொல்லும் போருத்தியிது. படையெடுப்புக்களை, ஆக்கிரமிப்புக்களை, படுகொலைகளை, நீளும் நிலப் பரப்புக்களை மறைக்க இடும் நிழற்திரையிது. இதுதான், "மக்கள் மனங்களையும் இதயங்களையும் வெல்லும்" கோட்பாடு! "நிலங்களைப் பிடித்து என்ன பயன் - மக்கள் இதயங்களைக் கவராவிட்டால்?" என அராலியில் அலறிச் செத்த 'கொப்பே' யின் கோட்பாடு இது. சந்திரிகா அம்மையாருக்கு அறிவு

வே.பாலகுமாரன்

சிம்பாப்வேயில் தோட்டமொன்றில் மறைந்து வாழ நேரிட்டிருக்காது. சோவியத்தின் ஆளணி, படைபல உதவியோடும் அவர்களின் நவீன அறிவியல், உளவியல் பரப்புரை உத்திகளோடும், எரித்திரிய மக்களை ஈ.பி.எல்.எவ் (E.P.L.F) போராளிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்போன கேணலுக்கு என்ன நடந்தது? இப்போது ரத்வத்த கூறுவதைவிட ஒருபடி மேலே போய் அன்று, 'ரிவிசர' இராணுவ நடவடிக்கையை ஒத்த- 1982ஆம் ஆண்டு எரித்திரியா மீதான 'சிவப்பு நட்சத்திர தாக்குதல் நடவடிக்கை" வெற்றியின்போது, மெங்குஸ்து கெய்லி மரியம் என்ன கூறினார்? "இப்போது நாம் பெற்ற வெற்றி எமது ஒரு இலட்சம் படையின் திறமையால் அல்ல: எரித்திரிய மக்கள் கொடுத்த ஆதரவாலேயே" என்றார். இதேவேளை, இத்தகைய பரப்புரைகட்கு ஈடுகொடுக்க, ஈ.பி.எல்.எவ் அமைப்பும் "எரித்திரிய மக்களின் விருப்பை அறிய சர்வசன வாக்கெடுப்பு அல்லது பொதுத்தேர்தல் நடத்த வேண்டும்: சர்வதேச கண்காணிப்புடன் கூடிய போர் நிறுத்தம்" என, பல அரசியல் கோரிக்கைகளை முன்வைத்ததும் முன்னைய வரலாறு. இறுதியில் எரித்திரிய மக்களின் மனங்களை வெல்ல முடியாததால், 1991ஆம் ஆண்டளவில் விமானமேறி, உயிர்தப்பினால் போதும் என மரியம் சிம்பாப்வேக்குத் தப்பியோடினார். இதுவும் வரலாறு சொல்லும் செய்திகள்தான்.

இப்போது, தமிழீழத்திலும் இக்குறுநாவலின் முதலாவது அத்தியாயம் அரங்கேறுகிறது. இரவோடு இரவாக, சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் மாறிவிட்டது! குளிரூட்டிய பஸ் வண்டிகள், குறைந்த 'சலாரில்' ஓடுகின்றனவாம்: கப்பல் கப்பலாக உணவுப்பொருட்கள் காங்கேசன்துறைக்குச் செல்கின்றதாம். மக்கள் மீளக்குடியேற சகல வசதிகளும் செய்யப்படுகின்றனவாம். எப்போதுமே நேரடியாக முனைப்பான போராட்டங்களில் ஈடுபட்டு பட்டறிவு பெறாத எம்மக்கள், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தாம் தேடிய தேட்டங்களை - தமது பரம்பரை வாழிடங்களை - சென்றடைய வேண்டும் என்கின்ற ஒரே நோக்கோடு, வேறு எதுவுமே பற்றிச் சிந்திக்காமல் செயற்படுகின்றார்கள். இப்போது இவர்கட்கு வேறு எதுவும் மனதில் தோன்றாது - கண்ணில் படாது. ஆனால், உண்மை நிலையென்ன? சிங்கள இராணுவப்பகுதியில் இவர்கட்கு என்ன காத்திருக்கின்றது. புது வாழ்வா? புதைகுழியா? மறுவாழ்வா? மரணப்பொறியா? உண்மையிலே 2500 வருடகால வரலாறு ஒரு நாளிலே மாறிவிட்டதா? இணக்கமாகப் பேசி எம்மவர்களை ஏமாற்றியவர்கள் - பதவியைக்காட்டித் தன்மானத்தைத் தறித்தவர்கள் -இராணுவத்தை ஏவிவிட்டு அச்சுறுத்தியவர்கள் - இயலாதபோது இந்திய இராணுவத்தை ஏவிவிட்டு இளித்தவர்கள் - இப்படியாக ஒவ்வொரு வழிமுறையாகப் பரீட்சித்து எதுவுமே முடியாதபோது, பெரும் இறுதிப்போரையே திணித்தவர்கள் - அதிலும் ஏமாந்து போன நிலையில் இப்போது என்ன செய்கிறார்கள்? இன்னொரு பெரும்போர், இருக்கும் நிலைமைகளை இன்னும் மோசமாக்கி சர்வதேசத்தை விழிப்படையச்செய்யும்: பின்விளைவுகளைத் தரும் 'பூமராங்' வளைதடியாக மாறிவிடும் என்கின்ற அச்சத்தில், புது நாடகத்தை - பாரிய இராணுவ அழுத்தப் பின்னணியோடு - அரங்கேற்றுகின்றார்கள். எலிகளை ஓடிப்பிடிக்க முடியாது தளர்ந்து போன நிலையில், உருத்திராக்கம் தரித்து வேடம்போட்ட 'உருத்திராக்கப் பூனை' நிலையிது வல்லவா?

உண்மையில் சிங்கள இராணுவம் இப்போது மாறித்தான் விட்டது. இதுவரை தாம் கையாண்ட ஒடுக்குமுறைகளில் அது இப்போது புதிய மாற்றத்தைக் கொண்டுவரப் போகின்றது.

அதற்கான சகல குணக்குறிகளும் இப்போது தென்படுகின்றன. என்ன மாற்றம் என்பதை அறிய நாம் பொசுனியாவில் நடந்ததைப்பற்றி- கிழக்குத் தீமோரில் நடப்பது என்ன என்பதைப்பற்றி - அறியத்தான் வேண்டும். பொசுனிய முசுலிம்களை எவ்விதம் இனச் சுத்திகரிப்பு வதை முகாம்களில் சேர்பியர் வாட்டினர்? போராடக்கூடியவர்களைத் தனியாகப் பிரித்தெடுத்து, வதை முகாம்களில் அரைகுறைப்பட்டினி போட்டு, எலும்பும் தோலுமாக்கி, எழுந்து நடக்கவே வழியற்ற வர்களாக்கவில்லையா? கருத்தரிக்கக்கூடிய பெண்களைக் கருவூட்டல் முகாம்களிலே தங்கச் செய்து; சேர்பியரின் கருக்களைத் தரிக்கச் செய்து, கருக்கலைப்புச் செய்ய முடியாத காலம்வரை தடுத்து வைத்துப் பின் துரத்திவிடவில்லையா? கிழக்குத் திமோரில் இந்தோனேசிய இராணுவம் என்ன செய்கின்றது? திமோரியப் பெண்கள் புதிய திமோரியச் சந்ததியை உருவாக்காமல் தடுக்க, கட்டாயக் கருக்கலைப்பு - வெளி ஆட்களைக் கட்டாயமாக மணம் முடிக்கச் செய்தல் - பாலியல் வதைமுகாம்களில் திமோரியப் பெண்களை நிரந்தரமாக அடிமைகளாக்குதல் என்பவற்றைச் செய்யவில்லையா? இலட்சக்கணக்கில் கொன்று குவித்து இன அழிப்பு ஒருபுறம்: மறுபுறமாக, இவ்வாறு திமோரிய குடித்தொகை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளல். இம்முறைகளைத்தான் இனிமேல்

சிங்கள அரசு பின்பற்ற முடியும். ஏனெனில், இவைதான் மிகுதியாய் இருக்கின்ற கொடுமைகள். எம் மக்களை அச்சுறுத்தி, எம்பக்கம் வைத்திருப்பதற்காக இவை எழுதப்படவில்லை. நுனிக் கொம்பில் ஏறிய நிலையில் சிங்களம் இருக்கும் போது, "வருமுன் காவாதான்" நிலைக்குத் தமிழீழம் செல்லக்கூடாது என்பதற்காகவே




இவை சொல்லப்படுகின்றன. அன்றேல், 'சின்பெயின்' தலைவர் ஜெரி அடம்ஸ் கூறியதுபோல், "ஐ. ஆர். ஏ அமைப்பினை அழிப்பதானால் இயக்கம் தோன்றியமைக்கான மூல காரணங்களை அழிக்க வேண்டும்". இது புலிகளுக்கும் பொருந்தும். எந்த அடக்குமுறைக்கெதிராகப் புலிகள் போராடினார்களோ, அவை நீக்கப்படுவதற்கான எவ்வித அறிகுறியுமில்லாத நிலையில் இவை கூறப்படுகின்றன. தமிழீழத்திலே நிரந்தர அமைதி நிலவ, நிரந்தரமாகப் போரை இல்லாது செய்வதற்காகப் புலிகள் போராடுகின்றனர் என்பதே நாம் வலியுறுத்தும் கரு.

புலிகளைப் பொறுத்தவரையில் தமது நீண்ட வரலாற்றில், பல பாரிய பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பின்னடைவின்போதும், முன்னைவிட வலிமையோடு நிலைமைகளைச் சரியாகக் கையாண்டு, மேலெழுந்து வந்துள்ளனர்.

இம்முறையும் அது நிகழும்!

புலிகளைப் பொறுத்தவரையில் தமது நீண்ட வரலாற்றில், பல பாரிய பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பின்னடைவின்போதும், முன்னைவிட வலிமையோடு நிலைமைகளைச் சரியாகக் கையாண்டு, மேலெழுந்து வந்துள்ளனர்.

இம்முறையும் அது நிகழும்! ✤

www.tamilarangam.net



# புலிகளின் போர் உபாயம்

யாழ். குடாநாட்டில் பரந்தளவில் கரந்தடிப் போர்முறைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கென, அதிரடி தாக்குதல் படையணிகள் தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் பிரகாரம், யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட இராணுவப் பின்னடைவை நிவர்த்தி செய்வதோடு, சிறிலங்கா இராணுவத்தைப் பெரும் நெருக்கடி ஒன்றுக்குள் சிக்கவைப்பது விடுதலைப் புலிகளின் போர் உபாயம் ஆகும்.

விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் அரசியல், இராணுவ ரீதியில் பின்னடைவுகள் ஏற்படுவதென்பது சாதாரண மானதாகும். இவ் ஏற்ற இறக்கங்களில், தனியாகப் போரிடும் இயக்கங்களின் செயற்பாடுகள், எதிராகப் போரிடும் அரசுகளின் நடவடிக்கைகள் என்பவற்றினால் மட்டும் ஏற்பட்டு விடுபவை அல்ல. அவற்றுக்கும் அப்பாற்பட்ட சில காரணிகளிலும் அதாவது அண்டைய நாடுகள், அனைத்துலகம் என்பனவும் தீர்மானித்துவிடுவதும் உண்டு. அதிலும் அனைத்துலக ரீதியில் போராட்டம் முழு அளவினதான அங்கீகாரம் பெறப்படும் வரை இந்த நிலை காணப்படுவது உண்டு. ஆனால் போராட்டங்கள் நெருக்கடியான கட்டத்தை அடையும்போது, அதனைப் பாது காப்பதும், போராட்டத்தை வழிநடத்திச் செல்வதற்கென புதிய அரசியல் – இராணுவத் தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்ளுவதும் சிறப்பான தலைமைப் பீடத்தின் வெளிப்பாடு ஆகும். இந்த வகையில், கடந்த காலத்தில் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ற வகையில் புதிய தந்திரோபாயத்தை வகுப்பதில் புலிகள் வெற்றி கண்டுள்ளனர். இவ்வாறன நெருக்கடிகளைக் கையாளுவதற்கான போதிய ஆற்றலும் திறனும் உண்டு என்பதைத் தேசியத் தலைவர் பிரபாகரன் கடந்த காலத்தில் நிரூபித்துள்ளார்.

> போராட்டங்கள் நெருக்கடியான கட்டத்தை அடையும்போது, அதனைப் பாது காப்பதும், போராட்டத்தை வழிநடத்திச் செல்வதற்கென புதிய அரசியல்-இராணுவத் தந்திரோ பாயங்களை வகுத்துக் கொள்ளு வதும் சிறப்பான தலைமைப் பீடத்தின் வெளிப்பாடு ஆகும். இந்த வகையில், கடந்த காலத்தில் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ற வகையில் புதிய தந்திரோபாயத்தை வகுப்பதில் புலிகள் வெற்றி கண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம், என்றுமே இல்லாத ஒரு அரசியல் – இராணுவ நெருக்கடியை இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தின்போது சந்தித்தது. இக்காலத்தில் வடக்கு–கிழக்குப் பகுதியில் தனது கட்டுப்பாட்டை இழந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கம், அதன் இறுதிக் காலத்தை நெருங்கிவிட்டதாகவே கருதப்பட்டது. தலைவர் பிரபாகரனை இலக்காகக் கொண்டு பல இராணுவ நடவடிக்கைகளையும் இந்தியப்படை மேற்கொண்டது. ஆனால் அன்று அரசியல் – இராணுவ நெருக்கடிகளையும் மீறியதாக விடுதலைப் புலிகள் இயக்கம் கைக்கொண்ட அரசியல் இராஜதந்திர – இராணுவ அணுகுமுறை இருந்தது. அரசியல் சூழ்நிலையை மிகத் திறம்படக் கையாளக் கூடியதாக மேற்கொள்ளப்பட்ட இவ் இராஜதந்திரம், இந்திய இராணுவத்திற்கு தளர்ச்சியையும், மனச் சோர்வையும் ஏற்படுத்திய கரந்தடிப் போர் யுக்தியே விடுதலைப் புலிகளை அரசியல் – இராணுவ நெருக்கடியில் இருந்து மீட்டதோடு, இந்திய இராணுவத்தை வெளியேற்றவும், இராணுவ மேலாண்மையைப் பெறவும் வழிவகுத்தது.

ஆனால், அன்றைய சூழ்நிலை இதையொத்ததொரு நெருக்கடியாக இல்லாதுவிட்டாலும், 1991இல் மட்டும் குறிப்பிடத்தக்கதொரு இராணுவ நெருக்கடி ஒன்றைப் புலிகள் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. சிலாவத்துறை, ஆனையிறவு, மணலாறு எனத் தொடர்ந்த கட்டங்களினால் புலிகள் தளர்ந்து இருந்தவேளை, புலிகளுக்கு எதிரான இந்திய அரசின் முனைப்பான செயற்பாடும் பெரும் அழுத்தங்களை உருவாக்கியிருந்தது. ஆனால், தலைவர் பிரபாகரன் போர் யுக்தியில் ஏற்படுத்திய மாற்றமும், கடற்புலிகளின் பிரவேசமும் இராணுவ சூழ்நிலையை வெகுவிரைவில் முற்றாக மாற்றியது எனலாம். அத்தோடு, இப்போர் யுக்தி மாற்றமானது, இராணுவச் சமநிலையைச் சீர்செய்ததோடு மட்டுமல்ல – சிறிலங்கா இராணுவத்தில் புதியதொரு சிக்கலையும் – என்றும் தீர்க்க முடியாத சிக்கலையும் உருவாக்கியது. அதாவது, இராணுவத்திலிருந்து, அதிகாரிகள் உட்பட படையினர், தப்பியோடும் ஒரு நிலையை உருவாக்கியது. அதாவது, இராணுவத்திற்கு நீண்டகால நெருக்கடியொன்றைக் கொடுத்ததோடு, இராணுவம் ஒரு பகுதியிலிருந்து பின்வாங்கலையும் செய்ய வேண்டியிருந்தது.

> காலத்துக்குக் காலம் நெருக்கடிகள் ஏற்படும்போது, புலிகள் வகுத்துக்கொண்ட புதிய போர் யுக்தியினாலும் - அரசியல் அணுகுமுறைகளாலும் புலிகளை நெருக்கடியிலிருந்து மீட்டதோடு மட்டுமல்ல, முன்பு இருந்த நிலையைவிடப் பலம் பொருந்திய சக்தியாகவும் இராணுவ சமநிலையில் புலிகள் கை மேலோங்கவும் வழி செய்தது.

இந்தவகையில், காலத்துக்குக் காலம் நெருக்கடிகள் ஏற்படும்போது, புலிகள் வகுத்துக்கொண்ட புதிய போர் யுக்தியினாலும் – அரசியல் அனுகுமுறைகளாலும் புலிகளை நெருக்கடியிலிருந்து மீட்டதோடு மட்டுமல்ல, முன்பு இருந்த நிலையைவிடப் பலம் பொருந்திய சக்தியாகவும் இராணுவ சமநிலையில் புலிகள் கை மேலோங்கவும் வழி செய்தது எனலாம், இது அரசியலிலும் அவர்களின் நிலையை உறுதிசெய்தது. இந்த நிலையில் தற்போது அதாவது, யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட பின்னடைவின் பின்னர் புதிய போர் உபாயத்தினை வகுத்து யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலும் புலிகள் இறங்கியுள்ளனர். ஏற்கனவே இதன் பலாபலன்கள் தெரியத் தொடங்கிவிட்டன. இருப்பினும் இதன் இறுதிவிளைவாக சிறிலங்கா இராணுவத்தை மீளமுடியாததொரு இக்கட்டில் மாட்டிவிடும். அப்பொழுது யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல, வடக்கு – கிழக்கு எங்குமே இராணுவ சமநிலையில் புலிகளின் கை ஓங்கியிருப்பதோடு, அரசியலில் பெரும்பலம் பெற்றவர்களாகவும் நிச்சயம் இருப்பார்கள்.

நன்றி: ஈழநாதம் (05-06-96)

# மீண்டும் ஒரு தடவை வலியுறுத்து

''அரசியல் தீர்வு யோசனைகள் அமுலாக வேண்டுமானால் முதலில் பாராளுமன்றத்தில் இரண்டில் மூன்று பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இது நடைமுறைச் சாத்தியமான காரியமா?'' இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் தொண்டமான். அமைச்சர் தொண்டமானின் இக்கேள்வியில் புதிய கண்டுபிடிப்போ அன்றி பதிலளிக்கக்கூடிய விடயமோ எதுவுமில்லை. ஏனெனில், சிறிலங்கா அரசியல் யாப்பின் நிலையையும் – சிங்கள அரசியல்வாதிகளின் நிலைப்பாடும் – இவ் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள், பாராளுமன்றத்தையே தாண்டி வராது என்பது, இத்திட்டம் முன்வைக்கப்பட்ட போதே தெரிந்ததொன்றுதான், இது ஏற்கனவே கூறப்பட்டதும்தான். ஆனால், இது குறித்து மீண்டும் ஒருமுறை கூறப்பட வேண்டிய தேவை வந்தமையானது, இன்னமும் சிலர் அரசியல் தீர்வு குறித்து நம்பிக்கையுடன் இருப்பதனால் ஆகும். அத்தோடு, தொண்டமானின் கூற்றுக்களை மேற்கோள்காட்ட முனைவது அவர் அமைச்சராக இருப்பதன் காரணத்தாலேயே ஆகும்.

யாழ். குடாநாட்டின் மீது பாரிய படையெடுப்புக்களை நடாத்துவதற்கு முன்னர், அரசு அதிகாரப் பரவலாக்கத்தைப் பற்றி அடிக்கடி பேசியது – இனப்பிரச்சினைக்கு இதுவே அரசியல் தீர்வு கொண்டு வரும் எனவும் தெரிவித்தது. ஆனால், அது அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட ஒரு காய் நகர்த்தலேயாகும். இது வடபகுதி மீதான அரசின் படையெடுப்பின்போது அனைத்துலக சமூகத்தைப் பார்வையாளர்களாக மாற்றியது. அத்தோடு தமிழ் குழுக்களும், யாழ். குடாநாடு மீதான படையெடுப்புக் குறித்து தமது ஆதரவுகளை தெரிவிக்கும் நிலையையும் உருவாக்கியது. ஆனால் இன்று, யாழ். குடாநாட்டில் படையெடுப்பு முடிவடைந்ததும் அரசு, அதிகாரப் பரவலாக்கம் குறித்த பேச்சுக்களின் சுருதியைக் குறைத்து வாசித்து வருகின்றது. இந்த நிலையானது, படையெடுப்பின் பின்னர் அதிகாரப் பரவலாக்கல் பற்றி உடன் பேசத் தேவையில்லை என்ற அரசின் நிலைப்பாட்டின் வெளிப்பாடேயாகும்.

இது ஒருபுறம் இருக்க பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சியோ, சந்திரிகா அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்க யோசனையானது, ஒற்றையாட்சிக்குள் அடங்கியதா? சமஸ்டி ஆட்சிக்குள் அடங்கியதா? என்ற கேள்வியில் இருந்து இன்னமும் விடுபடவில்லை. இக்கேள்விகளுக்கான அரசின் பதிலைப் பொறுத்தே தீர்வு என்ன என்பது பற்றி ஐ.தே. கட்சி தீர்மானிக்கும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதற்கும் மேலாக சந்திரிகா அரசு, ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான விசாரணையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே. கட்சியில் பலரைக் குற்றம் சாட்டும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது. இந்த நடவடிக்கை ஐ.தே. கட்சியினருக்கும், ஆளும் கட்சியினருக்கும் இடையே அரசியல் பகையை மட்டுமல்ல – தனிப்பட்ட பகைமையையும் உருவாக்கிவிடுகின்ற நிலையையே தோற்றுவித்து வருகின்றது. இது குறித்து எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, "தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்று கூறித் தமது ஆதரவைக் கோருவது போல்காட்டிக் கொள்கின்ற சந்திரிகா அரசின் அணுகுமுறையில் நேர்மை என்பதே இல்லை. நாட்டில் நடைபெற்ற உயிரிழப்புக்கு எல்லாம் ஐ.தே. கட்சிதான் காரணம் என சந்திரிகாவும், ரத்வத்தையும் சொல்லித் திரிகின்றார்கள். இதுவா எங்களது ஒத்துழைப்புக் கோருகின்ற விதம்" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த யதார்த்தத்தின் அடிப்படையில்தான் அமைச்சர் தொண்டமான், "அரசியல் தீர்வு யோசனைகள் எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது" எனக் கேள்வி எழுப்புகின்றார். இதனைப் புறக்கணித்து இன்னமும் சந்திரிகா அரசு, இனப் பிரச்சனைக்கான தீர்வு யோசனைகள் பற்றிக் கூறுவதினை யாராவது கருத்தில் கொண்டு பேச முற்படுவார்களேயானால், அவர்கள் அனைவரும் நிச்சயமாகத் தமிழ் இனத்துக்குத் துரோகமான செயற்பாட்டைக் கொண்ட, சிறிலங்கா அரசின் இன ஒடுக்குமுறைக்கு ஆதரவான சக்திகள் என்று நிச்சயமாகக் கூறலாம். ஏனெனில், அவர்கள் யதார்த்தத்தையும் உண்மையையும் புறக்கணிப்பவர்களாகவே உள்ளவர்களாகும். ✤

## வாழ்வதற்கான.....

இன்றுள்ள நிலையைப் பார்ப்போமாக இருந்தால்: தமிழரின் நாகரிக மையமான யாழ் நகரிலிருந்து தமிழர்கள் வேரோடு பிடுங்கியெறியப்பட்டநிலை – அகதிகளாகத் தஞ்சம் புகும் இடங்களை நோக்கியும் இராணுவ நடவடிக்கை தொடரும் அபாயம் – இருக்க இடமில்லாமல் தமிழன் அகதியாக, அநாதையாக அலையும் அவலம் – தொடரும் விமானக் குண்டு வீச்சு, எறிகணைவீச்சு, படுகொலைகள், பொருளாதாரம், மீன்பிடி, விவசாய உள்ளீடு, அத்தியாவசிய மருந்து......... இன்னும் தமிழனைப் பட்டினிபோட்டுக் கொல்ல பல தடைகள். சந்திரிகா அரசாங்கம் தமிழர்களுக்கு என்ன செய்ய முற்படுகிறது? புவிப்பந்திலிருந்தே தமிழர்களைப் பூண்டோடு அழித்து விடக் கங்கணம் கட்டி நிற்கிறது என்பதுதான் உண்மை. பரிணாமக் கோட்பாட்டின் அடிப்ப டையில், வாழ்வதற்கான போராட்டத்தில் தமிழர்களால் தப்பிப்பிழைக்க முடியுமா?: அல்லது அழிந்து போய் விடுவார்களா? உயிர்வாழ்வதற்கான ஜீவ மரணப் போராட்டத்தில் தமிழர்கள், வாழ்வா சாவா என்பதை முடிவெடுக்க வேண்டிய கட்டத்திலுள்ளார்கள். போராடினால் வாழ்வு: பயந்தோடினால் சாவு என்பதுதான் விடையாகும். இனிமேல் வாழ்வு என்பது, தமிழீழத் தேசத்தில்தான் – இதுதான் உண்மை: இதுதான் யதார்த்தம். எனவே, தமிழர்கள் தாம் வாழ்வதற்குப் போராடியே ஆகவேண்டும். ✤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெஞ்சை விட்டகலாத நினைவுகள்



## கப்டன் சிவகாமி

அவள் ஒரு ஓட்ட வீராங்கனை. அவள் பங்குபற்றுகின்ற ஓட்டப் போட்டிகள் அனைத்திலுமே பரிசு வாங்காமல் வந்ததில்லை. எந்த நேரமும் கால்கள் நிலத்தில் படாதவாறு துறுதுறுத்தபடி பறந்து திரிவாள்.

சிவகாமி என்ற போராளி 'மின்னல்'



கபடன் சிவகாமி

என்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கையில் மணலாற்றில் வீரச்சாவடைந்ததை நினைவு கூர்ந்து, செல்வி என்ற இவளுடைய இயற்பெயர் சிவகாமி ஆனது.

இவளும் மேஜர் மதுசாவும் நெருங்கிய தோழிகள். இயக்கத்துக்கு வந்தபின் சிவகாமி தன் போராட்ட வாழ்க்கையில் மதுசாவுடனேயே இருந்தாள். அந்த உறவு, மதுசா திருமலைக் கடலுக்குக் கரும்புலியாகச் சென்ற சமயம் தனக்கும் மதுசாவுக்கும் ஒன்றாக வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அது நிறைவேறாமல் போக, தன்னைவிட்டுப் பிரிந்து போன மதுசாவுக்காய் உள்ளுக்குள் அழுதாலும் மேன்மேலும் உறுதியாய் நின்றது.

அவள் பிறந்து வளர்ந்து மீன் குஞ்சுபோல் நீந்தப் பழகிய மயிலிட்டிக் கடற்கரைக்கு ஒரு முறை போய் வந்தது அவளுக்கு மறக்க முடியாத அனுபவம். அடிக்கடி கடற்கரையில் நின்றபடி பேய் குடிகொண்ட பூமியாய் தூரத்தே தெரிகின்ற தன் ஊரைச் சுட்டிக்காட்டிக் 'நனவிடை தோய்பவள்' உண்மையாகவே அந்த வாய்ப்புக் கிடைத்த போது அங்கு போய் வந்தாள். எல்லோரிடமும் "என்ரை ஊருக்குப் போய்வந்தனான்" என்று கூறிக்கூறி மாய்ந்து போனாள்.

குழந்தைபோல எதையும் சொல்லிக் குதூகலிக்கின்ற பண்பினாலோ என்னவோ, எங்கள் சிவகாமி மனத்தளவில் ஒரு குழந்தைபோல எல்லோருக்குள்ளும் நிறைந்து போனாள்.

மேஜர் மதுசா திருமலைக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்ததை அடுத்து, அந்தக் கடலிலேயே தானும் வீரச்சாவடைய வேண்டும் என்பதை மனதளவில் வரித்துக் கொண்டாள்.

"மதுசாக்கா வெடிச்ச கடலிலதான் நானும் போக வேண்டும்" என்ற அவளது ஆசை போல, 1995.10.17 அன்று எங்கள் சிவகாமி திருமலையின் ஆழமான கடலலையோடு கரைந்து போனாள்.

அதன்போது சிறிலங்காக் கடற்படைக்குச் சொந்தமான ஒரு துருப்புக்காவிக் கப்பலும், ஒரு டோறாப் படகும், ஒரு தரையிறக்கும் கப்பலும் வெடித்துச் சிதறின, எங்கள் சிவகாமியைப் போல.

மேலும் மூன்று கரும்புலிகளையும் கடலன்னை தன்னோடு அணைத்துக்கொண்டாள். எங்களுக்குத் தெரியும் திருமலையில் புலிக்கொடி பறக்கும்வரை அந்தக் கடலன்னை தனது பிள்ளைகளைத் தனக்குள் எடுத்துக் கொண்டே இருப்பாள் என்று. அதுவரை எங்கள் கரும்புலிகள் ஓயப்போவதில்லை அந்தக் கடல் அலைகளைப் போலவே.

## கப்டன் தேவகி

அது அவளது கடைசிநாள். வைகறைக் குவியலில் ஒரு செம்பருத்திப் பூவைப் போல மலர்ந்திருந்த முகத்தோடு எமது தேவகி....... கண்ணாடிக்கு முன்னால் நின்றபடி தனது ஒட்டவெட்டிய தலை முடியைப் படிய வாரியபடி......... சிலும்பி நின்ற முடிகள் அவளது சீப்புக்குப் படிய மறுத்தன.

"அக்கா தலை படிஞ்சிட்டுதே" அவளைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. சண்டைக்குப் போக நிற்கின்ற அந்த மகிழ்ச்சி அவள்...... முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

அன்று அவள் முகமெல்லாம் சிரிப்பாகச் சென்றாள். அது அவளது கடைசிச் சண்டை. ஏன், அவளது கடைசிநாளும் கூட என்பதை நாங்கள் நினைத்திருக்கவில்லை. அவளும் நினைத்திருக்கமாட்டாள் என்றுதான் நாம் எண்ணுகிறோம். "நிறையச் சண்டைக்குப் போய்வர வேணும்" என்ற நீண்ட கனவு அவளிடம் இருந்ததை நாங்கள் அவள் வாயிலாக அடிக்கடி கேட்டோம். ஆனால், மாறாக அவளது உயிரற்ற உடல், அன்றே தலையின்றி வந்தபோது, காலை தலைபடிய வாரிய தேவகி "தலை படிஞ்சிட்டுதோ அக்கா" என்று கேட்ட தேவகி நெஞ்சுக்குள் அதிர்வாய் வந்துபோனாள்.

### தேவகி!

எல்லாவற்றிலும் மேலோங்கி நின்ற அவளது இரக்கக்குணம். அது அவளது போராட்ட வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தலை தூக்கி நின்றது.

"நேற்றுப்போட்ட அந்தப் புதுச்சேட் எங்கை தேவகி" என்று கேட்கும்போது,

முகாமுக்குப் புதிதாக வந்த பிள்ளையிடம் அதைக் கொடுத்துவிட்டு வந்து "நான்தான் குடுத்தனான் அக்கா" என்றபடி நிற்பாள்.

யாருக்காவது உதவி எனின், சட்டென்று உதவி செய்யத் தேடிச் செல்கின்ற அந்தப் பண்பினால்தான் தேவகி எல்லோருக்குள்ளும் நிறைந்திருந்தாள்.

முகாமில் எந்த உந்துருளியாவது அவளது கைப்பட்டதாகத்தான் நிற்கும். உந்துருளியில ஏறியிருந்தால் அவளது வேகமும் கூடவே, எந்த நெருக்கடிக்குள்ளும் செல்கின்ற திறமையும் அந்த வேகமும் எல்லா விடயங்களிலும் பளீரிட்டது.

எப்போதுமே புயலைப் போன்ற வேகம் அவளிடம் இருந்தது, அது அவளது மறைவிலும்கூட.......

## லெப். கேணல் அகிலா

எங்கள் போராட்ட வரலாற்றில் அவர் ஒரு தனி அத்தியாயம். எங்கள் தலைவரின் சேனைக்குள் உருவான 'அக்கினிக் குழந்தை' மெல்ல உயிர்ப்புப் பெற்றபோது, அந்த உயிர்ப்புக்காக உழைத்தவர்களில் லெப்.கேணல் அகிலாவின் பங்கும் அளப்பரியது.

அவருள் இருந்த அந்த ஆளுமை, பல்துறை விற்பன்மை, எமது தேசத்தைக் கடந்து பரந்து போன பெருமை....... அவரது தனித்துவமான இடம் நிரப்பப்பட முடியாததுதான்.

எப்போதுமே காற்சப்பாத்துக்களைக் கழற்றியறியாத கால்கள், நடந்து வரும் போது தனியானதொரு கம்பீரம் நடையிற் தெரியும். அந்த மெல்லிய உருவத்தின் வல்லமை, அதை விட உறுதியின் வலிமை, எல்லாவற்றிலுமே முன்னுதாரணமான போராளி.



லெப்.கேணல் அகிலா

### அகிலாக்கா,

எல்லாப் போராளிகளையும் தொட்டுச் சென்ற அவாது நினைவுகள். இழப்பை நெஞ்சம் ஏற்க மறுக்கும். பெயர் கூற முடியாத சாதனைகளுக்குள்ளும், இன்னும் ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கிப்போன உண்மைகளுக்குள்ளும் அவர் ஆற்றிய பங்கு, அவரது உழைப்பு........ இவை அவரை இனங்காட்ட முடியாத பக்கங்கள். எழுத்திலே வடிக்க முடியாத வரலாற்று நிகழ்வுகள்.

அவர் இயக்கத்துக்கென சேவையாற்றப் புறப்பட்ட காலங்கள் மிகநெருக்கடியானவை. போராட்ட உத்வேகங்கொண்ட பெண்களணி ஒன்று, தங்கள் தங்கள் குடும்பங்களுக்குள்ளே போராட்டம் நடத்தி வெளியே வந்து இந்தத் தேசத்துக்காய் தம்மை அர்ப்பணிக்கத் தொடங்கியது. லெப். கேணல் திலீபனினால் உருவாக்கப்பட்ட 'சுதந்திரப் பறவைகள்' அணிக்குள் அவர்கள் ஒன்று திரண்டனர். இருண்மைச் சக்திக்குள் உறங்கிக் கிடந்த மனங்களைத் தட்டியெழுப்ப அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டனர். அந்த அணிக்குள் அகிலாவும் தன்னை இணைத்துக் கொண்டார். அன்று தொட்டு இன்று வரை தனது செயல்களினால் மட்டும் தன்னை இனங்காட்டி வந்தார்.

அவரது துப்பாக்கியிலிருந்து புறப்படும் ரவைகள் எப்போதுமே இலக்குத் தவறியதில்லை. பெயர் சொல்லக் கூடிய இலக்காளர். அந்த இலக்குத் தவறாத தன்மை அவரது போராட்ட வாழ்வின் எல்லாப் பக்கங்களிலும் ஊடுருவியிருந்தது. எந்த வேலையாயினும் செய்து முடிக்கின்ற வரையில் அவரது அயராத உழைப்பு, செய்துமுடிக்க வேண்டும் என்ற ஓர்மம் அவரிடம் தனித்துவமாக விளங்கியது.

எல்லாவற்றையும் விட அவரிடமிருந்த பிரச்சினைகளை அணுகின்ற முறை வித்தியாசமானது. இந்த வேலையை எப்படிச் செய்வது? குறித்த நாட்களுக்குள் செய்து முடிக்க முடியுமா? யோசித்து யோசித்து மண்டையைப் போட்டுக் குழப்பிப் போய் அவர் முன்னால் நின்றால், இவ்வளவு நேரமும் இதற்காக போய் நின்றோம் என்ற மாதிரி செய்கின்ற வேலை இலகுவானதாகிவிடும். ஒவ்வொரு போராளியையும் சுயமாக வளர்த்தெடுப்பதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் செயலாற்றலும்...... எங்கள் நெஞ்சுக்கூட்டுக்குள் அவரை ஆழஇருத்தி விட்டது. எந்த வேலையாக ஓடி அலைந்து திரிந்தாலும் நித்திரையின்றிய இரவுகளைச் சந்தித்தாலும் தானே நேரம் ஒதுக்கி, போராளிகளுக்கு கல்வியறிவூட்டிய அந்த நாட்கள்..... எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும் என்ற அவரது கொள்கை செயலுருப் பெற்றபோது, முகாமில் அனேகமான போராளிகள் இயந்திரங்களைத் திருத்துவதிலிருந்து எவ்வாறு சுவையாகச் சமைப்பது என்பது வரை கற்றிருந்தனர்.

அவருக்குரிய வரலாற்றின் முகவுரைக்கு எடுத்துக் கொண்ட சில வரிகள் இவை. இந்த அறிமுகத்துக்குரிய லெப். கேணல் அகிலாவின் கடைசி மூச்சு 30.10.95 இல் சூரியக்கதிர் படர்ந்த காலைப் பொழுதோடு கலந்து போனது. வலிகாமத்தின் மிகப் பெரிய சமருக்குள் ஊரெழுவின்- சிவப்பு மண்ணுக்குள் குருதிதோய எங்கள் அகிலாக்கா கலந்து போனார்.

### தமிழினி,

இப்போதும்கூட குழந்தையாக அந்த உருண்டமுகம். அதேபோல இன்னும் குழந்தைத்தனம் மாறாத உள்ளம். உன்னை நினைக்கும்போது கண்கள் பனித்துக்கொள்கின்றன. நீ குரங்கு போலத் தாவி ஏறிநின்ற வலிகாமத்தின் மாமரங்கள் இந்தத் தனிமையில் உன்னை நினைத்து அழுமே. மீண்டும் வலிகாமம் செல்லும் நாளில், நீ இல்லாத அந்த இடங்கள் நிரப்பப்பட முடியாதனவாகத்தான் இருக்கப் போகின்றன.

நேற்று அந்த ஏழாலை அம்மாவின் வீட்டுக்குச் சென்றதும் அம்மா முதற் கேள்வியாக,

"பிள்ளை, அண்டைக்கு உங்களோடை வந்து கூழ் குடிச்சிட்டுப்போன பிள்ளை எங்கை" என்று கேட்டபோது, நெஞ்சைத் துயரம் அடைத்துக் கொண்டது.

யாருடனும் சட்டெனப் பழகிவிடும் பண்பினாலோ, அல்லது நீ மக்களோடு வைத்திருந்த சரியான அணுகுமுறையினாலோ என்னவோ, குறுகிய காலத்தில் நீ அவர்களுள் ஒருத்தியானாய். எத்தகைய தன்மையுள்ள மக்களையும் நீ உன்வசப்படுத்தி நின்ற தன்மை எத்தனையோ தடவைகள் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

பின் தங்கிய கிராமப்புற மக்களின் வீட்டுத்திண்ணைகளில் அந்தக் குடும்பங்களின் அங்கத்தவராய் நீ இருந்த அந்த நாட்கள். வீட்டிலுள்ள குழந்தைகளெல்லாம் உன்னைச் சுற்றியிருக்க, நீயும் அந்தக் குழந்தைகளில் ஒருத்தியாய் சிரித்து நின்ற பொழுதுகள்...... அரசியல் வேலை செய்யும் ஒரு போராளிக்குரிய மிக உயர்ந்த பொறுமையையும் சரியான அணுகுமுறையையும் உன்னிடம் நாங்கள் கண்டோம். அநேகமாக ஒருமுறை நீ சென்ற வீடுகள், அடுத்தமுறை அங்கு செல்கின்ற வேறொரு போராளியிடம் உன்னைச் சுகம் விசாரிக்கும். "கனகாலமா தமிழினியை இந்தப்பக்கம் காணேல்லை." "தமிழினியை ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லுங்கோ."

அந்த மக்களுக்கு நீ செல்லப்பிள்ளை, உடுவில் வட்டப் பொறுப்பாளராக நீ வேலை செய்தபோது நீ அந்தப் பிரதேச மக்கள் அனைவருக்கும் பரிச்சயமானவளாக இருந்தாய். அந்ம மக்களின் சாவீடு, திருமண நிகழ்வு எங்கேயாவது நீ முன்னுக்கு நின்று பெரிய மனிதத்தோரணையுடன் எதையாவது செய்து கொண்டிருப்பாய். இப்போது எங்கேயாவது அந்த மக்கள் தங்கள் தமிழினியை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். உன்னைச் சுற்றி நின்று கதை கேட்ட பிள்ளைகள் போராட்டத்துக்கு வந்திருப்பார்கள்.

நேரந்தவறாமல் உனக்குச் சாப்பாடு வேணும். ஒருபொழுதும் நீ பசிதாங்கமாட்டாய். எல்லோருக்கும் ஐஸ்கிறீம் என்றால் பிரியம். ஆனால் உனக்கு அதுதான் சாப்பாடாக

தொடர்ச்சி 18 ம் பக்கம்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிரடிப்படையின் படுகொலைகள்!

**கொ**ழும்பிலிருந்து வெளியிடப்படும் அரசியல் சஞ்சிகையான 'கவுண்ட பொயின்ற்" (ஒக். 95) இதழில் வெளியான கட்டுரை ஒன்றின் முக்கிய பகுதிகளை இங்கே தந்துள்ளோம். கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் மீது சிங்களப் படைகள் புரிந்த படுகொலைகள் பற்றிய ஆவணமாகவும் இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

கேமன் குணரட்ண என்பவர் எழுதி உள்ள 'இறைமை உள்ள அரசுக்காக" என்ற நூலினையும் - ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அத்துக்கோறல, சண்டே ரைம்ஸ் செய்தித்தாளுக்கு எழுதியவற்றையும் ஆதாரமாகக் கொண்டு இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. 'விசேட செய்தியாளர்" என்ற பெயரில் இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. ஆயினும், 'தமிழரின் நோக்கு நிலையில் இருந்து" என்ற அடைமொழி சஞ்சிகையின் ஆசிரியரால் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு இயந்திரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்டுள்ள அரச பயங்கர வாதம், எங்ஙனம் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கட்டுரை வெளிப்படுத்துகின்றது. சகல வழிமுறைகள் மூலமும் தமிழ் இன அழிப்பைத் துரிதமாய் மேற்கொள்வதற்காக அமைப்புக்களை உருவாக்கி - அதற்குப் பொருத்தமான ஆட்களை நியமித்து - அரசு எவ்விதம் அதை நிறைவேற்றுகின்றது என, இக்கட்டுரை சுட்டிக் காட்டு கின்றது.

"ஆளும் வர்க்கத்தினதும் - அரசுப் பயங்கரவாதத்தினதும் அழுகிய பழங்கள்"" என்பது அந்த ஆங்கிலக் கட்டுரையின் தலைப்பாகும். ஆயினும், இந்த அரசுப் பயங்கரவாதத்திற்கு ஒருசிலர் மட்டும்தான் காரணம் என்று கூறுவதை மறுக்கும் இந்தக் கட்டுரையாளர், அதன் அரசியல் - சமூக பரிமாணத்தையும் அந்தக் கட்டுரையில் ஆய்வு செய்துள்ளார்.

'மகாவலி அபிவிருத்திச் சபை" என்ற பெயரிலும், "தற்பாது காப்பிற்காக எல்லையோரச் சிங்களவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன"" என்ற மூடுதிரை மூலமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசு எவ்வாறு நடாத்தியது என்பதையும் - அவற்றின் பின்னால் இருந்த 'பெரிய" மனிதர்களையும் இந்தக் கட்டுரை ஆதாரபூர்வமாக அம்பல ப்படுத்தி உள்ளது.

ஆயினும், அந்தக் கட்டுரையின் நீளங்கருதியும் - அந்தத் தகவல்களின் அடிப்படைகளை எமது மக்கள் ஏற்கெனவே அறிந்து வைத்திருக்கின்றனர் என்ற காரணத்தாலும் அவற்றைத் தவிர்த்துவிட்டு, அரசுப் பயங்கர வாதத்தில் எஸ்.ரி. எவ் (விசேட அதிரடிப்படை)விற்கும், இராணுவத்திற்கும் இருந்த பங்கை நிருபணத்துடன் வெளிப்படுத்தும் பகுதிகளை மட்டும் இங்கே பிரசுரித்துள்ளோம். எந்த இராணுவ அல்லது விசேட அதிரடிப்படை அதிகாரியின் தலைமையில் - எந்தக் கிராமப் படுகொலைகள் நடைபெற்றுள்ளன, அதை எவ்விதம் அரசு மூடி மறைத்தது என்பதையும் இந்தக் கட்டுரையில் காணலாம்.

அதேவேளை, தமிழர்களை அழிக்கவெனப் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு கொலைப் படை, சிங்கள மக்களையும் கொன்று தள்ளிய கதையும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் திறமை காட்டிய வெளிநாட்டுக் கூலிப்படையின் உதவியுடன், உருவாக்கப்பட்ட எஸ். ரி. எவ்வினர், போராட்டத்தை முறியடிப்பதில் திறமை காட்டுவதற்குப் பதிலாக, தமிழ் இளைஞர்களது எண்ணி க்கையைக் குறைப்ப தற்காக அப்பாவித் தமிழர்களை நரவேட்டையாடிய துயரக் கதைகளைக் கட்டுரை தரு கின்றது. எஸ். ரி. எவ்வினர் செய்த தமிழ் இனப்படுகொலை கண்டு, அவர்களைப் பயிற்றுவித்த கூலிப்படையினரே, வெறுப்பும் - விசனமும் அடைந்தனர் என்ற தகவலும் கட்டுரையில் உள்ளது. இனி, கட்டுரையைப் படிக்கவும்.

## விசேட அதிரடிப்படை(எஸ்.ரி.எவ்)

1984இல், ரவி ஜெயவர்த்தனாவால் எஸ்.ரி.எவ். உருவாக்கப்பட்டது. சிறிலங்கா காவல்துறையின் ஒரு பகுதியாக இது விளங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சிறப்புப் பிரிவு, சேர்ணி விஜேசூரியாவை தனது முதலாவது கொமாண்டராகக் கொண்டிருந்தது. பிரித்தானிய அதிரடிப்படையான எஸ்.ஏ.எஸ் என்ற அமைப்பைப் போன்றே இதையும் உருவாக்க, ரவி ஜெயவர்த்தனா முயன்றார். இதற்காக 'கீனி மீனி சேவை' என்கின்ற அமைப்பில் பணியாற்றிவந்த, முன்னாள் எஸ்.ஏ.எஸ். வீரர்களை அவர் வாடகைக்கு அமர்த்தினார். 40 அல்லது 50 கூலிப்படையினருக்குச் சம்பளமாக மாதாந்தம், தலா 20,000 இங்கிலாந்துப் பவுண்கள் (10 இலட்சத்திற்கும் மேல்) வழங்கப்பட்டன.

கிளர்ச்சியை அடக்கவென, கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்ட எஸ்.ரி.எவ்வினர் செய்தவை, வாசிப்பதற்குப் பயங்கரமானவை. அவர்களுடைய பணிகளில் ஒன்று, தமிழ் – முசுலிம் ஒற்றுமையைச் சீர்குலைப்பது. முசுலிம் காடையர்களை ஒன்றாக்கி காரைதீவு தமிழ்க் கிராமம் மீது, 1985 ஏப்பிரல் திங்கள் 12 – 14 வரை, ஒரு பெரிய கொலைத் தாக்குதலை நடாத்துவித்தனர். இந்தப் பிரித்து வைக்கும் கொள்கையால் – அடுத்தடுத்து வந்த சில ஆண்டுகளில் – தமிழர்களும் முசுலிம்களும் பெருந்துன்பங்களை எதிர்கொண்டனர். 1985 மே 11 ஆம் நாள், ஒலுவிலில் உள்ள தமிழர்களது வீடுகளுக்கு எஸ்.ரி.எவ்வினர் தீ மூட்டினர். 1985 மே 17ஆம் நாள், நாய்ப்பட்டி முனையிலிருந்து, 23 இளைஞர்கள் எஸ்.ரி.எவ்வினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர். அக்கரைப்பற்றுக்கு அருகில் உள்ள தம்பாட்டி என்ற இடத்தில், இந்த 23 பேர்களது உடல்களும் புதைக்கப்பட்டன. இந்தப் படுகொலைச் சம்பவத்தை பிரசைகள் குழுத் தலைவர் போல் நல்லநாயகம் அவர்கள் பகிரங்கப்படுத்தியபோது, எஸ்.ரி.எவ்வினரின் படுபாதகச் செயல்களும் சந்திக்கு வந்தன. இதற்குப் பரிசாக பிரசைகள் குழுத் தலைவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். மனித உரிமைகள் இயக்கத்தின் உதவியால் அவர் வழக்கை வென்று விடுதலையானார். எஸ்.ரி.எவ் என்ற சொற்பதம் கிழக்கு மாகாணத்தில் பீதியூட்டும் ஒன்றாகிவிட்டது.

எஸ்.ரி.எவ் புரிந்த மிகமோசமான சம்பவமாக 'கொக்கட்டிச்சோலை' இறால் பண்ணையில் நடந்த படுகொலைச் சம்பவம் அமைந்துள்ளது. 1987 யூலை முதல் வாரத்தில், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்கட்டிச்சோலையைக் கைப்பற்ற எஸ்.ரி.எவ்வினர் ஒரு முயற்சியைச் செய்தனர். அதில் 20 படையினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, இறால் பண்ணைத் தொழிலாளர்களில் 120 பேர் எஸ்.ரி.எவ்வினரால் கொல்லப்பட்டனர். பிரபல செய்தியாளரான இக்பால் அத்தாஸ் உட்பட ஒரு குழுவிற்கு, சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. தான் கண்டது பற்றி இக்பால் அத்தாஸ் பின்வருமாறு எழுதினார். "நான் மக்களுடன் உரையாடத் தொடங்கினேன். அவர்கள் எஸ்.ரி. எவ்விற்குப் பயந்து நடுங்கிய மாதிரித் தெரியவில்லை. எஸ்.ரி.எவ் உங்களை இம்சிக்கின்றதா? என ஒருவரிடம் கேட்டேன். 'இல்லை' என அவர் தெளிவாகச் சொன்னார்." இந்த உரையாடல்களுக்குப் பின்னர், எஸ்.ரி.எவ்விற்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மைகளும் இல்லை என்று இக்பால் அத்தாசும் எழுதினார். பி.பி.சியின் கொழும்பு முகவராக அப்போது இருந்த ஜோண் றெட்டி, பின்னர் இவ்வாறு எழுதினார்: "எனக்குத் தகவல்கள் தருபவரில் ஒருவர் என்னைத் தவறாக வழி நடாத்தினார்." தமது உறவுகளை அந்தப் படுகொலைச் சம்பவத்தில் பறிகொடுத்த கொக்கட்டிச்சோலை வாசிகள் கூறினர், "........ அன்று, சுமார் 80 தொழிலாளர்களை வரிசையாக நிற்கும்படி பணித்தனர். அதன்பின்னர், திரையிடப்பட்ட ஒரு இடத்திற்கு – ஒருவர் பின் ஒருவராக – அடையாள அட்டைகளுடன் வரும்படி பணித்தனர். அப்போது ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டனர். அன்று மாலைவரை படுகொலை தொடர்ந்தது." அதைப் போன்ற சம்பவங்கள் பலவற்றில் எஸ்.ரி. எவ்வினர் ஈடுபட்டனர்.

## 1987 - 89 ஜே. வி. பி. கிளர்ச்சி

இந்திய அமைதிப்படையின் வருகையைத் தொடர்ந்து, ஜே. வி. பியின் இரண்டாவது கிளர்ச்சி ஆரம்பமானது. எஸ். ரி. எவ் தென் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அந்தக் காலத்தில் 'பச்சைப் புலிகள்' என்றொரு கொலைக் குழு தோன்றியது. இந்தக் குழுவிற்குப் பொறுப்பாக ரவி ஜெயவர்த்தனா இருந்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது எஸ். ரி. எவ்வின் ஒரு பிரிவு என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

21 – 02 – 1988 ஆம் திகதிய சண்டே ரைம்ஸ் இதழில், ரவி ஜெயவர்த்தனாவின் செவ்வியொன்று இடம்பெற்றுள்ளது. இதில், மேற்குறித்த இரு குற்றச்சாட்டுக்களையும், அவர் நிராகரித்திருந்தார். ஆயினும், ரவி ஜெயவர்த்தனாவின் சகாவான குணரட்ணா என்பவர் இவ்வாறு கூறினார்:– "........ எஸ். ரி. எவ்வினரின் போர்முறை இதுவல்ல. கள நடவடிக்கைகளில் இருந்து எஸ். ரி. எவ்வினரை விரைவாகத் திருப்பி அழைக்க வேண்டும்" என்று ரவி ஜெயவர்த்தனா என்னிடம் சொன்னார். இறுதியில் 1988 யூலை, அவர் அதில் வெற்றியும் பெற்றார்.

'ஜய நியத்தய' (வெற்றி நிச்சயம்) என்பதே எஸ். ரி. எவ்வின் கோசம். பிரிவினைவாதிகளுக்கு எதிரான வெற்றிபற்றியே ரவி ஜெயவர்த்தனா அடிக்கடி கதைப்பார். ஆயினும், சிங்களவர்களை எஸ்.ரி.எவ். படுகொலை செய்யத் தொடங்கியபோது, ரவி ஜெயவர்த்தனா பெரிதும் ஏமாந்து போனார்." இன்னொரு விதமாகச் சொல்வதானால், எஸ். ரி. எவ்வினரின் வேலை தமிழர்களைக் கொல்வது என்பதே ஆகும். ஆனால் இப்போது அது, சிங்களவர்களைக் கொன்றுவிட்டது.

## 1990 இற்குப் பின்

1990 யூன் 10இல் 'இரண்டாவது ஈழப்போர்' தொடங்கியபோது, லயனல் கருணாதிலக என்பவரின் தலைமையில், எஸ்.ரி.எவ் மீண்டும் செயற்படத் தொடங்கியது.

பொத்துவிலுக்கு அருகே உள்ள அறுகம் குடா என்ற இடத்தில் கசன் என்ற எஸ். ரி. எவ். அதிகாரியின் கீழ் ஒரு முகாம் இருந்தது. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமது பிள்ளைகளை அவர்களின் தாய்மார் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் கதைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. பின்னர் அவர்கள் காணாமற் போய்விட்டார்கள். ஓகஸ்ற் 2ஆம் நாள், எஸ். ரி. எவ்வினரின் சிபார்சிற்கு இணங்க, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சுமார் 120 தமிழர்கள், எஸ். ரி. எவ்வினரால் சுற்றி வளைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். பின்னர் பெரும் புகைமண்டலம் எஸ். ரி. எவ் முகாமுக்குள் இருந்து வான் நோக்கி எழுந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த நாட்களில், கல்லாறு கடற்கரையில் சுமார் 35 தமிழர்களை வரிசையாக நிற்கவைத்து, அவர்களை 'பவல்' கவசவாகனத்தால் நெரித்துக் கொன்றனர். திருக்கோவிலில் சுமார் 40 தலை அற்ற உடல்களும், உடல் அற்ற தலைகளும், அந்த 5 மைல் நீளத்திற்குக் கடற்கரையில் ஒதுங்கின. ரட்நாயக்கா என்பவரே திருக்கோவில் எஸ். ரி. எவ். முகாமின் பொறுப்பதிகாரியாவார். இந்த அதிகாரி பின்னர் ஏ. எஸ். பி. ஆகப் பதவி உயர்த்தப்பட்டார். இப்போது இவர் சனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவில் அங்கம் வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கரைப்பற்றிலும் இத்தகைய கொடுங்கொலைகள் நடந்தன. களுறஞ்சித் என்ற அதிகாரியின் தலைமையில், இங்கே ஒரு கொலைக்கூடம் இயங்கிவந்தது. இந்தப் படுகொலைகளுக்கு ஒரு சிலர் மட்டும் குற்றம் சாட்டப்படுவது என்பது, யதார்த்தத்திற்கு முரணானது.

## நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள அராஜகம்

1990 செப்ரெம்பர் 5ஆம் நாள், வாழைச்சேனையில் முகாமிட்டிருந்த பிரிகேடியர் பி. ஏ. கருணாதிலக தலைமையில், வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர், அங்கு அகதிகளாகக் குழுமி நின்ற சுமார் 159 தமிழர்களைக் கைது செய்து, தம்முடன் கொண்டு சென்றனர். அவர்கள் அனைவரும் பின்னர், காணாமற் போயினர். அப்போது கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த – லெப். ஜெனரல் ஜெரி. டி. சில்வா, சம்பவம் நடந்த மூன்றாம் நாள், பல்கலைக் கழக வளாகத்திற்குப் பிரிகேடியர் கருணாதிலகவுடன் சென்றார். 159 பேர் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர் என்பது ஜெரி. டி. சில்வாவிற்குத் தெரியும். ஆனால் அவர்களது நிலைபற்றி, அவர் அங்கு, எதுவும் குறிப்பிடவில்லை. ஜெரி. டி. சில்வா ஒரு நல்ல மனிதன் என்றே பலரும் நம்பினர். ஆனால் ஒரு பாரிய படுகொலையை மிகச் சுலபமாக அவர் மறைத்துவிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாக இருந்தவர் பிரிகேடியர் ஏ. எம். யூ. செனிவிரட்ணா. பிரிகேடியர் கருணாதிலகவைப் போல இவர் கெட்ட மனிதன் அல்ல என்பது பலரது நம்பிக்கை. ஆயினும், அவரது நிர்வாகத்திற்குக் கீழும் தமிழர்கள் பலர் காணாமற் போயுள்ளனர். சத்துருக்கொண்டான் பகுதியைச் சுற்றிவளைத்த ஏ. எம்.

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

www.tamilarangam.net



# இமாலயப் பொய்யும் இனப்படுகொலை எண்ணமும்

வே. பாலகுமாரன்

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவப் பிரிவான 'தேசத்தின் ஈட்டி' எனப்படும் படையணியை, முதன்முதலில் உருவாக்கிய 1961 டிசெம்பர் 16ம் நாள், மண்டேலாவால் வெளியிடப்பட்ட அறிக்கை, இவ்வாறுதான் கூறியது:

"மக்களது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. ஒவ்வொரு தேசத்தின் வரலாற்றிலும் ஒரு தருணம் வரும். அப்போது இரண்டே இரண்டு வழிகள்தான் மிஞ்சியிருக்கும். ஒன்று பணிந்து போதல். மற்றது துணிந்து போதல். அந்தத் தருணம் இப்போது தென்னாபிரிக்காவிற்கு வந்திருக்கிறது." வரலாறு உதிர்த்த பொன்மொழியிது. இங்கே தென்னாபிரிக்கா என்ற பதத்திற்குப் பதிலாக, தமிழீழம் என்ற பதத்தினை இடுவதே, எமக்கான வரலாற்றுத்தாய் வகுத்த வழியாகிவிட்டது.

வரலாற்றுத்தாய் திரும்பத்திரும்ப ஒரே செய்தியைப் பல வழிகளாலும் எமக்கு இடித்துரைக்கின்றாள். எம்மக்கள் தீர்க்கமானதொரு முடிவினை எடுத்து, பூமிப்பந்திலே புதிய தேசமொன்றைப் பிரசவிக்கும் நாளுக்காக, மிகப் பொறுமையாக அவள் காத்திருக்கின்றாள்.

"எப்போதோ முடிந்த காரியம்" என்று யோகர் சுவாமிகள் உரைத்ததாகக் கூறுவார்கள். "ஒவ்வொரு தடவையும் எல்லாவற்றையும் முதலிலிருந்து சொல்ல வேண்டியிருப்பதே இவ்வுலகின் துன்பியல் நிகழ்வு" என அறிஞர் ஒருவர் சலிப்புடன் கூறியதாகக் கூறப்படுகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும், எம் மக்கள் எல்லாவற்றையும் முதலிலிருந்து ஒருமுறை மீட்டிப் பார்க்கவேண்டிய அவசியமும், அவசரமும் இப்போது நேர்ந்துவிட்டது.

ஏனென்றால், சில தினங்களுக்கு முன்னர்தான், சந்திரிகா அம்மையார் அவர்கள் தனது மௌனம் கலைத்தார்.

"வலிகாமத்திற்கு வாருங்கள்" என வரவேற்புரை நல்கிய பின்னர் இந்தியாவின் 'ஸ்ரார்', சிறிலங்காவின் 'ஐ.ரி.வி' தொலைக்காட்சிகளுக்குத் தமிழ் மக்கள் குறித்தான தனது எண்ணப்பாட்டை இப்போது எவ்வித ஒழிவு மறைவின்றித் தெளிவாகக் கூறிவிட்டார். பொறுமையிழந்தவராக அம்மையார் திருவாய் மலர்ந்தார்: "புலிகளின் பயங்கரவாதப் போராட்டம் எனக்கு வெறுப்பையும், எரிச்சலையும் தருகின்றது. தமிழ் மக்களின் போக்கும் எனக்கு விளங்கவில்லை. புலிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டிய வரலாற்றுக் காலம் இது. ஆனால் அவர்கள் தொடர்ந்தும் அமைதி காத்தால், அவர்கள் புலிகளுக்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்றே நான் பொருள் கொள்வேன்."

இதன் பொருள் என்ன?

ஜே.ஆர் இதன் பொருளை விளக்கியிருக்கின்றார்: "எனக்கு உண்மையிலே விளங்கவில்லை. என்ன குறைபாடு அவர்கட்கு என்று புரியவுமில்லை. யாழ்ப்பாண மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றி எனக்கு அக்கறையுமில்லை. இப்போது அவர்கள் பற்றியோ, அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றியோ, அவர்களது உயிர்களைப் பற்றியோ, அல்லது தமிழர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றியோ எனக்கு எவ்வித கவலையுமில்லை."

1983 யூலை 11 ஆம் திகதி 'டெய்லி ரெலிகிராப்' இலண்டன் ஏட்டில் வெளியான செவ்வியது. அறுபதுகளில் பத்தேகம விமலவன்ச அனுநாயக்க தேரர் கூறினார்: "சிறிலங்கா பௌத்தன் எப்போதும் எவர்க்கும் எந்தத் தீங்கும் இழைத்தது கிடையாது. அந்நியரைக்கூட வரவேற்று உபசரிப்பதே சிங்கள பௌத்தனின் வழமை. போர்கள் நடந்தால் – அவை, தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு மட்டுமே எதிரானதாக இருக்கும். இவை எல்லாவற்றையும் தொகுத்து, அண்மையில் புத்த மகாசங்கத்தினரின் உத்தியோக பூர்வமாநாடு 'பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்' கூடியபோது, 1500 பிக்குகளும் ஏகோபித்துத் தீர்மானித்த 5 தீர்மானங்களும் கூறுகின்றன. சிங்கள அரசியலில் எல்லைக் கோட்டைத் தெளிவாகக் கீறின அத்தீர்மானங்கள். முதலிரண்டு தீர்மானங்கள் மூலம் தமது வரலாற்று வழிவந்த பேரினவாத நிலைப்பாட்டை மகாசங்கத்தினர் தெளிவுபடுத்தினர். சந்திரிகா அரசின் 'அமைதிப் பொதிக்கான சட்ட வரைவு என்பது எவ்வளவு முட்டாள்தனமானது எனப் பொருள்படத்தக்கதாக, இலங்கைத் தமிழர்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன என்பதைத் தமக்கு முதலில் விளங்கப்படுத்த வேண்டுமென முதல் தீர்மானம் கூறுகின்றது. இரண்டாவது தீர்மானமோ, 2500 ஆண்டுகளாகச் சிறிலங்காவே உலகின் ஒரேயொரு சிங்கள பௌத்த நாடாக இருப்பதை அரசுக்கு நினைவுபடுத்தி நிற்கின்றது.

இவ்வளவு காலமாகப் பௌத்த சாசனத்தை மக்களும், மகாசங்கத்தினரும், ஆட்சியாளரும் எவ்வாறு பாதுகாத்தனர் என்பதையும் – இன்று எப்போதுமில்லாத வகையில் பௌத்த சாசனத்திற்கும் அதன் பண்பாட்டிற்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, காலத்திற்குக் காலம் வழிதவறிப்போன சிங்களத் தலைவர்கள், முட்டாள்தனமாகத் தமிழர் தரப்போடு செய்ய முற்பட்ட உடன்பாடுகளையும் நினைவுபடுத்தி, அம்மையாரின் தீர்விலுள்ள ஆபத்துக்களை விலாவாரியாக விளக்கும் அடுத்த 3 தீர்மானங்களும், அரசியல் தீர்வு என்கிற சொல்லுக்கே சிங்களவர் வரலாற்றில் இடமில்லையென ஆப்பு வைக்கின்றனர். இறுதியில் சந்திரிகா அம்மையார் யாரைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார் என, மிக இக்கட்டான கேள்வியொன்றையும் மகா சங்கத்தினர் எழுப்புகின்றனர். இதன் பொருள் என்ன?

1978ஆம் ஆண்டு வெளியிட்ட தனது நூலான 'சிறிலங்கா –3ஆம் உலக சனநாயகம்' என்பதில், பேராசிரியர் ஜேம்ஸ் யுப் இதனை விளக்குகின்றார்.

"சிங்கள அரசியலில் எவ்வித முடிவுகளையும் இரத்துச் செய்யும் (Veto group) குழுவாக மகாசங்கமே விளங்குகின்றது."

இவ்வாறாகச் சிங்கள அரசியலில் பௌத்தமும், அரசாட்சியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, பௌத்த மகாசங்கத்திற்கும், சிங்கள ஆட்சியாளர்களுக்கும் பிரிக்க முடியாத உறவு ஏற்பட்டு, இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முண்டு கொடுக்கும் முன்னைய வரலாறே மகாவம்ச குறிக்கோளாக விரிகின்றது. இந்த மாறாத அடிப்படையே ஆங்கிலேயர் காலத்தில் பௌத்த மறுமலர்ச்சியாக, அநகாரிக தர்மபாலவின் 'மண்ணின் மைந்தர் கருத்துருவமாக உருப்பெற்றது. "சிங்கள பௌத்தருக்கு மட்டுமே நாடு உரியது", "துட்டகைமுனு பாரம்பரியமே இங்கு நிலை நிறுத்தப்பட வேண்டும்", "சிங்கள இனம் என்பது, தொன்மை மிக்க வரலாற்றினம் பிறப்பித்த இனிமையான–பண்பான–ஆரியக் குழந்தைகள்" என்றும், தமிழர் என்போர் "இந்த நாட்டை அழித்தனர்..... தொன்மை விகாரைகளை நாசமாக்கினர்...... ஏறத்தாழ புராதன இனமொன்றை அழிக்கும் நிலைக்குச் சென்றனர்......" என, தருமபாலவின் கருத்தோட்டங்களே இன்றளவும் நிலவும் சிங்கள அரசியலின் தலைவிதியைத் தீர்மானிக்கும் எல்லைக் கோடுகளாகும். 1931ஆம் ஆண்டு அவர் இறந்தாலும், அவரது கருத்தோட்டத்தைச் சிங்கள அரசியலிலே தாபனமயப்படுத்திக் காவிச்சென்ற பெருமை, சந்திரிகா அம்மையாரின் பெற்றோரையே சாரும்.

அம்மையாரின் தந்தையோ, தனது காலத்தில் விகாரைகளில் முடங்கிக் கிடந்த பன்னிரண்டாயிரம் பிக்குகளையும் 'களனி ரஜமகா விகாரை' பீடாதிபதி புத்தரகித்த தேரர் தலைமையில் 'எக்சத் பிக்கு பெரமுன்' எனப் பிக்குகள் முன்னணியாக்கி–அரசியல் மேடைகளிலே ஏற்றி, பௌத்த பிரிவேனாக்களையே வாக்கு வேட்டையாடும் தேர்தல் அலுவலகங்களாக்கினார். தாயார் சிறிமாவோ அம்மையாரோ அறுபதுகளில், தருமபாலவின் கருத்தைக் காக்கும் பாதுகாவலர் போர்வையைத் தன்மேல் போர்த்திக் கொண்டார். தனது ஆட்சிக்காலத்தில்–1965ஆம் ஆண்டு– அரச செலவிலே கல்வி, கலாசார அமைச்சுக்கூடாக ஆனந்த குருகே என்பவரைக் கொண்டு, தருமபாலவின் எழுத்துக்களை நூல் வடிவிலிட்டார். "நீதியானவற்றுக்குத் திருப்புதல்" (Return to Righteousness) எனப் பொருத்தமாகத் தலைப்பிட்டார். எனவே சிங்களவர்க்கு நீதியானதைச் செய்யாமல், செல்வாவோடு உடன்பாடு செய்ய முயன்ற டட்லியின் டட்லி–செல்வா உடன்பாட்டிற்கு எதிராக, மகாசங்கத்தை இலகுவில் சிறிமா திருப்பினார். எனவே, 1967ஆம் ஆண்டு மே மாதமளவில் டட்லி–செல்வா உடன்பாட்டிற்கு மிகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த ராமண்ய நிக்காயாவின் மகாநாயக்கரை, "தமிழர்களுக்கு ஏதாவது பிடி இந்த நாட்டிலே கொடுத்தால் சிங்களவர் எல்லாம் கடலுக்குள் குதிக்க வேண்டியதுதான்" எனச் சொல்ல வைத்தார். எனவே, இந்தக் குரலின் மறுபதிப்பை–அதன் எதிரொலியை –பங்குனித் திங்கள் 5ஆம் நாள் மகாசங்க மாநாட்டில் 'பூமிபுத்திர' இயக்க ஸ்தாபகர் மாதுலுவாவே சோபித தேரர் "சந்திரிகா அரசின் அமைதித் திட்டம் சிங்களவரைக் கடலுக்குள் தூக்கி வீசிவிடும்" என எதிரொலித்தார். இவ்வாறு, சிங்களத்தின் இன்றைய வரையிலான 2500 ஆண்டு வரலாறும் மறுபதிப்பாக – எதிரொலியாக – மாறாத சிங்களப் பேரினவாதத்தின் தாழ்வுச் சிக்கலின் ஊடாக – மாறிவிட்டது. எனவேதான், பொஸ்னிய சேர்பியர் குறித்தான வரலாற்று ஆசிரியரொருவரின் வர்ணிப்பு இப்போது சிங்களவர்க்கும் மிகப் பொருத்தமாகிவிட்டது. "அவர்கள் வரலாற்றினை மறக்கவும் இல்லை, அதிலிருந்து புதிதாக எதையும் கற்கவுமில்லை".

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், பழைய வரலாற்றின் ஒளித்தடங்களிலேயே பயணம் செய்து புதிய வரலாற்று உதயத்தைக் காணவேண்டும்.

மகாசங்கத்தை மீறமுடியாது என்பது தெரிந்திருந்தும், அவர்கள் ஆசியில்லாமல் ஒரு நாள்தன்னும் தான் பதவியிலிருக்க முடியாது என்பதை உணர்ந்திருந்தும்– ஐ.தே.கட்சி ஒருபோதும் தனது திட்டங்களுக்கு – அது எதுவாக இருந்தாலும் – ஆதரவு தராது என்பது புரிந்திருந்தும், கொழும்பில் குந்தியிருந்து நாளைக் கழிக்கும் தமிழ்க் குழுக்களால் எவ்வித பயனுமில்லை என்பது அறியப்பட்டிருந்தும், மிக நுட்பமான முறையில் பரப்புரைகளை மேற்கொண்டு பாரிய போரொன்றையே தமிழ் மக்கள் மீது திணிக்க அம்மையார் முயல்வதை, எம் மக்களால் இலகுவில் அறியமுடியும். அதே வேளை, "ஓடு மீன் ஓட, உறுமீன் வரும்வரை" காத்திருந்த ரணில், "யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கையை"க் கண்டிப்பதும், இடம்பெயர்ந்த மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிப்பதுமான வழமையான அரசியல் வித்தைகளையும் எமது மக்களால் உணர முடியும். மாசி மாதம் 22ஆம் நாள் 'சிறிகோதா'வில் ஐ.தே.கட்சியின் செயற்குழு –நாடாளுமன்றக் குழுவில் என்ன பேசப்பட்டது?


"அம்மையாரின் 'அமைதிப் பொதிக்கு ஆதரவு கொடுக்கவேண்டிய தேவை எமக்கு எதுவுமில்லை. ஒற்றையாட்சி முறையில் எந்த மாற்றத்திற்கோ, வட–கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கோ இடமில்லை". "இச் சட்டவரைவினை ஆதரித்தால், அது சிங்கள பௌத்தருக்குக் கட்சி செய்யும் மாபெரும் துரோகம்", "தமிழ் மக்களுக்கு என்ன சிக்கல்?", "இல்லாத சிக்கலுக்கு எதற்குத் தீர்வு?" என்றே மூத்த கட்சி உறுப்பினர்கள் உறுமினர். இவையெல்லாவற்றையும் தொகுத்த, சிங்களத்தின் மூத்த செய்தியாளர் மேர்வின் எழுதினார்: "பொதுஜன



தொடர்ச்சி 18 ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## அத்தியாயம் 6 இன் தொடர்ச்சி

அவன் பேசிய தமிழில் சுத்தமில்லை. அவன் சிங்களவனா? முஸ்லிமா? அல்லது சிங்களவன்போல் நடிக்கும் கூலித் தமிழனா என்பதை உய்த்துணரும் திறனும் அவளுக்கு இல்லை. மண்டபத்தில் மூடப்பட்டுக் கிடக்கும் கணவனின் உடலைக் காட்டியபடி, "என்ர புருசன் 'செல்' விழுந்து செத்துப்போட்டார். அவரை இப்படியே விட்டிட்டுப்போக மனமில்லாமல் நிற்கிறன். எல்லாரும் விட்டிட்டுப் போட்டினம்" என்று புலம்பினார்.

"நாங்களும் ஒரு அம்மா பெற்ற பிள்ளைகள்தான். நாங்கள் அவருடைய பிணத்தை எரிப்போம். நீங்கள் போய் அந்த 'ஜீப்'பில ஏறி, கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்குப் போங்க." தட்டுத்தடுமாறி, தனக்கே உரிய பாணியில் அந்தச் சிப்பாய் சொல்லி முடித்தான். தன்னைச் சுடமாட்டான் என்ற ஒரு தைரியம் வந்தது. அந்த நிலையில் வேறு என்ன செய்வது என்றும் தெரியவில்லை. அந்த இடத்தில் நின்றே, மண்டபத்தில் மூடிக்கிடக்கும் தன் கணவனைத் திரும்பிப் பார்த்தார். அவருக்கு விடை கொடுத்துச் சென்று, இராணுவ 'ஜீப்' வண்டியில் ஏறிக்கொண்டார்.

கல்வளைப் பிள்ளையார் கோவிலில் ஏற்கெனவே நூற்றுக்கும் அதிகமானவர்கள் இருந்தார்கள். அங்கு தமிழ் தெரிந்த பொலிசாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்விடத்தில் தமிழர்களைத் தொகையாகக் கண்டது ஒரு மன ஆறுதலாகவும், தெம்பாகவும் இருந்தது. கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்குப் போன பின்னர்தான் மீண்டும் அந்த வயோதிபத் தாயின் தொண்டைக்குள் தண்ணீர் இறங்கியது. உணவும் சென்றது.

நாகம்மாவுக்குக் கொடுத்த வாக்கின்படி அந்தச் சிப்பாய் நடந்து கொள்ளவில்லை. கணபதிப்பிள்ளைக் கிழவனின் உடல் அதே மண்டபத்தில் கிடந்து ஊதிப்பெருத்து---- நாறத் தொடங்கியது!

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தவுடன் முதலில் பயமாக இருந்தாலும், அவர்கள் பொதுமக்களை எதுவும் செய்யவில்லை என்பதைக் கண்டதும், 10ஆம் திகதி எறிகணை விழுந்ததும் தலைமறைவாகி விட்டவர்கள் ஒருவர் ஒருவராக, நாகம்மாள் கோவிலை வந்தடைந்தனர்.

ஆனால் கோவிலிலே யாரும் இருக்க முடியாத அளவுக்குப் பிணவாடை வீசவே, அங்கிருந்தவர்களே அகப்பட்ட மரம் தடிகளைப் போட்டுக் கொளுத்தினர். பிணத்திலிருந்து எழுந்த துர்நாற்றம் கட்டுப்படுத்தப்பட்டதே ஒழிய, பிணம் முழுமையாக எரிக்கப்படவில்லை.

மறுநாள் பகல், சீரணி நாகம்மாள் கோவிலில், அந்த குறிப்பிட்ட கொஞ்சப்பேர் இருந்தனர். சங்கானை வீதிப்பக்கம் இராணுவம் நின்றது. அந்தவேளை கட்டுடைப் பக்கமிருந்து இரண்டு இளம் வயதுக்காரர்கள்.....(இளைஞர்கள் அல்ல) கத்தி, கயிறு, சாக்குச் சகிதம் வயல் வெளியூடாகச் சைக்கிளில் கோவிலை நோக்கி வந்துகொண்டிருந்தனர். இவர்கள் தொலைவில் வருவதைக் கண்ட இராணுவம் பதுங்கியிருந்து, அண்மித்து வந்ததும் துப்பாக்கிகளுடன் ஓடிச்சென்று சுற்றி வளைத்துக் கொண்டது.

இருவரையும் கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில், துப்பாக்கி முனையில் இழுத்துச் சென்றனர். நாகம்மாள் கோவில் முற்றத்தால் இவர்கள் கொண்டுசெல்லப்படும் வேளையில், அங்கிருந்த முதியவர்களான பெண்கள், "அய்யா அதுகள் பாவம், அப்பாவிகள், சுட்டுப்போடாதீங்கோ" என்று கெஞ்சிக் கேட்டனர். "நாங்கள் அவங்களை ஒன்றும் செய்யமாட்டோம்" என்று கூறிக் கூட்டிச் சென்றனர். பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்று எவருக்கும் தெரியாது. ஆனால், சங்கானை வீதியில் சண்டிலிப்பாய் 7ஆம் கட்டையில் உள்ள சீனியர் வீட்டின் பின் விறாந்தையிலும் சுவரிலும், இரத்தச் சுவடுகள் இருந்தன. யாரோ அங்குவைத்து அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதற்கான தடயங்கள் அங்கு இருந்தன.

சீனியர் வீட்டு வேலி பிரிக்கப்பட்டு, பக்கத்தில் இருந்த அவரது மருமகனான முகுந்தனுடைய முற்றத்தால் இழுக்கப்பட்டு, முகுந்தன் வீட்டுக்கும் ஏரம்பு நாகேஸ்வரியின் வீட்டுக்கும் இடையில் உள்ள வேலியும் பிரிக்கப்பட்டு ஏரம்பு நாகேஸ்வரியின் காணி மூலையில் உள்ள மலகூடக் குழியின் ஒருபக்கச் சுவரை இடித்து வாசல் உண்டாக்கப்பட்டு – அதன் ஊடாக இரண்டு மனிதச் சடலங்கள் அந்த மலகூடக் குழிக்குள் திணித்துவிடப்பட்டிருந்தன.

அவற்றுள் ஒன்று, முழுமையாகக் குழிக்குள் விழுந்து மல்லாந்த நிலையிலும், மற்றையது தலைக்குப்புற இரண்டு கால்களும் அந்த உடைவுகளுக்கிடையே வெளியே நீட்டிக் கொண்டிருந்த நிலையிலும் காணப்பட்டன.

குடும்பஸ்தர்களைக் காணவில்லை என்று, சங்கானையில் இருந்து சிலர் தேடிவந்தனர். ஆனால் மலகூடக்குழிக்குள் கிடந்தவை அந்த இருவரது சடலங்களும்தானா? நாகம்மாள் கோவிலடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டவர்கள் வரதனும், ஐயனும்தானா என்ற விபரங்கள் எவருக்கும் தெரியாது. ஆனால், ஒருவர் கொண்டுவந்த பெண்கள் ஓட்டும் சைக்கிள் மட்டும் தொட்டிலடியில் கிடந்தது. அது எப்படி அங்கு வந்தது? உண்மையில் அவர்களிருவருக்கும் நடந்தது என்ன? இது வரையில் எவருக்கும் தெரியாது---

சீரணிக்குப் போக முடியாமற் போனதன் காரணத்தினால்,

# வித்துக்கள்

சீனியர் வீட்டிலிருந்து – முகுந்தன் வீட்டு முற்றத்தின் ஊடாக ஏரம்பு நாகேஸ்வரியின் வீட்டு மலகூடம் வரை, இரண்டு உடல்களும் இழுத்துவரப்பட்டதற்கான இரத்தச் சுவடுகளும் தடயங்களும் அடையாளங்களும் அங்கு காணப்பட்டன.

நாகம்மாக் கிழவிக்கு "நாங்களும் ஒருதாய் பெற்ற பிள்ளைதான்" என்று சமாதானம் சொன்ன சிப்பாய்களுக்கு, இந்த இருவரும்கூட யாரோ தாய்மார் பெற்ற பிள்ளைகள்தான் என்ற சித்தாந்தம் பிறக்காமல் போனது எப்படி?



'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையின் பின்னர் சங்கானைப் பகுதி மக்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்ற போதுதான், இரண்டு சடலங்கள் நாகேஸ்வரி வீட்டு மலகூடக்குழியில் கிடப்பது தெரிந்தது. இச்சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போது வாரம் ஒன்றாகிவிட்டது. அந்த அயலே தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்குப் பிணவாடை பயங்கரமாக இருந்தது. பக்கத்து வீட்டுக்காரரான முகுந்தன் முன்வந்து, மலகூடக் குழியின் சீமெந்து மூடியை அகற்றிப் பார்த்தான்....... அவை இரண்டு ஆண்களின் சடலங்கள். அவற்றில் ஒன்று, ஆணா பெண்ணா என்று அடையாளம் காணமுடியாத அளவுக்கு, அங்கங்கள் சிதைக்கப்பட்ட நிலையிலிருந்தது. அடுத்த பிணத்தின் முகம் சிதைக்கப்பட்டிருந்தது. இவை, செய்யப்பட்ட சித்திரவதைகளின் காரணத்தினால் – அல்லது ஒருவாரமாகக் கிடந்து அழுகியதால் ஏற்பட்ட மாற்றங்களாகவும் இருக்கலாம்.

காவல்துறைக்கு இவ் விடயம் அறிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து பார்வையிட்டபின், பிணங்களை எரிக்கும்படி அனுமதி வழங்கினர். பின்னர் முகுந்தன் கொக்கைச் சத்தகம் கொண்டு, தலைகீழாக வெளியே கால்களை நீட்டிக்கொண்டு கிடந்த பிணத்தை வெளியே இழுத்துப் போட்டு எரித்தார். அடுத்த பிணம் சத்தகம் போட்டுக் கொளுவினால் சிதைந்து விழும் நிலையில் இருந்ததே ஒழிய, குழியில் இருந்து அதை வெளியே எடுக்க முடியவில்லை. எனவே, அப்படியே வைத்து மண்ணெய் ஊற்றி தீ மூட்டினார்.

சில தினங்களுக்குப் பின்னர் வரதன், ஐயன் எனும் இரண்டு

வசந்தகுமாரும் உறவினரும் நாளாந்தம் வைத்தியசாலை சென்று, காயப்பட்டு வருபவர்களையும் சவச்சாலையையும் பார்வையிட்டுக்கொண்டு வந்தனர். அப்படி யாரும் கொண்டு வரப்பட்டதாகத் தகவல் இல்லை. பின்னர் 16ஆம் திகதி, வசந்தகுமார்தான் சீரணி நாகம்மாள் கோவில் மண்டபத்தில் விட்டுவந்த பேரனுக்கும் பேய்த்திக்கும் என்ன நடந்தது என்று அறிந்துகொள்வதற்காக அங்கு வந்தான். அவன் விட்டுச் சென்ற மண்டபத்திலேயே பேரனாரின் சடலம் அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் கிடப்பதைக் கண்டான்.

அம்மம்மாவுக்கு என்ன நடந்தது என்ற விபரத்தை எவரிடமிருந்தும் பெற முடியவில்லை. எனவே, மீண்டும் வைத்தியசாலை முழுவதும் சல்லடை போட்டுப் பார்வையிட்டனர். காயப்பட்டு வந்தவர்களிலோ...... பிணமாகவோ நாகம்மாள் கிடைக்காதபடியால் எறிகணை வீச்சுத் தாக்குதலில் சிதறியிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

எரிந்து அரைகுறையாக இருக்கும் உடல் முதியவர் கணபதிப்பிள்ளையின் உடல்தான் என்றும், தாமே அதனை எரித்ததாகவும், அங்கு நின்றவர்கள் கொடுத்த தகவலின் பேரில் அவரது இறப்பு உறுதி செய்யப்பட்டது, எரியாத மிகுதியாகக் கிடந்தவைகளும் உறவினர்களால் எரிக்கப்பட்டது.

கணவன் இறந்துவிட்டார் என்று நிச்சயிக்கப்பட்ட நிலையிலும், மனைவியின் உடல்தானும் கிடைக்கவில்லை என்ற நிலையிலும், இருவருக்குமாகச் சேர்த்து மரணவீடு கொண்டாடப்பட்டுவிட்டது.

கல்வளைப் பிள்ளையார் கோவிலிலிருந்த நாகம்மா, பலரிடம் சுன்னாகத்துக்குச் சொல்லி அனுப்பிய தகவல்களில் ஒன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்மணியின் உறவினருக்குத் தெரிவிக்கப்பட்டு, கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அவரை அழைத்து வந்தனர்.

இறந்துவிட்டதாக எண்ணிய அந்தத் தாயை உயிரோடு கண்டதும் பிள்ளை, பேரர்கள், உறவினர்கள் ஓடிச்சென்று கட்டிப் பிடித்து அழுதனர். அது, பொட்டிழந்து அந்தத்தாய் வந்து நிற்கும் புதிய கோலத்தைக் கண்டும் – உயிரோடு நீ இருக்கும் போதே இறந்துவிட்டதாக உனக்குச் செத்தவீடு கொண்டாடினோமே! என்ற வேதனையிலும் எழுந்த அழுகையாகும்!

## அத்தியாயம். 7

உடுவில் 'டச்' றோட்டால் சென்று, சங்குவேலியை அடைகின்றோம். "அதில் வாற சைக்கிள் கடை இருக்கிற ஒழுங்கைக்குள்ளாலதான் விசாரிச்சுக்கொண்டு உள்ளே போகவேண்டும்" என்று சொல்லியிருந்தார்கள். சைக்கிள் கடைக்காரரிடம் விசாரித்தோம். "உள்ளே வளைஞ்சு வளைஞ்சு போகவேணும், விசாரிச்சுக்கொண்டு போங்கோ" என்றுதான் அவரிடமும் பதில் கிடைத்தது.

வளைஞ்சு வளைஞ்சு போவதில் பிரச்சினை இருக்கவில்லை. யாரிடம் விசாரிப்பது என்பதில்தான் பிரச்சினை இருந்தது. ஏனெனில் வழியில் நாய் பூனையைக் கூடச் சந்திக்க முடியாமல் இருந்தது. அந்தளவுக்கு அனைத்து வீதிகளும், வீடுகளும் வெறிச்சோடிக் கிடந்தன. ஒழுங்கை ஒன்றினால் போய்க் கொண்டிருக்கும் போது, ஒரு வீட்டில் யாரோ ஒரு அம்மாள் முற்றம் கூட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. மோட்டார் சைக்கிளை நிறுத்தி அவரிடம் கேட்கலாம் என ஓராளைப் பார்க்க வந்தனான்." பையன் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது வயது போன ஒருவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். அவரை மறித்துக் கேட்டோம், 'ஐயா! இவ்விடத்தில் ஷெல் விழுந்து செத்தினமே பாலகிருஷ்ணனும் பெண்சாதியும்...... அந்த வீடு எங்க?"

"இதுதான் ஒழுங்கை, கொஞ்சம் தள்ளிப் போனால் வீடு அதிலதான் இருக்கு. ஆனால் அதுகள் ஒருவரும் அங்கை இல்லையே......" அவர் பதில் கூறிக்கொண்டிருக்கும்போது, இவரிலும் வயது குறைந்த பெரியவர் எங்களுக்கு எதிர்ப்புறமாகச் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும், "அந்தா அவரிட்டக் கேளுங்கோ, அவர்தான் அயல்வீட்டுக்காரன்" என்று கூறி அவரை மறித்து விடயத்தை விளக்கினார்.

வந்தவர் உற்சாகமாக "ஓம் நான் பக்கத்து வீடுதான்... வாங்கோவன் வீட்டை வேணுமெண்டால் போய்ப்பார்ப்போம்"

"வீட்டைப் பார்க்க வேணும் போலத்தான் இருக்குது, ஆனால் வீட்டைஒருவரும் இல்லாமல்"...... என்று இழுத்தோம்.

"அதைப்பற்றிப் பரவாயில்லை. வாங்கோ நான் கூட்டிக்கொண்டு போறன்" என்று சைக்கிளைத் திருப்பினார். டேவிட் அவரது 'கரியரில்' தொற்றிக் கொண்டார். நான் மோட்டார் சைக்கிளில் அவர்களைப் பின்தொடர்ந்தேன்.

அந்த வீட்டின் முன்னால் இறங்கினோம். முன் வளவினைக் காட்டி "இதுதான் என்ர வளவு" என்று கூறியவர், பாலகிருஷ்ணனின் வெளி வாசலை நெருங்கினார். வெளிப்படலை சங்கிலி போட்டுக் கட்டியிருந்தது.

"அடடா போக முடியாது போல இருக்கே!" என்றார் டேவிட்.

கடலாக மூடிப்போய்க் கிடந்தது. அதாலதான் இந்தமரத்துக்குக் கீழ கிடந்த பாலகிருஷ்ணனையோ பெண்சாதியையோ காணேல்ல. இந்தா இந்த இடத்திலதான் மாங்கொப்புகளுக்குக்கீழ சைக்கிளோட அதுகள் புருசனும் பெண்சாதியும் செத்துக்கிடந்ததுகள்..... இந்தா இதிலதான் கிடங்கு கிண்டிப் புதைச்சவையள்..... அது பிறகு பழுதாய்ப்போய் மணக்கத் தொடங்க, யாழ்ப்பாணத்திலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து, நல்லாய் குடிக்கக் கொடுத்துப்போட்டு பிரேதங்களைக் கிண்டிஎடுத்து பிறகு அந்தஇடத்தில வைச்சுத்தான் எரிச்சவையள். அந்தா மேலபாருங்கோ— இலைகள் எல்லாம் கருகிக்கிடக்குது."

பெரியவர் இந்த விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருக்கையில், அடுத்த வீட்டுக்கர்ரர் எம்மைக்கண்டுவிட்டு வந்தார். பாலகிருஷ்ணன் குடும்பத்தைப்பற்றி அவரிடம் விசாரித்தோம். "அன்றைக்குக் காலமை இதுநடக்குமுந்தி என்னோட கதைச்சுக்கொண்டு நின்றவர்" என்றார்.

"அப்ப நீங்கள் அந்த நேரம் வெளிக்கிட நினைக்கலையோ ஐயா?"–இது டேவிட்.

"நாங்களும் வெளிக்கிட நினைச்சனாங்கள்" ஆனால் அன்றைக்குக்காலமை ரியூசனுக்குப்போன என்ர மகள் வரவில்லை. அவவைப்பார்த்துக்கொண்டு நின்றனான்".

"அப்ப இந்தச்சம்பவம் நடந்தபோது நாங்கள் அங்கால, அந்த ஒழுங்கைக்குள்ள படுத்துக்கிடந்தனாங்கள்.

"அப்ப உங்களுக்கு இஞ்சை நடந்த சம்பவம் தெரியாதோ?"

"மரம் முறிஞ்சு விழுந்ததெல்லாம் தெரியும். ஆனால் அவை புருசனும் பெண்சாதியும் இதுக்குள்ள இருப்பினம் என்றோ, இதுக்குள்ள அகப்பட்டிருப்பினம் என்றோ நாங்கள் நினைக்கேல்ல. எல்லோரும் போய்ற்றினம் என்றுதான் நினைச்சுக்கொண்டிருந்தோம்."




நினைக்கும்போது, நேரெதிரே ஒரு இளைஞன் அந்த ஒழுங்கைக்குள்ளால் வந்து கொண்டிருந்தான். அவனிடம் "தம்பி இஞ்சை ஷெல் விழுந்து ஆட்கள் செத்தது என்று கேள்விப்பட்டம், அதைப்பற்றி உமக்கு எந்த இடம், ஆர்ஆட்கள் என்று தெரியுமா?" என்று டேவிட் கேட்டார்.

## வீழ்ந்தன

"என்ரை அக்காதான். இடம் மாசியப்பிட்டி, நாங்கள் இடம்பெயர்ந்து வந்திருக்கிறோம்" என்று பதில் கிடைத்தது.

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறோம். இது நாங்கள் விசாரித்துக்கொண்டிருக்கிற சம்பவமில்லை. இது வேறு சம்பவம் என்று தெரிந்த கொண்டாலும், அந்த விடயத்தையும் அறிந்து கொள்கிறோம்.

"பையனுடைய பெயர் இராசரத்தினம், இடம் மாசியப்பிட்டி. 9ஆம் திகதி ஷெல் அடிக்கத் தெடங்க, இவர்கள் எல்லாரும் வீட்டைவிட்டு ஓடியிருக்கிறார்கள். இவனுக்கு மூத்தவளான செல்வரசி அவர்களுக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறாள். அவளுக்கு வயது இருபது. பின்னுக்குச் ஷெல்கள் விழும் சத்தம் கேட்கவே–திரும்பிப்பாராமலே ஆளுக்காள் தாம் தப்பிக்கும் நோக்கத்தோடு முன்னுக்கு ஓடியிருக்கிறார்கள். வெகு தூரம் போனபின்புதான் திரும்பிப் பார்த்திருக்கிறார்கள். செல்வரசியைக் காணவில்லை...... ஆனால் திரும்பிச் செல்ல முடியவில்லை. 'ஷெல்' வீச்சுத் தொடர்ந்து கொண்டிருந்தது. மறுநாள் இயக்க அண்ணாமாரிட்டச் சொன்னோம்: அவையள்தான் எங்களைக் கூட்டிப்போனவை. அங்க றொட்டிலை தலை இல்லாம அக்காட உடம்பு கிடந்தது. அதைத் தூக்கிக்கொண்டு வந்துதான் எரிச்சனாங்கள்."

"சனம் இஞ்சை இருக்கப் பயந்து, எல்லோரும் குடியெழும்பி எல்லா இடமும் வெறிச்சோடிக் கிடக்கு. நீங்கள் மாசியப்பிட்டியில இருந்து இடம்பெயர்ந்து இஞ்சை இடம்பெயர்ந்திருக்கிறீங்களோ?" என்று எனது சந்தேகத்தைக் கேட்டேன்.

"நாங்கள் அம்பலந்தரவையிலதான் இப்ப இருக்கிறம். இஞ்சை பரவாயில்ல ஆதால போகலாம்...." என்று கூறியவராக, கதவுக்குப் பக்கத்தில் இறுக்கமில்லாமல் சும்மா சொருகி வைத்திருந்த நான்கு வேலிமட்டைகளை உருவி, உள்ளே செல்ல வழி ஏற்படுத்தினார்.

'வீட்டுக்காரர் இல்லாமல், நாங்கள் இப்படி உள்ளே போறது சரியில்லைப் பாருங்கோ" –டேவிட்டின் அங்கலாய்ப்பு.

'நான்தானே கூட்டிக்கொண்டு போறன். அவன் சொந்தக்காரனே இப்ப இல்லை, நீங்கள் நல்ல விசயமாய்த்தானே வந்திருக்கிறீங்கள்...... பயப்பிடாமல் வாங்கோ, அது நானல்லோ பொறுப்பு" என்று கூறி, எங்கள் பதிலையும் எதிர்பார்க்காமல் அந்தப் பொட்டுக்குள் நுழைந்து உள்ளே போனார். அவரைத் தொடர்ந்து டேவிட், டேவிட்டைத் தொடர்ந்து நான் உள்ளே......!

அந்த வீடு வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. பெரியவர் பேசினார். "இந்தா இதிலதான் அந்தப் பெரிய மாமரம் நின்றது. ஷெல்வந்து மாமரத்திட கவருக்குள் விழுந்திருக்க வேணும்... சம்பவம் நடந்த நாளுக்கு மறுநாள் நான் உள்ள வந்து பார்க்கேல்ல. வெளியில நின்று பார்த்த பொழுது மாமரம்தான் விழுந்து அப்படியே



அந்தப்பிள்ளைகளுடைய பெயர் விபரங்களையும், அவர்கள் இப்போது இருக்கும் இடத்தையும் நாம் கேட்க, அவர் தன்வீட்டு முற்றத்தில் நின்று எங்களையே பார்த்துக்கொண்டுநின்ற மகளைக்கூப்பிட்டார். அவள் ஓடிவந்தாள். "இவவைத்தான் ரியூசனாலை வரேல்ல என்று எதிர்பார்த்துக்கொண்டு நாங்கள் நின்றனாங்கள்" என்றவர், அந்தப்பிள்ளையிடம் பாலகிருஷ்ணனின் பிள்ளைகளின் பெயர் விபரங்களைக் கூறும்படி சொன்னார். அவள் சொல்லச்சொல்ல குறித்துக்கொண்டேன். கோண்டாவிலில் சசிகுமாரன் வீதியில் இருப்பதாகவும், அங்கு சென்று விசாரிக்கும்படியும் கூறினார்கள்.

நாங்கள் புறப்பட்டோம். சம்பவங்களை

தொடரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தாயகம் நோக்கிய பயணம்

## லியோன் யூரிஸ்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஐந்து

( தொடர்ச்சி )

மார்க்கும் கிற்றியும் பலமாக மூச்சிரைத்த படியே தங்களுடைய மேசைக்குச் சென்று அமர்ந்தார்கள். "நான் கடைசியாகச் சம்பா நடனம் (Samba Dance) ஆடிய நேரம் உனக்கு நினைவிருக்கிறதா?" அவள் கேட்டாள். "பழம்கிழவியான நீ, பரவாயில்லாமல் ஆடுகிறாய்."

மார்க் அறையைச் சுற்றிப் பார்வையிட்டான். அறையானது இராணுவ காக்கிச் சீருடைகளிலும், வெள்ளைச் சீருடைகளிலும் இருந்த இராணுவ அதிகாரிகளாலும், அவர்களது கீழ்மட்ட மேல்மட்ட ஆங்கிலத் தொனிகளாலும் நிறைந்திருந்தது. மார்க் இப்படியான இடங்களை மிகவும் விரும்பினான். பணியாளன் இன்னொரு சுற்று குடிவகைகளைக் கொண்டு வந்ததும் அவர்கள் தங்கள் 'கிளாஸ்'களை மெலிதாக இடித்துக் கொண்டனர்.

"கிற்றிக்காக அவன் எங்கிருந்தாலும்" மார்க் தொடர்ந்து கேட்டான் "அம்மையார் இனி என்ன செய்வதாக நோக்கம்!" தோளைக் குலுக்கியபடி கிற்றி சொன்னாள். "ஒன்றும் தெரியவில்லை மார்க், சலோனிக்காவில் எனது வேலை முடிவடைந்து கொண்டிருக்கிறது. எனக்குத் தொடர்ந்து என்ன செய்வது என்பது பிரச்சினையாக இருக்கிறது. எனக்கு பல வேலை வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை அலுவலாக ஐரோப்பாவெங்கும் கூடப் போகலாம்."

"அது ஒரு அழகிய யுத்தம் தான். ஏராளமானவர்கள் அநாதைகளாய் போய்விட்டனர்."

"ஆனாலும் எனக்கு, இங்கு சைப்பிரசிலேயே தொடர்ந்து இருக்கக்கூடியதாக நல்ல வேலை வாய்ப்பொன்று நேற்றுக் கிடைத்திருக்கிறது" கிற்றி சொன்னாள்.

"சைப்பிரசில்?"

"பாமாகுஸ்ராவை சூழ சில அகதி முகாம்களை வைத்திருக்கிறார்கள். யாரோ அமெரிக்கப் பெண்ணொருத்தி என்னோடு தொடர்பு கொண்டாள். ஏற்கனவே இருக்கும் முகாம்களில் நெருக்கடியாயிருப்பதால், வேறு புதிய முகாம்களை லார்நாகா (Larnaca) செல்லும் பாதையில் ஏற்படுத்தப் போகிறார்கள். அவற்றைப் பாரமெடுக்கும்படி என்னிடம் கேட்டுக் கொண்டாள்.

மார்க் முகத்தைச் சுழித்துக் கொண்டான்.

"உன்னை விமானத்தில் சந்திக்க முடியாமல் போனதற்கு அதுவுமொருகாரணம். நேற்று அவளைச் சந்திப்பதற்காக நான் பாமா குஸ்ராவிற்குச் சென்றிருந்தேன்."

"நீ அவளுக்கு என்ன முடிவு சொன்னாய்?" நான் அவருக்கு மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அவர்கள் யூதர்கள். யூத சிறுவர்களும் மற்றைய சிறுவர்களைப் போலத்தான். ஆனாலும் ஏராளமான அரசியல் கலந்திருக்கிறது. அத்தோடு அவை ஐக்கிய நாடுகள் ஆதரவிலும் இல்லை".

மார்க் மௌனமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தான். கிற்றி விசமத்தனமாகக் கண்டபடி அவன் மூக்கில் கீழ் விரல்களால் சேட்டைவிட்டபடியே சொன்னாள். "இவ்வளவு கடுமையாக யோசிக்க வேண்டாம். உன்னை ஏன் விமானத்தில் சந்திக்க வர முடியவில்லை என்ற மற்றக் காரணத்தை நீ அறிந்துகொள்ள வேண்டாமா?

"நீ கலவரப்படுவது போன்று நடிக்கிறாய்."

"ஆமாம் நான் அதுபோல்தான் உணர்கிறேன். மிஸ்டர் பார்க்கர் நான் எனது காதலனை வழியனுப்பி வைக்க பாமாகுஸ்ரா சென்றிருந்தேன். உனக்கு என்னைத் தெரியும்தானே. ஒரு காதலன் கப்பலில் பிரிந்து செல்லும்போது, அடுத்த காதலன் விமானத்தில் வந்திறங்கினான்."

"நீயாக விடயத்துக்கு வந்தபடியால் நீயே சொல். சைப்பிரசுக்கு உன்னோடு வந்த மனிதன் யார்?"

"ம்.. ம்."

"பிரிட்டிஷ் ராணுவத்தின் கேர்ணல் ஹோவார்ட் ஷில்லிஸ் தான்.

"உங்களுக்கிடையில் ஏதாவது " மார்க் இழுத்தான்.

"சீ கழுதை.. அவன் எரிச்சலூட்டுமளவுக்கு நல்லவனாயிருந்தான்."

"எங்கே இந்த ஆளைச் சந்தித்தாய்?"

"சலோனிக்காவில் சந்தித்தேன். அங்குள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்துக்குப் பொறுப்பாக இருந்தான், நான் அனாதைகள் இல்லத்தைப் பொறுப்பேற்றபோது எங்களுக்கு எல்லாமே பற்றாக்குறையாக இருந்தது. கட்டில்கள், மருந்துகள், உணவு, போர்வைகள் எல்லாமே. அவனிடம் உதவி கேட்டுச் சென்றபோது ஒரு தடங்கலுமில்லாமல் உதவி செய்தான். அதனால் நாங்கள், எப்போதைக்கும் நண்பர்களானோம். அவன் மிக நல்ல மனிதன்."

"தொடர்ந்து சொல்லிக் கொண்டிரு. இப்போதுதான் நல்ல கட்டம் வருகிறது."

"அவனுக்கு சில வாரங்களுக்கு முன் பலஸ்தீனத்துக்கு மாற்றல் கிடைத்தது. அத்தோடு லீவும் கிடைத்தது. என்னோடு இங்கு செலவழிக்க விரும்பினான். நான் கடந்த பதினெட்டு மாதங்களில் ஒரு நாள் கூட லீவு எடுக்கவில்லை என்பதை முற்றாக மறந்து போய் விடுமளவிற்கு கடுமையாய் வேலை செய்தேன். ஆனால் அவனுடைய லீவு, குறைக்கப்பட்டு இன்றே கப்பலில் பலஸ்தீனம் செல்ல, பாமாகுஸ்ராவிற்கு செல்ல வேண்டியதாயிற்று."

"எதிர்கால திருமதி ஹில்லிஸ் ஆகக்கூடிய வாய்பேதாவது...?

கிற்றி மறுத்து தலையை ஆட்டியபடியே சொன்னாள்:

"நான் அவனில் அன்பாயிருக்கிறேன். ஆனால் காதலிக்கவில்லை. அவன் தன்னை மணந்து கொள்ளும்படி கேட்க, அருமையான பின்னணிக்கா சைப்பிரசுக்கு கூட்டிக் கொண்டு வந்தான்."

"அப்படியானால்"

"நான் ரொம்மை மிகவும் காதலித்தேன். இன்னொருமுறை காதலை. அந்த விதத்தில் பகிர்ந்து கொள்ள முடியாது."

உனக்கு இப்போ இருபத்தெட்டு வயதாகிறது கிற்றி. நீ வாழ்க்கைப்பட்டு ஓய்வெடுக்க நல்ல நேரம்."

"எனக்கு எந்தவிதக் குறைபாடும் இல்லை. நான் சந்தோசமாக இருக்கிறேன். மார்க் நீயும் பலஸ்தீனம் செல்கிறாய் அல்லவா. ஏராளமான அதிகாரிகளும் இங்கிருந்து பலஸ்தீனம் செல்கிறார்கள்."

"கிற்றி ஒரு யுத்தம் நடக்கப் போகிறது."

"ஏன்? எனக்கு விளங்கவில்லை."

"அதற்குப் பல காரணங்களுண்டு. உலகில் ஏராளமானவர்கள் தங்கள் வாழ்கையைத் தாமே நடத்திக் கொள்ள வேண்டுமென முடிவெடுத்து விட்டார்கள். குடியேற்ற நாடுகள் என்ற சொல் இந்த நூற்றாண்டில் வழக்கிழந்தே போகலாம். இங்குள்ள போர் வீரர்கள் அணையப் போகும் ஆட்சிக்கு முட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிய சாம்ராஜ்யத்தின் போர் வீரன் இதோ" என்று கூறி தனது சட்டைப்பையிலிருந்து ஒரு புதிய டொலர் நோட்டு ஒன்றை வெளியே எடுத்துக்காட்டினான். இப்படிப்பட்ட பச்சைப் போர்வீரர்கள் (டொலர் நோட்டுப் பச்சை நிறமானது) உலகின் சகல மூலை முடுக்குகளிலும் நுழைந்துவிட்டார்கள். முன்னெப்போதாவது கண்டிருக்காத ஒரு வெற்றிப்படை. இரத்தம் சிந்தாத வெற்றி. ஆனால் பலஸ்தீனம்... அதன் கதைவேறு. பலஸ்தீனத்தைப்பற்றி பயமூட்டும் அம்சம் ஏதோ இருக்கிறது கிற்றி, சில ஆட்கள் இரண்டாயிரம் ஆண்டு எங்கேயென்று தெரியாமல் இருந்த ஒரு நாட்டை, மீள உயிர்ப்பிக்க முயற்சிக்கிறார்கள். இப்படியாக எதுவும் இதுவரை நடந்ததில்லை. ஏன் அதிகம், அவர்கள் கட்டாயம் அதைச்செய்து முடிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். நீ வீரும்பாத அதே யூதர்கள்தான் அவர்கள்."

"நான் அவர்களை விரும்பவில்லை எனக்கூறவில்லை." கிற்றி வலியுறுத்திச் சொன்னாள்.

"நான் இப்போ உன்னோடு வாதாடவில்லை. நன்றாக யோசித்துப்பார். ஏதாவது வழக்கமாக நடைபெறாத சம்பவங்கள் எதையும் கண்டாயா? அல்லது கேள்விப்பட்டாயா?"

தன் உதடுகளைக் கடித்தபடியே பெருமூச்சை விட்டபடி கிற்றி, "அகதிகள் முகாம்கள் மட்டும்தான். அவைகளில் சரியான நெருக்கடியாம். சுகாதாரநிலைமைகள் படுமோசமாம் ஏன் கேட்கிறாய்?" என்றாள்.

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை, ஏதோ பெரிய விசயம் ஒன்று சைப்பிரசில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று மட்டும் என் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டிருக்கிறது."

"உன்னுடைய தொழிலே சந்தேகப்படுவதுதானே, அதை ஏன் ஒத்துக்கொள்கிறாய் இல்லை."

"இது அதைவிட அதிகம். உனக்கு மேஜர் பிறெட் கால்ட்வெல்லைத் தெரியுமா? பிரிகேடியர் சுதர்லாண்டுக்கு உதவியாய் இருப்பவன்.

"பயங்கரமான எரிச்சலூட்டும் பேர்வழி. ஆளுனர் மாளிகையில் சந்தித்திருக்கிறேன்."

"நீ வரும் முன்பு அவன் என் அறைக்கு வந்திருந்தான். நான் இறங்கிய பத்து நிமிடத்துக்குள், ஒரு சிறிய சாட்டை வைத்துக்கொண்டு ஒரு ஜெனரலின் உதவியாளன் ஏன் என் அறைக்கு வரவேண்டும்? கிற்றி நான் உனக்குச் சொல்லுகிறேன். ஏதோ விடயத்தைப்பற்றி பிரிட்டிஷ்காரர்கள் பதற்றமாயிருக்கிறார்கள். எனக்கு என்னவென்று சொல்ல முடியவில்லை. அந்த அகதி முகாம்களைப் பற்றியதுதான் அது என்று பந்தயம் கட்டினால் இரு மடங்கு பணம் கிடைக்கும் என நினைக்கிறேன். எனக்காக சில வாரங்கள் அந்த அகதிமுகாம்களில் வேலைக்குப்போக முடியாதா?"

"நிச்சயமாக மார்க்... நீ விரும்பினால் கட்டாயமாகச் செல்கிறேன்."

"அந்த விடயத்தைவிட்டுவிடுவோம். நாங்களிருவரும் இப்போ விடுமுறையில் நிற்கிறோம். நீ சொன்னது சரிதான். தொழில்படி சிறிது சந்தேகப்பட்டேன். அதை மறந்துவிட்டு நாம் சிறிது நடனமாடுவோம்." கிளாசைக் கீழே வைத்தபடி மார்க் சொன்னான். ✻

தொடரும்.

முன்னெப்போதாவது கண்டிருக்காத ஒரு வெற்றிப்படை. இரத்தம் சிந்தாத வெற்றி. ஆனால் பலஸ்தீனம்... அதன் கதைவேறு. பலஸ்தீனத்தைப்பற்றி பயமூட்டும் அம்சம் ஏதோ இருக்கிறது கிற்றி, சில ஆட்கள் இரண்டாயிரம் ஆண்டு எங்கேயென்று தெரியாமல் இருந்த ஒரு நாட்டை, மீள உயிர்ப்பிக்க முயற்சிக்கிறார்கள். இப்படியாக எதுவும் இதுவரை நடந்ததில்லை. ஏன் அதிகம், அவர்கள் கட்டாயம் அதைச்செய்து முடிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். நீ வீரும்பாத அதே யூதர்கள்தான் அவர்கள்.""

"நீ அவளுக்கு என்ன முடிவு சொன்னாய்?"" நான் அவருக்கு மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அவர்கள் யூதர்கள். யூத சிறுவர்களும் மற்றைய சிறுவர்களைப் போலத்தான். ஆனாலும் ஏராளமான அரசியல் கலந்திருக்கிறது. அத்தோடு அவை ஐக்கிய நாடுகள் ஆதரவிலும் இல்லை".
மார்க் மௌனமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தான். கிற்றி விசமத்தனமாகக் கண்டபடி அவன் மூக்கில் கீழ் விரல்களால் சேட்டைவிட்டபடியே சொன்னாள். "இவ்வளவு கடுமையாக யோசிக்க வேண்டாம். உன்னை ஏன் விமானத்தில் சந்திக்க வர முடியவில்லை என்ற மற்றக் காரணத்தை நீ அறிந்துகொள்ள வேண்டாமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பல்லி சொன்னது

# நன்மைக்கே

**பு**ளியமரத்தின் கீழ் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த தினேஸ் அழுதுகொண்டு ஓடி வந்தான். அதைக்கண்ட என் மனைவி துடித்துப் பதைத்து என்னப்பன்.... என்னடா குஞ்சு எனக்கேட்டவாறு ஓடினாள். தன் சீலைத்தலைப்பால் தினேசின் கண்ணீரைத் துடைத்தவாறு என்னடா குஞ்சு என ஓர் அன்னைக்கே உரிய தோறணையிற் கேட்டாள். அதில நிற்கிற அந்த வீட்டுக்காற அண்ணை அடிச்சுப்போட்டுது எனத் தனது



பிஞ்சுக்கை ஒன்றை நீட்டியவாறும் மறுகையால் கண்ணைக் கசக்கியவாறும் தினேஸ் முறைப்பாடு செய்துகொண்டு நின்றான். தினேஸ் அடையாளம் காட்டிய அந்த இளைஞன் புளி மரத்தின் கீழ் பயந்து நடுங்கிக்கொண்டு நின்ற மற்றைய சிறுவர்களை ஏதோ பேசிக் கலைத்தவாறு தனது வீட்டின் வாசலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

இந்தப் பிள்ளை உங்களுக்கு என்னடா செய்தது, என வாய்க்கு வந்தபடி பேச வெளிக்கிட்டாள். அவனும் பதிலுக்கு என்ன செய்ததோ? உன்ர பிள்ளை புளியமரத்துக்கு எறியுது. அட எங்கட காணியில இருந்துகொண்டு நடப்புக் காட்டுகினம் என அவனும் வாயல் வந்ததைச் சொல்லிச் சென்றான். நாளை விறகு வெட்டச் செல்லவெனக் காற்றுப் போன சைக்கிள் ரியூப்பை ஒட்டிக்கொண்டு இருந்த நான் இது பெரிய சண்டையாக வந்தாலும் என்று, என் மனைவியைப் பார்த்து, "இஞ்சை பாரும் இது குழந்தைப் பிள்ளையளின்ர சண்டை. அதுக்கேன் நீ இப்ப இப்படிக் கத்திறாய். இடம் பெயர்ந்து வந்து அதுகளின்ர காணியில இருக்கிற நாங்கள் கொஞ்சம் பொறுமையா இருப்பம்," எனச் சமாதானப்படுத்தினேன்.

அவளின் ஆத்திரம் இப்போ என்மீது திரும்பியது. இஞ்சை பாருங்கோப்பா, பிள்ளையின்ர கன்னத்தை, ஐந்து விரலும் அப்பிடியே பதிஞ்சுபோய்க்கிடக்குது. தினேசின் தலையை என்பக்கமாகத் திருப்பினாள். இண்டைக்கு மட்டுமே இது நடக்குது. நீங்கள் வீட்டில இருந்தாற்தானே உதுகள் தெரியும். நாங்கள் படுகிற பாடு, கிணத்துக்குத் தண்ணி அள்ளப்போனா ஒரு சொட்டைக் கதை, இதால போய்வரேக்க ஒரு செருமல், முறைச்சுப் பாக்கிறது, அவையின்ர குப்பை எல்லாத்தையும் கொண்டுவந்து எங்கட வீட்டுக்கு முன்னால கொட்டுறது. இந்தச் சின்னனுகளுக்கு அடிக்கிறது. இப்பிடிக்கொஞ்ச நஞ்சமே உதுகள் செய்யுதுகள். அநியாயம் எனப் பெரிய குற்றப் பத்திரிகை ஒன்றை வாசித்து முடித்தாள்.

மனைவி எனக்குச் சொல்லுவதை வேலி ஓரமாக நின்று கேட்டுக்கொண்டு நின்ற காணியின் உரிமையாளர் "ஓதுறா, ஓதுறா, அவர் எங்களுக்கு என்ன் செய்யுறதாக்கும்" எனப் புறுபுறுத்தவாறு சென்றுகொண்டிருந்தார். "அண்ணை" என அவரை இடைமறித்துப் "பனையாலை விழுந்தவனை மாடு ஏறி மிரிச்ச மாதிரி" எண்டு ஒரு பழமொழி இருக்கு. அதுமாதிரி இருக்கு உங்களின்ர நடவடிக்கை. நாங்கள் வலிகாமத்தில் எங்கட உடமைகள், காணியள், கால்நடை என எல்லாத்தையும் இழந்து எங்கட இனம் சனம் உறவுகளை எல்லாம் பிரிஞ்சு தாங்கமுடியாத வேதனையோடை உயிரை மட்டும் கொண்டு ஓடிவந்திருக்கிறம். உங்களைப் போல வசதியான ஆட்கள் தானே எங்களைப்போல வந்தவைக்கு உதவிசெய்யவேணும். நாங்கள் என்ன உங்கட காணியில கன நாளைக்கே இருக்கப்போறம். ஒரு கொஞ்சநாளைக்குத் தானே அண்ணை. நாங்களும் எங்கட பாடும் எண்டு இருக்கிறம். ஏன் இப்படி எங்களைக் கொடுமைப்படுத்துறியள்" என பண்பான முறையில் கதைத்துக்கொண்டு இருக்கும்போது "உதுகளோட உங்களுக்கு என்னப்பா கதை, நீங்கள் வாங்கோ. அடுத்த மாதம் முடிமிறதுக்கிடையில எங்கட காணியில இருந்து எழும்பிட வேணும். எங்கட மூத்தவன் வெளியில இருந்து வாறான். அவனுக்கு கலியாண வீடு செய்யவேணும்" எனக்கூறிய எனக் கூறிய மனைவியும் அவரும் உள்ளே சென்றனர்.

"என்ன மகனுக்கும் நாங்கள் இருக்கிற காணிக்குமே கலியாண வீடு, எனக் கேட்க வேண்டும்போல இருந்தது. ஆனால் மனித நேயமே இல்லாத அந்த மிருகங்களுடன் கதைத்தால் நானும் மிருகமாக மாறவேண்டி வரும் என்பதால் எல்லா ஆத்திரங்களையும் அடக்கிக் கொண்டேன். அட எதிரியின் செல்மழை, விமானங்களின் குண்டு வீச்சு என எதிரியின் அழிப்பில் இருந்து தப்பி எங்கட இனம் என்று வந்த எங்களை இப்படிச் செய்யுதுகளே சீ..... நாவற்குழிப் பாலத்தடியில் வரும்போது அவன் புக்காரா போட்ட குண்டு எங்கட தலையில விளுந்திருந்தால் ஒரு பிரச்சினையும் இல்லை. கோதாரிவிழுவார், இவங்கள் எங்கட மண்ணை ஆக்கிரமிச்சதாலதானே நாங்கள் இப்படிக் கஷ்டப்பட வேண்டிக் கிடக்கு. இவங்கள் எப்ப துலையுறாங்களோ அண்டைக்குத்தான் மனுசனுக்கு நிம்மதி" எனச் சபித்துக்கொண்டேன்.

நாளைக்கு விறகு வெட்டப் போகவேண்டியதால் எனது பழைய அந்தச் சயிக்கிளின் திருத்த வேலையில் மூழ்கியிருந்தேன். வலிகாமத்தில் இருந்து வரும்போது கொண்டு வந்த பொருட்களில் இந்தச் சயிக்கிள் கட்டையும் ஒன்று. மற்றது அடையாள அட்டை, நிவாரண அட்டை என்பன மட்டுமே. அவசர அவசரமாக வெளியேறியதால் உயிர் தப்பினாற் போதும் என்ற நிலையில் வேறு ஒன்றையும் எடுக்க முடியவில்லை. பலமுறை இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து வந்ததனால் பெறுமதியான சொத்து என்று ஒன்றும் இல்லை. பாய், படுக்கை, சமையற் பாத்திரங்களைத் தவிரத் தினேசை மட்டும் சயிக்கிள் வாரில் வைத்து உருட்டிக்கொண்டு வந்தேன். இவைகளை நினைத்தவாறு எனது வேலையில் மூழ்கி இருந்தேன். இஞ்சருங்கோப்பா ஒருக்கா சங்கக்கடைக்குப் போட்டு வாறியளே. நேற்றும் கடனாகத்தான் ஒரு சுண்டு அரிசி வேண்டிச் சமைச்சனான். அதுவும் இண்டைக்கு என அதுகள் வைச்சிருந்த அரிசி. இண்டைக்குத் தாறன் எண்டு சொல்லித்தான் வேண்டினனான். இந்த நிவாரணக் காட்டைக்கொண்டு போய் சங்கக் கடையில சாமான் குடுக்கிறாங்களாம், வாங்கி வாங்கோ என நிவாரண அட்டையை என்கையில் தந்தாள். அந்த அகதி அட்டையைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆத்திரமாகத்தான் இருந்தது. எத்தின நாளைக்கு இந்த அகதி அட்டையும் நிவாரணமும் கொண்டு வாழப்போறம் என நான் நினைக்க முகட்டில் இருந்த பல்லி சொச்... சொச்... எனச் சொன்னது. "பல்லி சொல்லுது, கொஞ்சம் பொறுத்துப் போங்கோப்பா" என மனைவி மறித்தாள். "இல்லையப்பா நான் இந்த அகதி அட்டையும், நிவாரணமும் எண்டு எத்தினை நாளைக்கு வாழுறது எண்டு நினைச்சனான். அதுதான் பல்லி சொல்லி இருக்கு. ஏதோ நல்ல காலம் வரப்போகுது போல" என நான் சொல்லியவாறு வெளிக்கிட எம்மைக் கொண்டு வந்து குடியிருத்திய போராளி வணக்கம் அண்ணை எனச் சொல்லியவாறு வந்து, சயிக்கிளை விட்டு

**—ஊரான்**

இறங்கினார். அண்ணை இண்டைக்கு கருத்தரங்கு ஒண்டு இருக்குது வாசிகசாலையில. இந்தக் காணியில இருக்கிற இடம் பெயர்ந்த ஆட்கள் எல்லேரிட்டையும் சொல்லிக் கூட்டிக்கொண்டு வாங்கோ. சரியா 3 மணிக்கு வந்தாச்சரி எனச் சொல்லி முடிக்க முன்பு என் ஆவலை அடக்க முடியாமல் " ஏன் தம்பி என்ன விசயம்." எனக்கேட்டேன். நல்ல விசயம்தான் வன்னிக்குப் போறதைப்பற்றி ஒரு விளக்கக் கூட்டம் எனச் சொல்லியவாறு, "அண்ணை, போட்டுவாறன். வேறை இடங்களுக்கும் போக வேணும்" எனச் சொல்லியவாறு சயிக்கிளை மிதிக்கத் தொடங்கினார்.

அட வலிகாமத்தில அகோர சண்டை நடக்குது. எங்களை எல்லாம் பாதுகாப்பாய்ப் போங்கோ எண்டு சொல்லிப்போட்டு அதுகள் நிண்டு சண்டை பிடிக்குதுகள். வாழவேண்டிய வயதில எங்களுக்காக உயிரைக் கொடுத்துச் சண்டை பிடிக்கிறதும் இல்லாம இடம்பெயர்ந்து வந்து இருக்கிற இலட்சக் கணக்கான மக்களையும் கவனிக்கிற வேலையும் செய்யுதுகள். சண்டைக்கே ஆக்கள் இல்ல. அதுக்க இந்தவேலையும் எண்டால் கடவுளே இந்தக் கஷ்டம் எல்லாம் விளங்காமல் எளியதுகள் சிலதுகள் தேவையற்ற கதை , எல்லே கதைக்குதுகள். உதுகளுக்கு வாயில புத்துத்தான் எழும்பும் என மனதில் எண்ணியவாறு வாசிகசாலையை நோக்கி நடந்துகொண்டிருந்தேன். வாசிகசாலையில் இடம்பெயர்ந்து வந்த மக்களிற் பலதரப்பட்டவர்களும் ஒன்று கூடி இருந்தனர். சரியாக 3.10 மணிக்கு இரண்டு போராளிகள் சயிக்கிளில் வந்தனர். இரண்டு நிமிட அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது. வன்னிக்குப் போகவேண்டியதன் தேவையையும் சாவகச்சேரிப் பகுதியில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி, சுகாதாரப் பிரச்சினைகள், இராணுவத்தின் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை, கிளாலியைத் தடை செய்து மக்களை தமது பிடிக்குள் கொண்டுவருவது எப்படி என்பன போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தனது கருத்துக்கள் முடிவடைந்ததும் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேள்வி கேட்கலாம்" எனக் கூறியவாறு கதிரையில் அமர்ந்து கொண்டார். அமைதியாக இருந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் குசுகுசுவென உரையாடினர். பலரின் முகங்களிற் சந்தோசக் குறி தெரிந்தது. சிலரின் முகங்களில் கடுகடுப்புத் தெரிந்தது. ஆனால் எனக்கோ அளவு கடந்த மகிழ்ச்சி. "கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கோ" என போராளி மீண்டும் ஞாபகமூட்டினார். ஒருவர் எழுந்தார். எல்லோரும் அவரையே பார்த்தனர். வன்னியிற் சரியான பாம்புகள் எண்டு சொல்லுகினம். மருத்துவ வசதியும் இல்லாமல் கன ஆட்கள் இறந்துபோச்சுது எண்டும் சொல்லுகினம்" என தன் கேள்வியைக் கேட்டுவிட்டு அமைதியாக இருந்தார். முன்பு உரையாற்றிய போராளி எழுந்தார். "ஐயா இது சில விரோதிகளின் கதைகள். வன்னியில ஆட்கள் இருக்கினம். அதுவும் இலட்சக்கணக்கில. ஆக வலிகாமத்தில் இருந்து போற ஆட்களை வரிசையிலே நிப்பாட்டி அங்கு பாம்பு கடிக்காது. அத்தோட பாம்புக்கடியில சாகிறது குறைவு. பயத்திலதான் சாவு கூட என பெரிய ஆய்வு ஒன்றிலே கண்டு பிடிச்சு இருக்கினம். பாம்பு எல்லாம் விசம் எண்டும் இல்லை. ஏன் இஞ்சை மந்துவிலிலை பாம்புகடிச்சுச் சாகேல்லையோ? இதுமட்டுமில்லை சில கதையள் எங்கட காதுகளிலையும் விழுந்திருக்கு. சரியான நுளம்பு, ஒரே யானை, கரடி, புலி எனக் கரடி விடுகினம் சிலபேர். அவையளையும் எங்களுக்குத் தெரியும். யாழ்ப்பாணத்தில இல்லாத நுளம்பே. ஏதோ ஒரு பயங்கரமான மாயைத் தோற்றத்தைக் காட்டி உங்களைப் பயமுறுத்துகினம் சிலர். ஆனால் வன்னியில நிறைந்துள்ள வளங்களைப் பற்றிச் சொல்லுவார் இல்லை. இரண்டு போக நெல் செய்கை, தோட்டம், கால்நடை என வளமுடன் விளங்கும் மண். விடுதலைப் புலிகள் உங்களுக்கு ஒரு நாளும் பொய் சொல்லி ஏமாற்றிக் கூட்டிக்கொண்டு போகமாட்டினம். அத்தோடு மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் செய்யமாட்டம். உங்களின் எதிர்கால வாழ்வுக்காகத்தான் நாம் இதைச் செய்கின்றோம். உங்களைப் பாதுகாக்கவேண்டிய கடமை எங்களுக்கு உண்டு. எனவே நீங்கள், நாங்கள் சொல்லுவதை நம்பப்போகிறீர்களா அல்லது விரோதிகள் பரப்பும் வதந்திகளை நம்பப் போகிறீர்களா என்பதை இனி நீங்கள் முடிவு செய்யுங்கள். அத்தோடு இன்று மாலை 7க்கு

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனந்திறந்து பேசுகின்றார் மண்டேலா

தென்னாபிரிக்காவின் முன்னைய ஆட்சியாளர்களான வெள்ளை இனவெறி அரசால் மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். 11-02-90 அன்று, உலகின் நிர்பந்தங்களுக்கு இணங்க அவர் விடுதலை செய்யப்பட்டார். 94 ஏப்பிரல் திங்களில் நடந்த தேர்தலில், மண்டேலா தென்னாபிரிக்காவின் சனாதிபதியானார்.

தனது 27 ஆண்டுகால சிறைவாழ்வில் 18 ஆண்டுகளை ஒரே சிறையில் அவர் கழித்திருந்தார். 'ரொபின் தீவு' என்றழைக்கப்படும் அந்தச் சிறைச்சாலையில் இருந்தே இறுதியாக அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். தனது விடுதலையின் ஆறாவது ஆண்டைக் குறிக்குமுகமாக ரொபின் தீவு சிறைச்சாலைக்கு மண்டேலா சென்றார். தென்னாபிரிக்காவுக்கு வருகை தந்திருந்த நோர்வே நாட்டுப் பிரதமரையும் அழைத்துக் கொண்டு மண்டேலா அங்கே சென்றார்.

உருக்கினால் செய்யப்பட்ட பாரிய கதவைத் திறந்துகொண்டு சிறையின் உள்ளே நுழைந்தபோது, "மகிழ்ச்சியானதும் துக்ககரமானதுமான பழைய நினைவுகள் மனதில் எழுகின்றன" என்று கூறிய மண்டேலா, "நினைத்து நினைத்து மகிழக்கூடியவையும் அதில் உள்ளன - மறந்து விடவேண்டியனவும் அதில் உள்ளன" என்றார்.

சிறைச்சாலைக்குள் நடந்த சிறிய கூட்டத்தில் உரையாற்றும்போது, "நாங்கள் (கறுப்பின மக்கள்) தனித்துவிடப்பட்டிருந்த அந்தக் காலத்தில் எங்களது மிகப்பெரிய நண்பனாக இருந்தது நோர்வே நாடுதான்" என்றார். அந்தச் சிறைச்சாலை நிகழ்ச்சிக்கு நோர்வே பிரதமரையும் அவர் அழைத்துச் சென்றது, நோர்வே நாட்டைக் கௌரவித்து - போராட்ட காலத்தில் அது செய்த உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கவே என்று, பின்னர் உலகம் புரிந்துகொண்டது.

'ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' என்ற விடுதலை அமைப்பை உருவாக்கி - அதன் தலைவராக இருந்து செயற்பட்டபோதே - தேசத்துரோகக் குற்றச்சாட்டின்பேரில், மண்டேலா, வெள்ளை இனவெறி அரசால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் சிறையில் இருந்தபோதும், கறுப்பின மக்களின் சுதந்திரப் போர் நடந்துகொண்டே இருந்தது. அந்த விடுதலைப் போருக்கு உலகின் பல நாடுகள் மறைமுகமாகப் பல்வேறு உதவிகளையும் வழங்கிவந்தன. கறுப்பின மக்களின் விடுதலைக்காக ஆ.தே. காங்கிரஸ் போராடியபோது அதற்கு உறுதுணையாக நின்ற நாடுகளை - இதுவரை காலமும் - மண்டேலா பகிரங்கமாக உலகிற்கு அறிவிக்கவில்லை. ஆனால், 'ரொபின் தீவு' நிகழ்ச்சியை அதற்குரிய சந்தர்ப்பமாக அவர் பயன்படுத்தினார்.

"தென்னாபிரிக்காவுக்கு வருகை தரும்படி ஃபிடல் காஸ்ரோவை அழைத்துள்ளேன்" என்று அறிவித்த மண்டேலா, "கேணல் கடாபியையும் அழைக்க முடிவு செய்துள்ளேன்" என்று முரசறைந்தார். அவர் மேலும் அங்கே உரையாற்றுகையில், "நாங்கள் தனிமையில் இருந்தபோது எங்களது நண்பர்களாக இருந்தவர்கள் அவர்கள்" என்று நன்றி உணர்வுடன் கூறினார். "எமது நண்பர்களாக யார் யார் இருக்கவேண்டும் என்று மற்றவர்கள் கூறும் ஆலோசனைகளை நான் செவிமடுக்கமாட்டேன்" இவ்வாறு, 77 வயதான நெல்சன் மண்டேலா உணர்ச்சி ததும்ப, அங்கே உரையாற்றினார். "மேற்கு நாடுகளின் எதிரிகள் எங்களது எதிரிகள் அல்ல" என்று, 18 ஆண்டுகளாக தான் வாழ்ந்த அந்த வீட்டில் (சிறைக்கூடம்) வைத்து, மண்டேலா கொள்கைப் பிரகடனம் செய்தார்.

அந்த அரசியல் பிரகடன நிகழ்ச்சியில் வைத்து, தனது சிறைவாழ்வின் மறக்கமுடியாத அனுபவங்களையும் மண்டேலா மீட்டினார். ஒருமுறை எலி ஒன்று, சிறை முற்றத்தில் விழுந்து கிடந்த ஒருசில தானியங்களைப் பொறுக்கச் செல்லவேண்டிய துணிவைப் பெறுவதற்காக எடுத்த முயற்சிகளை - தனது அறையில் இருந்தவாறு - கண்குளிரப் பார்த்து மகிழ்ந்ததாக அவர் நினைவுகூர்ந்தார்.



"கியூபாவுடனும் - கடாபியுடனுமான உறவுகளைத் துண்டித்துவிடும்படி உலகின் முன்னணி நாடொன்றின் தலைவர் என்னிடம் சொன்னார்" என மண்டேலா வெளிப்படுத்தினார். அத்துடன், "உலகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைவராக நீ இருக்க விரும்பினால், கியூபாவையும் - கடாபியையும் வெறுத்தொதுக்கு" என, தனது மேலைநாட்டு நண்பர்கள் ஆலோசனை கூறியிருந்ததாகவும் - மண்டேலா - தெரிவித்தார்.

"நீங்கள் (மேற்கு நாடுகள்) அவர்களை (கஸ்ரோ -கடாபி) எவ்வளவுதான் வெறுத்தொதுக்கினாலும், நாங்கள் எங்களது நண்பர்களைக் கைவிடமாட்டோம்" என, சிறைச் சுவர்களுக்கு உள்ளே நின்றவாறு - மண்டேலா - முழங்கினார்.

தற்போதைய தென்னாபிரிக்காவின் நட்பு நாடுகளாக லிபியா - கியூபா - ஈரான் விளங்குகின்றன. இவை அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்தாண்டு ஒக்ரோபர் திங்களில் கியூபா மீது அமெரிக்கா பொருண்மியத் தடையை விதித்தபோது, "பனிப்போர்க் காலத்திற்கு திரும்பவேண்டும் என்ற (அமெரிக்காவின்) ஆசையை தென்னாபிரிக்கா நிராகரிக்கின்றது" என்று கூறி, அமெரிக்காவைச் சாடினார்.

சிறைவாழ்வின்போது தனது கண்பார்வையை மங்கச் செய்த கல்குவாறி வேலைத் தளத்தைச் சென்று பார்த்தபோது, மேற்கு நாடுகளைக் கண்டனம் செய்யும் வகையில், "நிறவெறிக் கொள்கைக்கு எதிரான ஆ.தே. காங்கிரசின் போராட்டம் மீளப்பெறப்படமாட்டாது" எனச் சூளுரைத்தார். வெள்ளையர் ஆட்சியில் இடம்பெற்ற கொடுமைகளை அம்பலப்படுத்த அல்லது அதற்குக் காரணமானவர்களை தண்டிக்க மண்டேலா அரசு எடுக்கும் முயற்சிகளை மேற்கு நாட்டு அரசுகள் விரும்பவில்லை. அத்துடன், நிறவெறி ஆட்சியின் எச்சசொச்சங்களைப் பூண்டோடு துடைத்தெறிய முனையும் மண்டேலாவின் முயற்சியையும் மேற்கு உலகம் ஊக்குவிக்கவில்லை.

இந்தச் சிறைச்சாலை நிகழ்ச்சிகள் மூலம், தனது பழைய நண்பர்களுக்கு நன்றிக்கடன் செலுத்திய மண்டேலா அவர்கள், அமெரிக்காவையும் அதன் கூட்டாளி நாடுகளையும் ஒரு வகையில் கண்டன விமர்சனம் செய்வதிலும் செலவிட்டார். தென்னாபிரிக்காவின் பொருண்மிய அபிவிருத்திக்காக மேற்கு நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளைப் பேணிப்பாதுகாக்க மண்டேலா முயன்றாலுங்கூட, தனது மனச்சாட்சியை இந்த நிகழ்ச்சிமூலம் உலகிற்குக் காட்டியுள்ளார். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில், தனது இயக்கத்திற்கு - தனது போராட்டத்திற்கு - தனது மக்களிற்கு உதவிபுரிந்த நாடுகளை, அதன் தலைவர்களை, தான் வாழும்போதே கௌரவிக்க மண்டேலா விரும்பி உள்ளதையே 'ரொபின் தீவு' பேச்சு கோடிகாட்டுகின்றது.

இந்த ஆண்டுடன் (1996) 'ரொபின் தீவு' சிறைச்சாலை மூடப்படவிருக்கின்றது. இனிமேல் அது நிறவெறி ஆட்சிக்கால அருங்காட்சியகமாக விளங்கப்போவதாக, தென்னாபிரிக்க அரசு அறிவித்துள்ளது. 18 ஆண்டுகாலமாக மண்டேலா வசித்த சிறைஅறை மற்றும் கட்டாய வேலையில் ஈடுபடுத்தப்பட்ட கருங்கல் குவாறி ஆகிய முக்கிய பகுதிகள் பேணிப் பாதுகாக்கப்படவிருக்கின்றன. ✤

# விரிவுபடும் பொருண்மிய நெருக்கடி

இரண்டாவது உலகப் போரின் போது கூடக் காணப்படாத பொருண்மிய நெருக்கடி இன்று சிறிலங்காவில் காணப்படுகின்றது. இந்த நாட்டில் முன் எப்பொழுதுமே இல்லாதவாறு, மோசமான பொருண்மிய நெருக்கடி இவ்வாண்டு ஏற்படும். அத்தோடு, பணவீக்கமும் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என முன்னால் நிதி அமைச்சரும் சிறிலங்காவின் திறந்த பொருண்மியக் கொள்கைக்கு வித்திட்டவருமான ரொனி டிமெல் எச்சரிக்கை செய்துள்ளார். சிறிலங்காவின் அண்மைய வரலாற்றில் குறிப்பாக ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் இராணுவச் செலவீடு அதிகரிக்கப்பட்டதால், நாட்டின் பொருண்மியம் அகல பாதாளம் நோக்கிச் செல்லுவதாக எச்சரிக்கை செய்யப்பட்டே வந்தது. ஆனால், ஆட்சியில் இருந்த எவரும் அதில் அக்கறை காட்டவில்லை. அப்பொழுது எதிர்க்கட்சியாக இருந்த சந்திரிகா குமாரணதுங்கா அதை முனைப்பான பிரச்சினையாக்கினார். ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருண்மிய நெருக்கடி இன்று போல், இல்லாமல் இருந்தும் கூட, மக்கள் அதற்கு செவிசாய்த்தனர். போரின் செலவீடு குறைக்கப்படும் என சந்திரிகா குமாரணதுங்கா அளித்த வாக்குறுதிகளாலும் பல மக்கள் அவருக்கு வாக்களித்தனர். ஆனால், அவர் போரை நிறுத்தவுமில்லை. வாக்களித்தபடி மக்களின் பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. மாறாகப் போரை முழுமூச்சாக நடத்த தீர்மானித்த சந்திரிகா, தப்பானதொரு கணிப்பீட்டில் போர்ச் செலவீட்டைப் பெருமளவில் அதிகரித்தார். அதாவது, நவீன ஆயுத தளபாடங்களின் பெருக்கமும் - இராணுவ வல்லமையும் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருமென எண்ணிய சனாதிபதி, அதற்குத் தடையெதுவும் ஏற்படவிடாது பாதுகாத்துக் கொண்டார்.

ஆனால், சந்திரிகா அரசானது மேற்கொண்ட இராணுவ நவீனமயமாக்கலானது, அவர் எதிர்பார்த்தது போல் இராணுவத்தை நவீனமயமாக்கியது என்றாலும், அவரின் நோக்கமானது நிறைவேறியதாக இல்லை. அதாவது, ஒரு பிரதேசத்தைக் கைப்பற்ற முடிந்ததே தவிர, புலிகளைப் பலவீனப்படுத்தவோ அன்றி அழிக்கவோ அது உதவவில்லை. ஆகையினால், போரானது முற்றுப்பெற்றுவிடவில்லை. மாறாக இன்று அரசானது, பெரும் பொருண்மிய நெருக்கடியில் சிக்கியதே விளைவாக உள்ளது. சுமார் 2400 கோடி ரூபாவை வருடாந்த இராணுவச் செலவீடாக ஐ.தே.க. அரசு செய்தபோது, நாட்டின் பெரும் நிதிவளம் நாசமாக்கப்பட்டதாகவும் மக்கள் மீது பெரும்சுமை ஏற்றப்பட்டதாகவும் பெருமெடுப்பில் பிரச்சாரம் செய்த சந்திரிகா குமாரணதுங்கா அரசின் இன்றைய இராணுவ செலவீடு, 4000 கோடி ரூபாவையும் தாண்டிவிட்டது. ஆனால், போர்ச் செலவீடு ஒரு எல்லையைத் தாண்டிவிட்டது என்பதுதான் சிக்கலல்ல. இப் போர்ச் செலவீட்டினால், அரசின் சொத்துக்கள் யாவும் அற்றுப்போய்விட்டது என்பதும் - இன்றுள்ள அரசு, சொத்துக்களை விற்பனை செய்வது குறித்தும் பெரும் நெருக்கடிகள் உருவாகியுள்ளன என்பதே முக்கியமானவையாகும். அதாவது, 'மின்சார சபை, வங்கித்துறை, துறைமுகம், பெருந்தோட்டங்கள் என்பவற்றை தனியார் மயமாக்குவதற்கு எதிராகப் பெரும் போராட்டங்கள் சிறிலங்காவில் எழுந்துள்ளன.

இவற்றை மீறி அரசினால் தனியார் மயமாக்கும் கொள்கையைத் தொடர முடியுமா? என்பது இன்று முக்கியமான கேள்வியாக உள்ளது. ஏனெனில், அரச தரப்பினருக்குள்ளேயே இது குறித்து முரண்பாடு பலமாகவே உள்ளது. ஆனால், தனியார் மயமாக்களைத் தவிர்த்து அரசால் உயிர்வாழ முடியுமா? என்பதுவும் சந்தேகமே. ஏனெனில், அரசிற்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் வந்துசேரக்கூடிய மூலதனங்கள் என்பவை யாவும் எஞ்சியுள்ள அரச வளங்களைத் தனியார் துறைக்கு விற்பனை செய்வதைப் பொறுத்து தங்கியுள்ளது. அதாவது, தனியார் மயமாக்கலில் அரசு பின்னிற்குமானால் அரசுக்கு உடன் தேவையான பெரும் தொகை நிதியை அதனால் பெற்றுக்கொள்ளமுடியுமா? என்பதே கேள்விக்குரியதாக உள்ளது. இந்த நிலையில் சந்திரிகா அரசானது, பெரும் பொருண்மிய நெருக்கடியையும் அதன் விளைவாக அரசியல் நெருக்கடி ஒன்றையும் தவிர்க்க முடியாது எதிர்நோக்கியேயாகும். இயல்பாகவே பொருண்மிய நெருக்கடிகளைக் கொண்டுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடொன்று, முடிவிலியான போரொன்றை நடத்துவதானால் அதன் பொருண்மியத்தை நலிவுறவும், நெருக்கடிக்கு உள்ளாகவுமே செய்யும். எனினும் போரை விரைவுபடுத்தல் என்ற ரீதியில் மேலும் பெருந்தொகை நிதியை அதில் செலவிடுதல் என்பது அதன் பொருண்மிய நெருக்கடியை விரிவுபடுத்தியதாகவே அமையும். சந்திரிகா அரசும் அதையே இன்று செய்துள்ளது. ✤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 900 நாட்கள்

## ஒரு முற்றுகைச் சமரும்

## வெற்றிகொள்ளப்பட்ட விதமும்

> யேர்மனியப் படைகளால் லெனின் கிராட் நகரம் 872 நாட்கள் முற்றுகையிடப்பட்டிருந்தது. அங்கே 30 இலட்சம் மக்கள் வசித்தனர். முற்றுகையை உடைக்க அணி திரளுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, அந்நகரின் 5 இலட்சம் மக்கள் படையில் சேர்ந்தனர்.

ரசியாவை ஆட்சிசெய்த மகாபீற்றர் என்னும் அரசரால் 1703 ஆம் ஆண்டு, பால்டிக் கடலின் கரையோரத்தில் அமைக்கப்பட்ட பெரும் நகரமே சென் பீற்றர்ஸ்பேர்க் ஆகும். பயனற்றுக்கிடந்த பெரும் சதுப்பு நிலப்பரப்பில் இந்நகரம் அமைக்கப்பட்டது. இந்த நகரை அமைக்கும் முயற்சியில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நோயினாலும், விபத்துக்களாலும் இறந்தனர். 1712லிருந்து 1918 வரை இந்நகரமே ரசியாவின் தலை நகரமாக இருந்தது. 1917 ஒக்டோபர் புரட்சியின் பின் இந்நகரை லெனின்கிராட் என அழைத்தனர். தற்போது இந்நகரம் மீண்டும் சென் பீற்றர்ஸ்பேர்க் என அழைக்கப்படுகின்றது.

இரண்டாம் உலகப்போரின்போது யேர்மனியரால் லெனின்கிராட் 872 நாட்கள் முற்றுகையிடப்பட்டிருந்தது (செப்.8, 1941 – ஜன.17, 1944). 900 நாட்கள் என அழைக்கப்படும் இம்முற்றுகையின் தொடக்கத்தில் இந்நகரில் ஏறத்தாழ முப்பது இலட்சம் மக்கள் வாழ்ந்தனர். முற்றுகையினால் பதினைந்து இலட்சம் ரசியர்கள் இறந்தார்கள். இவர்களில் எட்டு இலட்சம் மக்கள் பிஸ்கர்வஸ்கி என்னும் இடத்தில் புதைக்கப்பட்டார்கள் எனக் கூறப்படுகின்றது. இதை லெனின்கிராட்டில் வாழ்ந்த கவிஞரான சேர்கி டேவிடோவு, "நகரின் அரைவாசி இங்கேதான் உறங்குகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார் ("Here lies half the city"). முற்றுகையின்போது ஏழு இலட்சம் வீடுகள் அழிக்கப்பட்டன. நகருக்கு ஏற்பட்ட இழப்பு நாலாயிரத்து ஐநூறு கோடி ரூபிள்களாகும்.

எழுத்தில் வடிக்க முடியாதளவு அழிவுகளைச் சந்தித்தபோதும்– தன்மான உணர்வோடு தலை தாழ்த்த மறுத்து–பெரும் தற்கொடை செய்து லெனின்கிராட் மக்கள் போராடினர், வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.



1941ஆம் ஆண்டு யூன் திங்கள் 21ஆம் நாள் யேர்மனி ரசியா மீது போர்தொடுத்தது. இதை நடவடிக்கை 'பார்பரோசா' என யேர்மனி அழைத்தது. முதல்நாள் சமரில் ரசியா ஆயிரத்து இருநூறு (1200) வானூர்திகளை இழந்தது. இதில் தொள்ளாயிரம் தரையிலேயே அழிக்கப்பட்டன. பதினெட்டு நாட்களுள் யேர்மனியப் படை முந்நூறு மைல்களைக் கடந்து முன்னேறியது. ரசியாவின் இருபத்தெட்டு பிரிவுகளைச் சேர்ந்த நாலு இலட்சத்து இருபதினாயிரம் (4,20,000) படையினர் முற்றாக அழிக்கப்பட்டனர். மேலும் எழுபது பிரிவுகள் தம் பலத்தில் அரைவாசியை இழந்தன.

ரசியாவின் தலைநகர் மொஸ்கோவை யேர்மன் படையணி விரைவாக நெருங்கியது. யேர்மனியின் தலைவரான கிட்லர் மொஸ்கோவைக் கையகப்படுத்துவதற்கு முன்பு உக்கிரேன், கோர்கஸ் பகுதிகளையும், லெனின்கிராட்டையும் கையகப்படுத்த திடீரென முடிவெடுத்தார். லெனின்கிராட்டைக் கையகப்படுத்துவதன்மூலம் பின்லாந்துடன் தொடர்பை ஏற்படுத்த முடியும் – பால்டிக் கரையைக் கட்டுப்படுத்த முடியும் – இதன்மூலம் ரசிய கடற்படையைச் செயலிழக்கச் செய்யமுடியும். கிட்லரின் இம்முடிவு, அவர் விட்ட பெரும் தவறுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

லெனின்கிராட்டை முற்றாக அழித்துவிடும்படி கிட்லர் கட்டளையிட்டார். அத்துடன், அந்நகர மக்கள் சரணடைய முயன்றால் அதை ஏற்க வேண்டாம் எனவும் தம் படையினருக்குக் கட்டளையிட்டார்.

யேர்மனியின் வேகமான முன்னேற்றத்தைத் தடுத்துநிறுத்தப் போதிய படைபலம் இல்லாத நிலையில், லெனின்கிராட்டைக் காக்க பொது மக்கள் அணிதிரளுமாறு அழைக்கப்பட்டனர். ஐந்து இலட்சம் மக்கள் அணிதிரண்டு பங்களித்தனர். இதில் பெண்களும் பதினான்கு வயதே நிரம்பிய சிறுவர்களும் அடங்குவர்.

ஒரு வாரத்தினுள் மட்டும் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் மக்கள் அணிதிரண்டனர். இதில் முப்பத்திரண்டாயிரம் பேர் பெண்கள்.

யூலை 10ஆம் நாள் பொது மக்களிலிருந்து அணிதிரட்டப்பட்ட முதலாம் பிரிவு போர்முனைக்குச் சென்றது. பலரிடம் துப்பாக்கி இருக்கவில்லை. மண்வெட்டி, கோடரி என அகப்பட்ட கருவிகளைத் தாங்கிய வண்ணம் இவ்வணி போர்முனைக்குச் சென்றது.



மெகா (Mega), சிலிசெல்பேர்க் (Shlisselburg) ஆகிய பகுதிகளை யேர்மனி கையகப்படுத்தியதும், லெனின்கிராட்டுக்கும் ரசியாவின் ஏனைய பகுதிகளுக்கும் இருந்த தரைவழித் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது– தொள்ளாயிரம் நாள் முற்றுகை தொடங்கியது.

லெனின்கிராட்டுக்கும் மற்றைய ரசியப் பகுதிகளுக்கும் இடையே வான்மூலமும், லேடோகா (Ledoga) ஏரிமூலமும் மட்டுமே தொடர்பிருந்தது.

செப்ரெம்பர் திங்களில் லெனின்கிராட்டில் இருந்த முப்பது இலட்சம் ரசியர்களுக்கு (இதில் ஐந்து இலட்சம் படையினரும் அடங்குவர்), முப்பது நாட்களுக்கு மட்டுமே போதுமான உணவிருந்தது.



> செப்டெம்பர் திங்களில் லெனின்கிராட்டின் 30 இலட்சம் மக்களுக்கும் 30 நாட்களுக்குத் தேவையான உணவே இருந்தது. அகப்பட்டதையெல்லாம் அவர்கள் சாப்பிட்டார்கள். ஒரு படைவீரனிடம் இருந்த தோற்பையைக் கேட்டு வாங்கிய ஒரு பெண், அடுத்த நாள் அத்தோலில் 'ஜெலி' செய்து அவனுக்கு அனுப்பி வைத்தாள்.

நொவெம்பர் 20ஆம் நாளிலிருந்து, தொழிலாளி ஒருவருக்கு நாளொன்றிற்கு 250 கிராம் உணவும் மற்றையோருக்கு 125 கிராம் உணவும் மட்டுமே வழங்கப்பட்டது. முன்னணிப் படையினருக்கு 500 கிராமும் பின்னணியில் செயற்பட்ட படையினருக்கு 300 கிராமும் வழங்கப்பட்டது.

அகப்பட்டதை எல்லாம் மக்கள் சாப்பிட்டார்கள். நாயிலிருந்து, சுவரில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளிலிருந்த மா வரை சாப்பிட்டார்கள். ஒருமுறை, ஒரு படைவீரனிடம் இருந்த தோற்பெட்டியைக் கேட்டு வாங்கிய ஒரு பெண், அடுத்த நாள் அவனுக்கு அத்தோலில் ஜெலி செய்து அனுப்பியிருந்தார்.

நாளொன்றுக்கு மூவாயிரம் மக்கள் உணவின்றி மடிந்தார்கள். இதைத் தவிர எறிகணை வீச்சில், வான் தாக்குதலில் கொல்லப்பட்டோர் பலர்.

வீதிக்கு வீதி பிணங்கள் கிடந்தன. அந்தப் பிணங்களை மூடி பனி பெய்தது. பனிக்காலம் முடிய பனி உருகத்தொடங்கியபோதே, வீதியில் பிணங்கள் பல அகற்றப்பட வில்லை– அவற்றை மூடிய பனியின் மேலால் நாம் நடந்து சென்று வந்திருக்கின்றோம் என, மக்கள் உணர்ந்தார்கள்.

தனியா என்ற பதினொரு அகவை நிரம்பிய சிறுமியின் நாட்குறிப்பில், "சென்யா 28, டிசெம். 41இல் இறந்தார். பபுஸ்கா 25, ஜன. 42இல் இறந்தார். லேகா 17, டிசெம். இறந்தார். அம்மா 13, மேயில் இறந்தார். எல்லாரும் இறந்து விட்டனர். நான் மட்டும் இருக்கின்றேன்" என எழுதப்பட்டிருந்தது. அச் சிறுமியும் 43ஆம் ஆண்டு நோயினால் இறந்து போனாள்.

வானொலியில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சி தர வந்த கவிஞர்கள், பாடகர்கள் பலர் நிற்பதற்கு இயலாதவர்களாக இருந்தார்கள். நம்பிக்கையூட்டும் வகையில் நிகழ்ச்சிகளைத் தந்த அவர்களில் பலர், அடுத்த சில நாட்களில் இறந்துபோனார்கள். எரிபொருள் இன்மையால் வானொலிச் சேவை தடைப்பட்ட போது மக்கள் குழப்பமடைந்தார்கள். "எமக்குத் தரப்படும் சிறு உணவுப் பங்கீட்டை வேண்டுமானால் தருகின்றோம், வானொலியை நிறுத்தாதீர்கள். அதுவே எம் இருப்புக்குத் துணை" என வானொலி நிலையத்திற்குச் சென்று கூறினர்.

மிகப்பெரிய இன்னல்களுக்குள்ளும் லெனின்கிராட் மக்கள் போராடத் தயங்கவில்லை. உணவு முற்றுகையை உடைக்க முயன்றனர். லேடோகா ஏரி 125 மைல் நீளமும் 80 மைல் அகலமும் கொண்டது. இதுவே ஐரோப்பாவிலிருக்கும் மிகப் பெரிய நன்னீர் ஏரியாகும். நொவெம்பரில் இவ்வேரி குளிர்காரணமாக உறையத் தொடங்கும். ஐந்து அங்குலத் தடிப்பளவுக்கு இந்நீரேரி உறைந்ததும் அதன் வழியாக, குதிரைகளால் இழுக்கப்படும் சறுக்கூர்திகள்மூலம் உணவு கொண்டுவரும் முயற்சி தொடங்கியது. பனிக்கட்டியின் தடிப்புக் கூடியதும் லொறிகள்மூலம் உணவு எடுத்துவரப்பட்டது. யேர்மனியரின் வான் தாக்குதலால் பல லொறிகள் அழிந்தன. பல வழியில் புதையுண்டன. உணவு எடுத்து வரும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, லெனின்கிராட்டில் இருந்து போராட்டத்தில் பங்களிக்க முடியாத மக்கள் அகற்றப்பட்டார்கள், ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகற்றப்பட்டார்கள்.

உணவு நிலை சற்று முன்னேற்றமடைந்ததும், 42ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இருந்து, மூன்று இலட்சம் மக்கள் லெனின்கிராட்டை துப்புரவு செய்யும் பணியில் இறங்கினார்கள். நீண்ட நாட்களின் பின் ஏப்ரல் திங்களில், நூறுக்கு மேற்பட்ட கார்கள் வீதியில் ஓடத்தொடங்கின. அவற்றைக் கண்டதும் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கார்க் 'கோணின்" ஒலியைக் கேட்ட யேர்மனியப் படையினர் நம்பிக்கை இழந்தனர்.

யேர்மனியர் லெனின்கிராட்டைக் கையகப்படுத்தும் நிலை வந்தால் அந்நகரை முற்றாக அழிக்கும் வகையில், எல்லா இடங்களிலும் வெடிப்பொருள்கள் வைக்கப்பட்டன. மிகுந்த இழப்புக்களுடன் யேர்மனியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திய ரசியர்கள், எதிர்த்தாக்குதலைத் தொடங்கினர். முற்றுகையின் ஐநூற்று ஆறாம் நாள் (506) சிலிசெல்பேர்க்கை ரசியர்கள் மீண்டும் வெற்றிகொண்டதையடுத்து, முற்றுகை ஓரளவு தளர்த்தப்பட்டது.

1944ஆம் ஆண்டு சனவரி திங்கள், ரசியா மிகப்பெரிய அளவில் எதிர்த்தாக்குதலைத் தொடங்கியது. யேர்மனியர்களை மிகவும் அச்சுறுத்திய ரசியாவின் 'கத்தூசா பீரங்கிகள்' அறுபத்தைந்து நிமிடங்களுக்குள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட எறிகணைகளை யேர்மன் நிலைகள் மீது வீசின. பெரும் சமரைத் தொடர்ந்து சனவரி 27ஆம் நாள், முற்றுகை முடிவுக்கு வந்தது.

1945ஆம் ஆண்டு, லெனின்கிராட் மக்களுக்கு, அவர்களின் வீரத்திற்கு லெனின் விருதையும், 1965ஆம் ஆண்டு, 'வீரர்கள் நகரம்' என்ற விருதையும் ரசிய அரசு வழங்கியது.

முற்றுகையின்போது இறந்த மக்களின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுக் கல்லை வணங்கி ரசியக் கவிஞர் ஒருவர் எழுதிய வரிகள், அம்மக்களின் வீரத்தை உணர்வோடு எடுத்துக் காட்டுகின்றன.

"லெனின்கிராடே  
புரட்சியின் தொட்டிலே!  
உன்னைக் காக்க  
உயிர்தந்த உன்மக்கள்  
உறங்கும் இடமிது.  
நடுகல்லால் பூசிக்கப்பட்டு  
என்றுமழியாது கல்லறைகளின் கீழ்  
உறங்கும் இவர்கள் தற்கொடை யை  
அளவிட முடியாது!  
இவர்களை-  
இவர்கள் செயல்தனை என்றுமே  
மறக்க முடியாது!" ✤

www.tamilarangam.net



## உலக அரங்கு

# லைபீரியா: உள்நாட்டுப் போர் தொடருமா?

சாள்ஸ் தேவசகாயம்

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவில் கடந்த ஆறு ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரில் 150, 000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ் உள்நாட்டுப் போரின் உச்சக் கட்டத்தில், அதாவது 1990இல் மேற்காபிரிக்க அரசுகளின் பொருண்மிய சமூகத்தினால் அமைதிகாக்கும் படை லைபீரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை.



இவ்வாண்டு ஏப்பிரல் திங்களில் நரகத்தின் வாசல் மீண்டும் லைபீரியாவினூடாகத் திறக்கப்பட்டது.

பல்வேறு ஆயுதக் குழுவினரும், கொள்ளைக்காரர்களும் தலைநகர் மொன்றோவியாவின் வீதிகளில் தம் இஸ்டப்படி நர்த்தனமாடித் திரிந்தனர். இவர்களில் பலர் இளம் பாராயத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டமும் ஒழுங்கும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. கைவிடப்பட்ட கடைகளினுள் வேட்டுக்களைத் தீர்த்தபடி உள்நுளைந்த இவர்கள், சகல பொருட்களையும் சூறையாடிச் சென்றனர். எதிர்ப்புக் காட்டிய யாவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஊதிப்போன பல உடல்கள் வீதியோரங்களில் சிதறிக் கிடந்தன. உரிமை கோருவாரற்றுக் கிடந்த பல உடல்களை நாய்களும், பறவைகளும் தீனியாக்கிக் கொண்டன.

மத்திய ஆபிரிக்க நாடுகளான ரூவாண்டாவிலும், புரூண்டியிலும் இடம்பெற்ற கோரக் கொலைகளை, இவை ஓரளவுக்கு ஞாபகப்படுத்துவனவாக இருந்தன.

லைபீரியாவின் தற்போதைய கொந்தளிப்பு, ஆட்சியிலுள்ள சபையில் அங்கம் வகிக்கும் ஆறு ஆயுதக் குழுக்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் வெளிப்பாடாகும். கடந்த ஆண்டு ஆகஸ்ட் திங்களில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் விளைவாக இத் 'தற்காலிகக் கூட்டுச் சபை உருவாக்கப்பட்டிருந்தது.

இக்குழுக்களில் ஒன்றான கிரானின் தலைவரான ரூஸ்வல்ட் ஜோன்சனை, கொலைக்குற்றத்துக்காக விசாரணை செய்யும் நோக்குடன் கைது செய்யப் போவதாகக் கூட்டுச் சபை அறிவித்ததனைத் தொடர்ந்து, ரூஸ்வெல்ட்டின் ஆதரவாளர்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர்.

அமெரிக்காவினால் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்ட இரண்டு உலங்கு வானூர்திகளை இவர்கள் சிதறடித்ததுடன், அமைதிகாக்கும் படையினர் உட்பட பல நூற்றுக் கணக்கானோரையும் பணயக் கைதிகளாக்கினர்.

கடற்கரையோரமாகச் சுற்றுமதில்களுடன் இருந்த இராணுவப் பகுதிக்குள் கட்ட ப்பட்டிருந்த 'பார்க்லி பயிற்சி நிலையத்துள்' தம்மை ஒருங்கிணைத்துக் கொண்ட ரூஸ்வெல்ட்டின் 10,000 வீரர்களும், ஏனைய ஆதரவாளர்களும் இப்பணயக் கைதிகளைப் பாதுகாப்புக் கேடயமாக்கித் தாக்குதல்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையத்துள் அகப்பட்டுக் கொண்டவர்களில் பலர், தினமும் இடம்பெற்ற எறிகணை வீச்சுக்களினாலும், கொலரா நோய்கள் பரவியதாலும் உயிரிழக்க வேண்டியேற்பட்டது.

தற்காலிக கூட்டுச் சபையில் அங்கம் வகித்த இரு முக்கிய குழுவினரே ரூஸ்வெல்ட்டுடன் பாரிய மோதல்களில் ஈடுபட்டனர். இக்குழுக்களுக்குச் சாள்ஸ் டெய்லரும், அல்ஹாஜி குரோமாவும் தலைமை வகித்தனர்.

இவர்களில் மிகவும் பலம் வாய்ந்த சாள்ஸ் டெய்லர், பணயக் கைதிகளாகக்கப்பட்ட அமைதிகாக்கும் படையினர் மற்றும் லெபனானைச் சேர்ந்த மக்களை விடுவிக்க எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் ஈடுபட மறுத்துவிட்டார். ரூஸ்வெல்ட் அமெரிக்கத் தூதரகத்தில் சரணடைய வேண்டுமென்பதே டெய்லரின் கோரிக்கையாகவிருந்தது.

ஏப்பிரல் 6ம் நாள் உள்நாட்டுப் போர் ஆரம்பமானதிலிருந்து 60,000க்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மேலும் அநேகமான சர்வதேச உதவி வழங்கும் சபைகளும் தமது ஊழியர்களைத் திருப்பியழைத்துவிட்டன. அமெரிக்கர்கள் உட்பட 2000க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்களை அமெரிக்க உலங்கு வானூர்திகள், அண்டை நாடான சியரோலியோனுக்குப் பாதுகாப்பாகக் கூட்டிச் சென்றுள்ளன.

தலைநகர் மொன்றோவியாவுக்கு அகதிகளாக வந்தோர் கதவுகள், யன்னல்கள், மலசல கூட வசதிகள், மின்சார வசதிகள் அற்ற கட்டிடங்களைத் தமது வதிவிட ங்களாக்கி வருகின்றனர். கிராமப் புறங்களில் உள்ள தமது வீடுகளைக் கைவிட்டு வந்த மக்கள், தற்போது அகதி முகாம்களிலுள்ள உள்ள மண் குடிசைகளில் தமது காலத்தைக் கழிக்கின்றனர். அநேகமான கிராமப்புற வீதிகளையும், கைவிடப்பட்ட குடிசைகளையும் பற்றைக்காடுகள் மூடிவருவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கைத்தீவினை விடப் பருமட்டாக இருமடங்கு பரப்பளவினைக் கொண்டு விளங்கும் லைபீரியாவின் சனத்தொகை, 2.8 மில்லியன் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இச் சனத்தொகையில் 5 வீதமானோர் அமெரிக்க அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு தமது தாயக பூமிக்கு அனுப்பப்பட்டோராவர். ஏனைய 95 வீதமானோரும் சுதேசக் குடிமக்களாவர். இவர்க ளில் 16 தனித்தன்மை வாய்ந்த இனக் குழுக்களை அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது. இவர்களை விட லெபனான் மற்றும் இந்திய வர்த்தகர்களை உள்ளடக்கிய 15,000 வெளிநாட்டவரும் வசிக்கின்றனர்.

லைபீரிய நாட்டு மக்களில் 15 வீதமானோர் கிறிஸ்தவராகவும், 20 வீதமானோர் இசுலாமியராகவும், ஏனையோர் (65வீதம்) சுதேச வழிபாடுகளில் ஈடுபடுவோராகவும் காணப்படுகின்றனர்.

அமெரிக்காவில் அடிமைத்தளையிலிருந்து விடு பட்ட கறுப்பினத்தவரை, ஆபிரிக்காவின் மேற்குக் கரையில் குடியமர்த்துவதற்கென 'அமெரிக்க காலனித்துவ சங்கம்' எடுத்த முயற்சிகளின் விளைவாகத் தற்போது மொன்றோவியா அமைந்துள்ள பகுதியில், 1822இல் 57 பேர் முதலாவது குடியிருப்பாளர்களாக வந்திறங்கினர். தொடர்ந்து வந்த பல தசாப்தங்களில் 16,500 முன்னாள் அடிமைகள் லைபீரியாவுக்கு வந்தனர்.

அப்போதைய அமெரிக்க சனாதிபதியான ஜேம்ஸ் மன்றோ இம்முயற்சிக்கு நிதியுதவி அளித்ததுடன், இக்குடியமர்வுக்கான நிலங்களைப் பெற்றுத்தருவதில் சுதேச குழுத்தலைவர்களுடன் நடந்த பேச்சுவார்த்தைகளிலும் உதவி புரிந்தார். இவரது ஞாபகார்த்தமாகவே தற்போதைய தலைநகருக்கு 'மன்றோவியா' எனப் பெயர் சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

லைபீரியா 1847இல் ஆபிரிக்காவின் முதலாவது சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆங்கில மொழி பேசிய அமெரிக்க லைபீரியர்கள், சுதேச மக்களை விடத் தாம் உயர்ந்தவர்களாகக் கருதிக் கொண்டனர். லைபீரியா வின் பொருண்மியம், அரசியல் என்பன இவர்களாலேயே நிர்ணயிக்கப்பட்டன.

எனினும் 1945–1971 காலப்பகுதியில் சனாதிபதியாக விருந்த வில்லியம் டப்மானின் பெருமுயற்சியால் சுதேச மக்களுக்கு கல்வி மற்றும் சுகாதார வசதிகள் வழங்கப்பட்டன.

ஆனால், இக் கொள்கைகளைத் தொடர்ந்த சனாதிபதி வில்லியம் டொல்பர்ட் என்பவர் 1980இல் இடம்பெற்ற இராணுவக் கவிழ்ப்பில் கொலை செய்யப்பட்டார். இவருடன் சேர்ந்து பல அமைச்சர்கள் உட்பட 27 உயரதிகாரிகள் கொலை செய்யப்பட்டனர்.

இதற்குக் காலாக இருந்தவர் கிரஜான் எனும் சுதேச இனக்குழுவைச் சார்ந்த சாமுவல் டோ என்பவராவார். இக் கொலைகளை அடுத்து, அநேகமான அமெரிக்க லைபீரியர்கள் நாட்டை விட்டு ஓடிவிடவே, லைபீரியா பெரும்பான்மையினரின் செல்வாக்கின் கீழ் வந்தது.

அதிகாரத்தைக் கைப்பற்றிய டோ, தனது கிரஜான் இனக்குழுவினர் பலரை அரச பதவிகளில் அமர்த்தினார். நவீன லைபீரியாவின் வரலாற்றில் அதுவரை காலமும் குலச் சண்டைகளின்றி இருந்த நிலை மாறி, இவ் இனக் குழுக்களிடையே வேறுபாடுகள் வளரத் தொடங்கின.

டோவின் கீழ் முன்னர் அமைச்சராக இருந்த ஜியோ இனக்குழுவைச் சேர்ந்த சாள்ஸ் டெய்லர் என்பவர், அண்டை நாடான ஐவரி கோஸ்ட்டிலிருந்து சில போராளிகளுடன் 1989இல் லைபீரியாவினுள் நுழைந்ததுடன், தற்போதைய முரண்பாடுகள் விசுவரூபம் எடுக்கத் தொடங்கின.

ஒரு சில மாதங்களில் கிராமப் புறங்களைக் கொள்ளையடித்து. பயங்கரவாதத்துக்குள்ளாக்கிய டெய்லர் தலைநகரை முற்றுகையிட்டார்.

1990இல் டோ கொல்லப்படவே, ஆளும் இயந்திரம் அற்ற லைபீரியா உள்நாட்டுப் போரில் மூழ்கியது.

நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தம் வசப்படுத்திய 6 இனக்குழுத் தலைவர்கள், தாமே லைபீரியாவின் ஆளுனர் என உரிமை கோரினர்.

எனினும் கடந்த சில ஆண்டுகளில் டெய்லர் பலம் வாய்ந்தவராகத் தன்னை ஆளுமைப்படுத்திக் கொண்டார். அடுத்த தேர்தலில் சனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுவதே இவரது நோக்கமாகும். இப்பின்னணியிலேயே ரூஸ்வெல்ட்டுக்கெதிராகக் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது. தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் நோக்குடன், ரூஸ்வெல்ட்டின் ஆதரவாளர்கள் தாக்குதலை ஆரம்பித்ததைத் தொடர்ந்து, உள்நாட்டுப் போர் மோசமான நிலையையடைந்தது.

அமெரிக்காவின் தலையீட்டால் 10 நாட்களாக ஓய்ந்திருந்த இயந்திரத் துப்பாக்கிகள், ஏப்பிரல் 30ஆம் நாளிலிருந்து மீண்டும் சன்னங்களைப் பாய்ச்சத் தொடங்கியுள்ளன. டெய்லரின் ஆதரவாளர்களும், ரூஸ்வெல்ட்டின் ஆதரவாளர்களும் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

"டெய்லர் தொடர்ந்தும் அதிகாரத்தைக் கைப்பற்ற நினைத்தால், சர்வதேச எதிர்ப்பு வலுவானதாக இருக்கும்" என்றும் "இச்சண்டைகள் தொடர்ந்தால் நாடு பேரழிவுகளை எதிர்நோக்க வேண்டிவரும்" என்றும் மொன்றோவியாவில் இருந்து அரசு, அமைதிப்படையினர், மற்றும் இனக்குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவரும் அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் எச்சரித்துள்ளார்.

ஆபிரிக்க அமைதி காக்கும் படையினர் ரூஸ்வெல்ட்டை, தாங்கிகளின் துணையுடன் அமெரிக்கத் தூதராலயத்துக்கு அழைத்துச் சென்றனர் என்றும், அங்கிருந்து அமெரிக்க உலங்கு வானூர்திகள் அவரை அண்டை நாடான சியராலியோனுக்குக் கொண்டு சென்றுள்ளது என்றும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

ரூஸ்வெல்ட்டின் வெளியேற்றம் தற்போதைய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் என எதிர்பார்த்த போதும், மோதல்கள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும், அகதிகள் அண்டை நாடுகளில் தஞ்சம் கோருவதாகவும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன. ✤

www.tamilarangam.net



## சிறுகதை

# மீட்பு

- ச. முருகானந்தன், தமிழீழம்

உக்கரமாகப் பெய்து கொண்டிருந்த பனியையும் பொருட்படுத்தாமல் காற்றோ, வெளிச்சமோ வராத அந்தச் சின்னஞ் சிறிய சமையல் அறைக்குள், ஈரவிறகுகள் எழுப்பிய புகை மண்டலத்திற்குள் மூழ்கி, இடிந்து போயிருந்த மண் அடுப்பின் எதிரே அமர்ந்து கொண்டு, தண்ணீரைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தாள் பரமேஸ்வரி.

செல்லையரின் குறட்டை ஒலி அதிகாலை நிசப்தத்தில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.



அடுப்புப் புகட்டில் குப்பி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதிகாலையின் வரவைச் சேவல் அறிவித்துவிட்ட பின்னரும், இருள் இன்னமும் முற்றாக விலகவில்லை.

எரிய மறுத்து அடம்பிடித்த ஈர விறகுகளைக் குனிந்து ஊதிவிட்டு நிமிர்ந்த பரமேஸ்வரியைச் சாம்பல் நிறத்தில் படை படையாக வந்த புகைச்சுருள் திணற வைக்கவே, மூச்சு முட்டுவது போலிருந்தது அவளுக்கு.

"மாரிகாலம் வந்திட்டால் இந்த ஆய்க்கினைதான். காய்ந்த விறகாய்ப் பார்த்து ஒத்தாப்புக்குள்ளை எடுத்து வைச்சிருக்கலாம்" என்று அங்கலாய்த்துக் கொண்ட பரமேஸ்வரி, மறுபடியும் அடுப்பை ஊதினாள். இம்முறை அடுப்பு விளாசி எரிய ஆரம்பித்தது.

செல்லையர் அறை மூலையில் சேலையைப் போர்த்திக் கொண்டு முடங்கிப் போயிருந்தார். அந்தச் சின்னஞ்சிறு வீட்டில் ஓர் அறையும், சமையல் கட்டும், தாவாரமும் மட்டுமே இருந்தது. வாழ்க்கைப் போராட்டத்தில் வறுமையைத் தோற்கடித்து, வளமான வீடு

> "இது ஒரு இயக்கத்தின்ர போராட்டமில்லை.........! இனத்தின்ர போராட்டம்........ இந்த மக்கள் போராட்டத்திலை மக்கள் எல்லாம் பார்வையாளராக நில்லாமல், பங்காளராக வரவேணும்......"

கட்ட அவர்களால் முடியவில்லை.

பரமேஸ்வரி எழுந்து கணவரருகே வந்து அவரை எழுப்பினாள். "இஞ்சாருங்கோ, விடிஞ்சு போச்சு.....கிளிநொச்சிக்குப் போகவேணுமெல்லே....."

மனைவியின் முகத்தில் மகிழ்வோடு விழித்தார் செல்லையர்.

காலையில் மண்மீட்பு நிதி மீளளிப்பு வைபவம் கிளிநொச்சி நகரில் நடைபெற இருந்தது. போகவேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செல்லையர் செலுத்திய மண்மீட்பு நிதி, இன்று அவருக்கு மீளளிக்கப்பட இருந்தது.

அதைப் பெறுவதற்கு இன்று அவர் கிளிநொச்சிக்குப் போக வேண்டும். செல்லையர் சுறுசுறுப்படைந்தார்.

வன்னேரிக்குளம், கிளிநொச்சி நகரிலிருந்து முப்பது கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தாலும், பொருண்மியத் தடை ஏற்பட்ட பின்னர் போக்குவரத்துச் சேவை நின்றுபோய்விட்டது. - மிதிவண்டியில்தான் போகவேண்டும்.

செல்லையரிடம் நல்ல மிதிவண்டி கூட இல்லை. நாட்டு நிலைமை அமைதியாக இருந்த காலத்திலேயே சராசரி வாழ்க்கை வாழ்ந்தவர்தான். வயலிலும் தோட்டத்திலும் அயராது உழைத்தும் கூட, பற்றாக்குறை தொடரவே செய்தது. கடந்த நாலாண்டுகளுக்கு மேலாக அமுலிலிருக்கும் பொருண்மியத் தடை அவர்களது நிலையைப் பின்னடைய வைத்தன.

மண்ணெண்ணை விலை அதிகரிப்பு, உரத் தட்டுப்பாடு என விவசாயிகள் திண்டாடுகையில், செல்லையரும் அதற்கு விதிவிலக்கல்ல. செல்லையரின் வருவாய் வீழ்ச்சியடைந்த அதேவேளையில், கடன் சுமை அதிகரித்தது. பரமேஸ்வரியின் நகைகள் ஒவ்வொன்றாக விலைப்பட்டன. செல்லையர் அல்லும், பகலும் மண்ணைக் கிண்டி அயராது உழைத்தும், சிறந்த அறுவடை கிடைத்தும் கூட, இலாபமீட்ட முடியவில்லை. பொருட்கள் குதிரை விலை, யானை விலை என்றாகிவிட்ட நிலையில் அரை வயிறும், கால் வயிறுமாக அவர்களது வாழ்வு நகர்ந்தது. பிள்ளைகள் நால்வரும் மெலிந்து வாடிப்போயிருந்தார்கள். செல்லையரையும் அடிக்கடி மலேரியா போட்டு உலைத்தது. கொஞ்சம் கடுமையாக வேலை செய்தால், காய்ச்சல் மறுபடியும் வந்துவிடும். இரண்டு மூன்று கிழமைகள் வேலைவெட்டி செய்ய முடியாது.

இந்த நிலையில், குடும்ப நிலை தாழ்ந்து கொண்டிருந்தது. பரமேஸ்வரியின் தாலிக்கொடியும் அடைவில் போனது. வட்டியும் முதலுமாகப் பெறுமதி குறைந்து விட்டதாகவும், தாலிக் கொடியை விற்கப் போவதாகவும் சுந்தரம் முதலாளி தெரிவித்தார். பின்னர் செல்லையரும் பரமேஸ்வரியும் மனம் நொந்து போயினர்.

எப்படியும் தாலிக் கொடியை மீட்டு, தாலியைக் கொழுவி கழுத்தில் அணிய வேண்டும் என்ற பரமேஸ்வரியின் எண்ணம் நிறைவேறாமலே போய்விடுமோ என்று தவியாய்த் தவித்தார் செல்லையர்.

அவர்கள் திண்டாடிக் கொண்டிருந்த போதுதான், மண்மீட்பு நிதி மீளளிப்புப் பட்டியல் செய்தித்தாள்களில் வெளியானது. தமது பெயரைக் கண்டதும் செல்லையரும் பரமேஸ்வரியும் மகிழ்ச்சியில் பூரித்தனர்.

மண் மீட்புநிதியைச் செலுத்திய காலத்தில் செல்லையர் அரைமனதோடுதான் செலுத்தினார். ஆனால் இன்று இக்கட்டான ஒரு நேரத்தில் அந்தப் பணம் கிடைக்கப்போவதையிட்டு மகிழ்ந்தார்.

"உவங்கள் இந்தப் பணத்தைத் திருப்பித் தரமாட்டாங்கள். ஆக்களை ஏமாத்திக் காசு சேர்க்கிறாங்கள்" என்று அடித்துப் பேசியவர்தான் செல்லையர். ஆனால் அடுத்த ஆண்டே ஒரு தொகுதியினருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டபோது, இவரைப் போன்றவர்களின் வாயடைத்துப் போய்விட்டது. இதோ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செலுத்திய இவருக்கே இம்முறை மீளளிக்கப்படப் போகின்றது.

வன்னேரியிலிருந்து மீளளிப்புப் பெறத் தெரிவான இன்னொருவரான செல்லக்குட்டியும், செல்லையரும் சேர்ந்து அதிகாலையில் புறப்பட வேண்டும் என்பது நேற்றே போடப்பட்ட திட்டம்.

செல்லக்குட்டியை எதிர்பார்த்த வண்ணம் தேநீர் பருகினார் செல்லையர். பிள்ளைகளும் எழுந்து தேநீர் பருகினார்கள்.

"இஞ்சாருங்கோ.....! காசு எடுத்துக் கொண்டு வரயுக்கையே சுந்தரம் முதலாளியிட்டை தாலிக்கொடியை மீட்டுக் கொண்டு வாங்கோ...... தாலி இல்லாமல் திரிய எனக்கு ஒருமாதிரி இருக்கு" என்று ஆவலுடன் கூறினாள் பரமேஸ்வரி. அவளது தவிப்பு அவருக்குப் புரிந்தது.

"சரியப்பா......." என்று கூறிய செல்லையர், செல்லக்குட்டி வருகிறாரா என ஒழுங்கையை நோக்கினார். வெள்ளை வேட்டியும் சேட்டுமாகத் தூரத்தே மிதிவண்டியில் செல்லக்குட்டி வருவது தெரிந்தது.

"போட்டு வாறன்...... மாடுகளைப் பிணைச்சுப் போட்டு அவிழ்த்து விடு......"என்று கூறியபடி மிதிவண்டியில் ஏறினார் செல்லையர்.

"நேரம் போட்டுதோ?" என்றபடி செல்லக்குட்டியும் இணைந்து கொண்டார்.

செல்லையரும், செல்லக்குட்டியும் ஆரம்ப நாட்களில் போராட்டத்தையும், போராளிகளையும் கேலியோடு பார்த்தவர்கள்தான்.

"போராட்டம் எண்ணுறது சிறுபிள்ளை விளையாட்டே? மோட்டுப் பெடியள், அரசாங்கத்தோட, ஆமியோட மோதி வெல்ல முடியுமே......? எல்லாம் இரண்டொரு வருசத்திலை பிசுபிசுத்துப் போகும் பாருங்கோ".......என்று கூறியதுமுண்டு.

ஆனால் இன்றைய நிலையில் செல்லையர் போன்றவர்களும் மாறித்தான் போனார்கள். "என்னெண்டாலும் எங்கட பொடியளின்ர தியாகத்துக்கும், வீரத்துக்கும் முன்னால வரமோ?" செல்லக்குட்டி ஒருபடி மேலே போய் துணைப் படையிலேயும் இணைந்து விட்டார். "இது ஒரு இயக்கத்தின்ர போராட்டமில்லை.........! இனத்தின்ர போராட்டம்........ இந்த மக்கள் போராட்டத்திலை மக்கள் எல்லாம் பார்வையாளராக நில்லாமல், பங்காளராக வரவேணும்......" எனப் பிரசாரம் செய்து ஏனைய முதியவர்களையும் தூண்டினார்.

பனி மூட்டம் விலகி, சூரியக்கதிர்கள் உடலை எரிக்க ஆரம்பித்தது. "நேரம் பத்து மணியாகுது.......கெதியாக மிதியுங்கோ......" என்று நெற்றியில் வடியும் வியர்வையைக் கைவிரலால் துடைத்தபடி வேகமாக மிதித்தார் செல்லையர்.

அவர்கள் கிளிநொச்சியை அடைந்தபோது ஆஸ்ப்பத்திரியடியில் பரபரப்பாக இருந்தது. காயம் பட்ட பலரையும், இறந்த சிலரது உடல்களையும் ஏற்றிக் கொண்டு வாகனங்கள் வந்த வண்ணமிருந்தன.

"பரந்தன் பக்கமாக ஆமிக்காரர் முன்னேறப் பார்த்தவங்களாம். பொடியள் விடவில்லை. பொம்பரும், கெலியும் உதவிக்கு வந்தும் கூட, பொடியள் எதிர்த்து நின்று போராடி ஆமிக்காரரைப் பின்வாங்கச் செய்து போட்டாங்கள். எட்டு ஆமிக்காரரின்ர உடல்களையும், பெருமளவு ஆயுதங்களையும் மீட்டிருக்கிறாங்கள்......"

செல்லையரும், செல்லக்குட்டியும் கூட்டத்தோடு நின்று புதினம் பார்த்தனர். கேட்கக் கேட்க மெய்சிலிர்த்தது.

"விமானத்திலையிருந்து கண்டபடி குண்டுகள் போட்டதிலை பத்துச்சனம் செத்துப் போச்சு. முப்பது பேருக்கு மேல காயம் பட்டு ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டு வந்திருக்கு. பொடியள் அடிச்சு விரட்டியிருக்காட்டில் இப்ப 'ரவுண்' எல்லாம் எரிஞ்சு கொண்டிருந்திருக்கும்....."

கதைகளைக் கேட்ட செல்லையருக்குப் புல்லரித்தது.

> முதல்ல ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற இந்த மண்ணைத்தான் மீட்கவேணும். நான் மண்மீட்பு நிதியை மீளப் பெறப் போறதில்லை. அது அவங்களட்ட இருந்தால் எவ்வளவோ பிரயோசனப்படும்........

ஏதோ ஒரு உள்ளுணர்வு ஊந்தித் தள்ளவே இருவரும் ஒரு முடிவுக்கு வந்தவர்களாய், பரந்தன் சென்று சிதைவுகளை அப்புறப்படுத்தி இறந்தவர்களின் உடல்களை எடுப்பதில் உதவி புரியப் புறப்பட்டனர்.

"பங்கர் வெட்டி வைச்சிருந்தால் இந்தச் சனம் தப்பியிருக்கலாம்....." என்று அங்கலாய்த்தார் செல்லக்குட்டி.

"பாவம்...... மோதலிலை ஐஞ்சு பொடியங்கள் செத்துப் போனாங்கள்...... ஆறேழு பேருக்குக் காயம்....... வாழுற வயதில இந்த மண்ணுக்காகத் தங்கட உயிரைக் கொடுத்திருக்கிறாங்கள்.......ம் நாங்களும் இருந்து என்ன பிரயோசனம்......." என்றார் செல்லையர்.

"ஓமோம்....... பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல், ஓர் இலட்சியத்திற்காகத் தமது சுகபோக வாழ்க்கையைத் துறந்து, இந்த மண்ணின் விடுதலைக்காக இறந்து போன இந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள்......." செல்லக்குட்டியும் அவரது கூற்றை ஆமோதித்தார்.

சிதைந்து போன பங்கர்களையும், காப்பரண்களையும் மீள அமைப்பதற்காகசு சிலர் இளைஞர்களோடு சென்றபோது இவர்கள் இருவரும் இணைந்து கொண்டனர். இராணுவத்தினரின் காப்பரண்களுக்குச் சற்றே தொலைவில் சென்று வேலை செய்தபோது செல்லையருக்குப் பயம் சிறிதும் இருக்கவில்லை.

மறுநாள் மாலையில்தான் வன்னேரிக் குளத்திற்குத் திரும்ப முடிந்தது. "உங்களைக் காணயில்லை எண்டு பயந்து போனன்" என்று மகிழ்வோடு அவரை வரவேற்றாள் பரமேஸ்வரி.



தேநீரை அவரிடம் கொடுத்துவிட்டு, "மீட்பு நிதி எடுத்தனீங்களோ? தாலிக்கொடியை மீட்டாச்சோ?" என்று கேட்ட பரமேஸ்வரி மீது எரிந்து விழுந்தார் செல்லையர்.

"அதுக்கென்ன இப்ப அவசரம்? முதல்ல ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற இந்த மண்ணைத்தான் மீட்கவேணும். நான் மண்மீட்பு நிதியை மீளப் பெறப் போறதில்லை. அது அவங்களட்ட இருந்தால் எவ்வளவோ பிரயோசனப்படும்....... உனக்குத் தாலி வேணுமெண்டால் மஞ்சள் கயிற்றிலை கோர்த்துக்கட்டு......"

செல்லையரை ஆச்சரியத்தோடு பார்த்தாள், பரமேஸ்வரி. அவர் கூற்றில் ஆழமான அர்த்தமிருப்பதை அவள் புரிய வெகுநேரம் எடுக்கவில்லை. ✤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெதர்லாந்தில் சித்திரை மாலை

**18.05.96** நெதர்லாந்தில் Oudenbosch நகரில் செஞ்சோலை வளர்ச்சி நிதிக்காக சித்திரை மாலை நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடை பெற்றது. தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட சகல நடன நிகழ்ச்சிகளும், குறிப்பாக இசைக் குழுவினர் வழங்கிய இசை நிகழ்ச்சி மக்களின் அமோக பாராட்டைப் பெற்றது. இந் நிகழ்ச்சியின் போது Wouw (வொவ்) நகரைச் சேர்ந்த ஒருவர் தனது மகனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை தவிர்த்து அதற்குச் செலவாகும் பணத்தை செஞ்சோலை வளர்ச்சி நிதிக்காக வழங்கினார். இம் முன்மாதிரியான செயலை மற்றவர்களும் கடைப்பிடிப்பது வரவேற்கத்தக்கது.. ✷





சோலைச் செல்வங்கள் சிரிக்க வழி செய்வோம்!
எதிர்காலச் சிற்பிகளை உருவாக்க உதவுவோம்!

செஞ்சோலை காந்தருபன் அறிவுச்சோலை
யேர்மனிக்கிளை நடாத்தும்

**சோலைக்கலைமாலை**

இடம்: Der Kursaal
Konigsplatz 1
70372 Bad Cannstadt

காலம் : 22.06.1996 (சனிக்கிழமை)
17:00 மணி

**மலரும் கலைப்பூக்கள்**
கலைபண்பாட்டுக்கழக தமிழீழம் இசைக்குழுவின் பின்னணி இசையில்
பிஞ்சுக்கலைஞர்களின்
**தளிர் இசைத்தாலாட்டு**

கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை நடனக் கலைஞர்களின்
**விடுதலை வெளிப்பாடு**
**சுதந்திரக்கனல் நடனங்கள்**

கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை வழங்கும்
**விலங்கை உடைத்த விலங்கு**
**இசைக்கோல நடனம்**

அனைத்துத் தமிழ் மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
செஞ்சோலை காந்தருபன் அறிவுச்சோலை
யேர்மனிக்கிளை


# பல்லி சொன்னது...

வாகனம் வரும். விரும்பியவர்கள் வ்ரலாம். இலவசமாக வன்னியில் கொண்டுபோய் விடப்படும். பின்னர் படிப்படியாகக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படும் எனக்கூறி அமர்ந்துகொண்டார். வேறு கேள்விகளுக்கே இடம் இல்லை. கூட்டம் நிறைவு பெற்றது. முதலாவது ஆளாக நான் போகவேண்டும் என்ற ஆவலில் முகாமை நோக்கி அவசரம் அவசரமாக நடந்தேன்.

"என்னவாம் அப்பா" என வாசலில் நின்று வரவேற்றவாறு மனைவி கேட்டாள். இலவசமாக வன்னியிற் கொண்டுபோய் விடுகினமாம். அத்தோட குடி இருக்க வசதியும் செய்யினம் எண்டு சொல்லி இருக்கினம். வெளிக்கிடு கெதியாய் 7 மணிக்கு எங்கட முகாமுக்கு வாகனம் வரும். தினேசையும் பக்கத்தில உள்ள பாடசாலையில சேர்த்திடலாம். பல்லி சொன்னது நல்ல விசயத்துக்குத்தானப்பா என எனது பேச்சைக்கேட்டுக் கொண்டு இருந்த தினேஸ் "அம்மா கெதியாய் வெளிக்கிடணை" எனத் தாயை அவசரப்படுத்தினான். பக்கங்களில் இருந்த குடிசைகளிலும் ஒரே பரபரப்பு. மகிழ்ச்சிவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. எதிர்காலக் கற்பனைகளுடனும், எதிர்பார்ப்புகளுடனும் எங்கள் பயணம் ஆரம்பமானது. ✤

# இமாலயப் பொய்யும்...

முன்னணி அரசின் தீர்வுத் திட்டமெனும் விமானத்தை, எதிர்ப்பு எனும் தனது ஏவுகணை மூலம் ஐ.தே.கட்சி சுட்டு வீழ்த்தி விட்டது?". எனவே, எம்மக்கள் மத்தியில் சில கேள்விகள் இப்போது எழுகின்றன. மகாசங்கமும் ஐ.தே.கட்சியும் ஆதரவு தரமுடியாதபோது, எதற்கு அந்த ஏமாற்று வித்தை? ஒற்றையாட்சிமுறை மாற்றப்பட முடியாததாயின் எதற்கு அதிகாரப் பரவலாக்கம்? தமிழர் தாயகம் என்றொன்று இல்லையானால் எதற்கு அலகு பற்றிய அலட்டல்? எனவே, இறுதியானதும் தீர்க்கமானதுமான கேள்வி எழுகின்றது. எதற்கு இந்தப் போர்?

"இந்தப் போர், தமிழின அழிப்பை இலக்காகக்கொண்ட போர். சிங்களப் பேரினவாதத்தின் இந்த இனப்போர் நீண்ட நெடுங்காலமாக, புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்னிருந்தே நிகழ்ந்து வருகின்றது" என, விடையைத் தலைவர் அவர்கள் கூறிவிட்டார். இப்போது இம் மக்கள் மிகத் தெளிவாக மனங்கொள்ள வேண்டிய செய்தி இதுதான்: இனிமேல் நடக்கப்போகும் போர், இனப்படுகொலை (Genocide) எனும் – சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்பின் இறுதி வடிவமாகும். இந்த இனப்படுகொலை உணர்வே, நீறுபூத்த நெருப்பாக–வரலாற்றில் புதைந்து நிற்கும் வன்மமாக– இனக்கலவரங்களின் போதும் படுகொலை நிகழ்வுகளின் போதும் வெளிப்பட்டது. இப்போதும் மீண்டும் குமாரபுரத்தில், சாளம்பைக்குளத்தில், நாச்சிக்குடாவில் இவ்வுணர்வு உயிர்ப்பிக்கப்படுகின்றது. எனவே, அம்மையாரும் தேரர்களும் "பணிந்துபோ அல்லது அழிந்துபோ" எனக் கூறத் தொடங்கிவிட்டனர். இத்தகைய நிலைமைகளின்போதே, ஜேர்மனியில் 60 இலட்சம், றுவண்டாவில் 10இலட்சம், பொஸ்னியாவில் 3இலட்சம், திமோரில் இன்னும் தொடரும் பல இலட்சம் மக்கள் இனப்படுகொலையாகினர். ஆனால், இவ்வாறு படுகொலையான யூதர்கட்கும், துட்சிகளுக்கும், முஸ்லிம்கட்கும், திமோரியருக்கும், தமிழீழத் தமிழர்களுக்கும் இடையே பெருவேறுபாடுண்டு: அதுதான், இத்தகைய படுகொலையைத் தடுக்கும் வாய்ப்பு – தமிழ் மக்களுக்கு வாய்த்திருக்கும் வல்லமை – அந்த வல்லமை தமிழ்த் தேசியத்தின் படையணி என நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால், அந்தப் படையணியைக் கட்டியெழுப்பி, எம்மின அழிவைத் தடுக்க வேண்டிய பொறுப்பை, எம்மக்கள் மீது வரலாறு சுமத்தியிருப்பதை, நாம் சொல்லித்தான் ஆகவேண்டும்! ✤

# நெஞ்சை விட்டகலாத.....

வேணும். எந்த அகாலவேளையும் ஐஸ்கிறீம் என்றால் சப்புக்கொட்டுகின்ற உன்னோடு எப்போது சென்றாலும் ஐஸ்கிறீம் கிடைக்கும்.

அவை எனது கடைசிக் காலங்கள்.

"என்னைச் சண்டைக்கு விடுங்கோ" என்று பொறுப்பாளரை நச்சரித்து உனது ஆசை நிறைவேறியபோது நீ எப்படிப் பூரித்துப் போனாய்!

வலிகாமச் சண்டைக்கு நீ பாதை காட்டியாகப் போனாய். அந்தக் குச்சொழுங்கைகள், தார்படிந்த கறுப்பு வீதிகள் உனது கால்பட்டவை. வெயிலிலும் மழையிலும் நீ நின்ற இடங்கள் உனக்குத் தண்ணீர் பட்டபாடு. நீ நின்ற இடங்களிலேயே உனக்கு சண்டைக்கான களங்கள் அமைந்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

அன்றைய தினம் நீ வேவு எடுப்பதற்கென முன்னே சென்றாய். சிறிது நாட்களுக்கு முன்னர், நீ மிதிவண்டியில் ஓடித் திரிந்த அந்த இடங்களில் எதிரியின் கண்படாதவாறு ஊர்ந்து செல்வது உன்னை நிச்சயம் வலிக்கச் செய்திருக்கும். அந்த வலியையே ஆவேசமாக்கி நீ சென்றிருப்பாய் என்பது எங்களுக்குத் தெரியும். உனது கடைசிமூச்சும் மிகுந்த உக்கிரத்தோடுதான் பிரிந்திருக்கும். அந்த உக்கிரமான நெருப்பு எம்மக்களைப் பற்றிக்கொள்ளும் என்ற எங்கள் நம்பிக்கையுடன் அவர்களிலிருந்து இன்னும் தமிழினிகள் வருவார்கள். ✤

# அதிரடிப்படையின்...

ஏ. எம். யூ. செனிவிரட்ணாவின் படையினர், 180 தமிழர்களைக் கைது செய்து கொண்டு சென்று – கொலை செய்தனர்.

வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் இருந்து காணாமற்போனோர் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அன்றிருந்த எயர் மார்சல் வோல்ரர் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "31 பேர் மட்டுமே விசாரணைக்காக அங்கு கைது செய்யப்பட்டனர். அவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்" எனக் கூறியுள்ளார்.

யதார்த்தம் எப்படி இருக்கின்றது எனக் கற்பனை செய்து பாருங்கள்! பிரிகேடியர் கருணாதிலக செய்த படுகொலைகளை அறிய வேண்டும் என்று, மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா விரும்பவில்லை. தனது கேணல்களும் மேஜர்களும் செய்யும் படுகொலைகள் பற்றி பிரிகேடியர் ஏ. எம். யூ செனிவிரட்ணா, அறிந்து கொள்ள விரும்பவில்லை. மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா என்ன செய்கிறார் என்பது பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அறிந்து கொள்ள விரும்பவில்லை. சிறிலங்கா இராணுவத்தின் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள, இவை நன்கு துணை செய்யும்.

கிழக்கிலுள்ள தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு 1990 களில், இராணுவத்திற்குக் கட்டளைகள் அனுப்பப்பட்டன. படையை விட்டு விலகு வோரிடமிருந்து வரும் கட்டுரைகள் – மற்றும் புத்தகங்களிலிருந்து, மேற்குறித்த கட்டளைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ✤

எதிரி
ஈவிரக்கமற்றவன். போர்வெறி
கொண்டவன். எமது
தாயகத்தைச் சிதைத்து எமது
இனத்தை
அழித்துவிடுவதையே
இலட்சியமாகக் கொண்டவன்.
அவனது இதயக் கதவுகள்
திறந்து எமக்கு நீதி
கிடைக்குமென நாம்
எதிர்பார்க்க முடியாது.

**தேசியத்தலைவர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலம்பெயர்ந்து வாழும் தமிழீழத்தவர்களின் ஒருமைப்பாட்டின் வெளிப்பாடே

## "தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா - 96"



வெற்றிக் கிண்ணத்துடன் யாழ். இந்துக்கல்லூரி அணி

27-05-96 Wadham Lodge Sports Centre, Walthamstow, இலண்டனில், ஐக்கிய தமிழர் அமைப்பின் (U.T.O) துடுப்பெடுத்தாட்ட போட்டி ஒழுங்கமைப்புக் குழுவினால் நடாத்தப்பட்ட, "தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா"வில் 20 தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் பங்கெடுத்து விழாவினை சிறப்பித்துள்ளன. இதன் மூலம் தமிழீழ சமூகத்திற்கு, எமது பழைய மாணவர் சங்கங்கள் தேடிக் கொடுத்த நன்மைகள் பல.

"விளையாட்டில் அரசியலைக் கலக்கக் கூடாது" என்று இதுவரை கூறப்பட்டு வந்த மாயை, இதன்மூலம் உடைத்தெறியப்பட்டுள்ளது. சிறிலங்காவின் பழைய மாணவர் சங்கங்களினால் (FOC) நடாத்தப்பட்ட துடுப்பெடுத்தாட்ட விழாவை, அதில் முன்பு பங்குபற்றிய அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளும் புறக்கணித்துள்ளன. FOC யினால் நடாத்தப்படும் துடுப்பெடுத்தாட்டப் போட்டியைப் பயன்படுத்தி, தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நண்பர்களாக – ஒற்றுமையாக வாழ்கிறார்கள், ஒருசில பயங்கரவாதிகள் மட்டுமே ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் எனச் சிறிலங்கா அரசு, அனைத்துலக மத்தியில் செய்துவந்த பிரச்சாரம், தமிழ்ப் பாடசாலைகளின் இத்தகைய புறக்கணிப்பால் பொய்யாக்கப்பட்டுள்ளமை முக்கியமானதொரு வரலாற்றுப் பதிவாகியுள்ளது.

அது மட்டுமல்ல, எமது போட்டி ஒழுங்கமைப்புக் குழுவின் அழைப்பையேற்று, 20 முன்னணிப் பாடசாலைகளின் பழைய மாணவ சங்கங்கள் துடுப்பெடுத்தாட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள, 6 தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவிகள் வலைப் பந்தாட்டப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். இவ் விளையாட்டு விழாவைக் காண சீரற்ற காலநிலையிலும் 5000 க்கும் அதிகமான தமிழ் மக்கள் வருகை தந்துள்ளார்கள். இதனால் இத் துடுப்பெடுத்தாட்ட விழா, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் ஒற்றுமைக்கான அத்திவாரமாகவும் சிறப்புப் பெற்றது. இச் சிறப்புகளுக்கெல்லாம் மூல காரணமாக இருந்த தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களை, தமிழீழ மக்கள் சார்பிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் சார்பிலும் ஐக்கிய தமிழர் அமைப்பு பாராட்டுவதோடு, தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றது.

துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும், பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டன. இக் கல்லூரிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் எமது விசேட பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்விழாவின் சிறப்பம்சமாக, உலகப் புகழ் பெற்ற துடுப்பாட்ட வீரர் Sir Garfield Sobers அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தையும் பரிசில்களையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எமது குறுகிய கால அழைப்புக்கு பெரும் மதிப்புக் கொடுத்து, பிரமத விருந்தினராகக் கலந்து கொண்ட Sobers அவர்களை எமது தமிழ்ச் சமூகம் என்றென்றும் மறக்காது. இவருக்கும் எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துடுப்பெடுத்தாட்டத்தின் சிறப்பு கண்காட்சி விளையாட்டாக (Exhibition Match) தமிழீழ அனைத்துலக துடுப்பெடுத்தாட்ட வீரர்களுக்கும், புகழ்பெற்ற அனைத்துலக விளையாட்டு வீரர்களுக்கும் இடையில் நடைபெற்ற துடுப்பெடுத்தாட்டப் போட்டி இடம்பெற்றுள்ளது. அனைவரது பாராட்டுதலையும் பெற்ற இப்போட்டியில் பங்கெடுத்துக் கொண்ட அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

விளையாட்டு விழாவில் பங்கெடுத்துக் கொண்ட 20 பாடசாலைகளுக்குமான கூடாரங்களுக்கிடையில் நடைபெற்ற அலங்காரப் போட்டியில், உரும்பிராய் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இப்போட்டிக்கு மேற்பார்வை நடுவராகக் கலந்துகொண்ட உலகப் புகழ் பெற்ற மேற்கிந்திய முன்னாள் 'விக்கெட்' காப்பாளரான Derek Murray அவர்களுக்கும் எமது சிறப்பு நன்றிகள்.

இத்தகைய தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழாவை ஒழுங்கு செய்வதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எமது நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்துவரும் காலங்களில் இவ் விழா மேன்மேலும் சிறப்பாக நடைபெற வேண்டுமெனவும் வாழ்த்துகிறோம். ✤



வெற்றிக்கிண்ணத்தை பிரதம விருந்தினரிடமிருந்து பெறும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி.



இறுதியாட்டத்தில் பங்கெடுத்த யாழ்.மத்திய கல்லூரி அணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கடல்மீது உலா வந்த பகையோடு மோதி - இவர்கள் களம்மீது வீழ்ந்தார்கள் உயிர்ப்பூவை ஊதி

30.03.96 அன்று வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையுடனான தாக்குதலில் வீரச்சாவடைந்த புலிகளுக்கு

## வீரவணக்கம்



லெப்.கேணல் எழில்வண்ணன்/தனேஸ்



கடற்கரும்புலி மேஜர் ஜெகநாதன்



கடற்கரும்புலி கப்டன் இளையவள்



லெப்.கேணல் நிமல்



மேஜர் செம்மலை



மேஜர் மன்னவன்



மேஜர் கனியன்



மேஜர்.மோகன்



மேஜர் மலர்மொழி



கப்டன் மிதுனன்



கப்டன் கரன்



கப்டன் நல்லவன்



கப்டன் கனகா



கப்டன் திருமாறன்



கப்டன் இராவணன்



லெப்.செல்வக்குமார்



லெப்.பிருந்தா



லெப்.சித்தா



லெப்.எழுமதி



லெப்.குமுதினி



லெப்.மகேஸ்வரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்